[illegible]

6

ஜூன், 1934


72
m211,N23TG
N34.5-6
208536

MADRAS

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

# ஜீவ ரகசியம்

என்ற அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்து விட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப்பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட்டிருப்பதால் இதற்கு 'ஜீவரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர்களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மையெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை—தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட்டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம் சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள்களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

**இதன் விலை ரூபா 1.**

**தபால் சார்ஜ் வேறு.**

**'தமிழரசு' புத்தகாலயம்,**

**31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.**



# சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு 1/8 படி பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கை கால் பிடிப்பு, உடம்புவலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு



முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினார். அவர் வார்த்தைக் கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரினுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

| | |
|---|---|
| சென்னை<br>15—5—30 | இப்படிக்கு.<br>அண்ணாவையங்கார். |

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் எனக்குக் கொடுத்த சகல மேக சித்தாதி எண்ணெயை இரண்டு நாள் சாப்பிட்டேன். என் முழங்கால் வீக்கமும் பிடிப்பும் நீங்கிவிட்டது. இடுப்பு வலியும் போய்விட்டது. வயிற்றில் சப்தித்துக்கொண்டிருந்த வாய்வும் நீங்கிவிட்டது. இன்னும் ஒரு வேளை எண்ணெயைக் கையிருப்பாக வைத்திருக்கிறேன். இந்த லெட்டர் கொண்டுவரும் பிராம்மண விதவை மிகவும் ஏழை. கால் குடைச்சலினால் அனேக நாளாய்க் கஷ்டப்படுகிறாள். கிருபை கூர்ந்து ஒரு ரூபா வாங்கிக்கொண்டு இரண்டு வேளை எண்ணெய் கொடுத்தனுப்பவும். நான் தங்களை வந்து பார்க்கிறேன்.

இப்படிக்கு,

ஸ்ரீமான் ஸ்ரீ சீனிவாச ஐயங்கார்,

சைவ முத்தையா முதலி வீதி, சென்னை.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

சகல மேக சித்தாதி எண்ணெய்

புட்டி 1-க்கு விலை ரூபா 5.



## அயத்தங்க திராவகம்

நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எனும் புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.



இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

## சில அபிப்பிராயங்கள்

அன்புள்ள மாசிலா திலக!

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அனுபவ வைத்தியனாதலால் விலை குறைவு செய்து அனுப்பினால் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் ஏஜண்டுமானாலு மாவேனாதலால் அதை யனுசரித்த அனைடஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S V. அக்னீஸ்வரன்.

ஐயா!

தாங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்தங்க திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினால் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கும் அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்

20—6—30, கண்ணபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்.

**நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணா 12**

தபால் கூலி பிரத்தியேகம்.

**வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.**

# கூழ்ப்பாண்ட லேகியம்




இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கியகுணம். எலும்புருக்கி



நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும், சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தாக்கூடியது.

## சில அபிப்பிராயங்கள்

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, கூழ்ப்பாண்ட லேகியம், மீன் எண்ணெயைக் காட்டிலும் குணம் செய்கின்றது. கணச்சூட்டுக்கு மேன்மையாய்த் தெரிகின்றது. க்ஷயரோகம் வராதபடி தடுக்கவும் மேலானதாய்க் காணப்படுகின்றது. மலச்சிக்கல் நீங்குகின்றது. ஆனபடியால் எங்கள் எல்லா ஷாப்புக்கும் மாதா மாதம் 10 பவுன் அனுப்பவும். இந்த லெட்டர் கொண்டுவரும் ஆள்வசம் 3 வீசை கூழ்ப்பாண்ட லேகியம் கொடுத்தனுப்பவும்.

M. C. நஞ்சுண்டராவ். B. A., M B. & C. M. மைலாப்பூர்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கும் ஜில்லா முனிசீப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினால்தான் என் குழந்தை பெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A., B. L.,
District Munsiff, Tanuku.

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, 2 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. யில் அனுப்பவும். இப்போது என் மனைவியின் தேக காந்தம் குறைந்திருக்கின்றது. அத்துடன் சிவப்பிரகாச பற்பொடி 1 டசன் அனுப்பவும்.

வியாசராவ் M. A., B. L., District Munsiff, Bellary.

**ஒரு பவுன் விலை ரூபா 2.**

**கிடைக்குமிடம்:—**

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,**
**31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.**

# ‘தமிழரசு’

## பைண்டு வால்யம்

‘தமிழர’சின் 4-வது மலர் அதாவது 1933-வது வருஷத்திய இதழ்கள் பன்னிரண்டையும் பல அன்பர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரே வால்யமாகப் பைண்டு செய்திருக்கிறோம். இந்த வால்யத்தில் சுமார் 300 அரிய கட்டுரைகளும், 500 அழகிய படங்களும் அடங்கியிருக்கின்றன.

பத்திரிகை உலகில் பண்பட்ட அறிஞர்களால் எழுதப்பட்ட அறிவை வளர்க்கும் வியாசங்கள், கற்பனைச் சிறு கதைகள், உண்மையான சரிதைகள், விடா நகைப்பை விளைவிக்கும் விகடங்கள், சமூக பொருளாதார அரசியல் சம்பந்தமான கட்டுரைகள், வைத்தியக் குறிப்புக்கள் முதலியன நிறைந்திருக்கின்றன. இந்தப் பைண்டு வால்யம் இல்லாத புத்தகசாலை நிறைவுடையதாகாது.

4-வது மலர் வால்யம் விலை ரூ. 1—4—0

தபாற் செலவு வேறு

சொற்ப வால்யங்களே தயாராக இருப்பதால் முந்திக் கொள்ளுங்கள்.

விலாசம்:

**‘தமிழரசு’ புத்தகாலயம்,**

**31. வைத்தியநாத முதலி வீதி, சென்னை.**



அன்பே ஆண்டவன்

# தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

‘ எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...’

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

| மலர் | பவ௵ ஆனி௴ 1௳ | இதழ் |
| --- | --- | --- |
| 5 | 1934௵ ஜூன்௴ 14௳ | 6 |


## பொருளடக்கம்



ஆசிரியர் குறிப்புகள் ... 400
வெள்ளிமலை வரலாறு ... 403
கிருஷ்ண லீலா ... 405
வெளி விகடம் ... 413
தந்தையை அலக்ஷியம் செய்தால் 415
சிறுவர் விருந்து ... 420
இங்கர்சாலின் பொன்னுரைகள் 427
நாகராஜனின் ஜாதிப் பிரஷ்டம் 431
‘யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்’ ... 438
போலித் தேசாபிமானிகள் ... 447
விநோத பிரமசரிய நாடகம் ... 449
தமிழ்த் தாய் ... 458
அசட்டுக் கேள்விகள் ... 461
இந்திரா ... 463
இது நியாயமா ? ... 469
ஆசை ... 473
கவி பாடுந் திறம் கருவிலமைப்பு ... 474



குறிப்பு:— ‘தமிழரசி’ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவையாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாக மாட்டார்.




## தாய்மொழி வாயிலாகக் கல்வி போதனை

பாடசாலைகளில் ஆங்கிலம் ஒழிந்த மற்ற எல்லாப் பாடங்களையும் தாய் மொழி வாயிலாகவே போதிக்க வேண்டுமென்பது நீண்ட கால வேட்கையாகும். சென்னை மாகாணத்தில் ஸ்கூல் பைனல் வகுப்பு வரையில் ஆங்கிலந் தவிர இதர பாடங்களை எல்லாம் தாய் மொழி மூலமாகவே கற்பிக்கலாமென்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்விதி இன்னும் வற்புறுத்தப்பட்டு எல்லா இடங்களிலும் நடவடிக்கையில் கொண்டு வரப் படவில்லை. இது சமயம் பஞ்சாப் சர்வ கலாசாலையாரும் தாய் மொழி வாயிலாகக் கல்வி கற்பிக்க வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்து ஒரு தீர்மானம் செய்திருக்கிறார்கள். 1937-ஆம் ஆண்டு முதல் மெற்றிகுலேஷன், ஸ்கூல் பைனல் பரீட்சைகளில் ஆங்கிலம் தவிர மற்ற பாடங்களில் மாணவர்கள் தங்கள் விருப்பம் போல் தாய் மொழியில் விடை எழுதலாமென்றும், அவர்களுக்கு அப் பாடங்களைத் தாய் மொழியிலேயே போதிக்கலாமென்றும் அத் தீர்மானம் தெரிவிக்கிறது. அத் தீர்மானத்தை நாம் பாராட்டுகிறோம். ஆனால் வெறும் தீர்மானங்களை மட்டும் சர்வ கலாசாலைகள் செய்வதால் பயன் விளையாது. தீர்மானங்களை நடவடிக்கையில் கொண்டு வர வேலை செய்ய வேண்டுவது அவசியமாகும். இத் தீர்மானம் நிறைவேற வேண்டுமானால் தாய் மொழியில் இதர பாடங்கள் சம்பந்தமான சிறந்த புத்தகங்கள் வெளி வர விரைவில் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போதுதான் தாய் மொழி வழியாகக் கல்வி கற்பித்தல் என்பது இனிது நிறைவேறும். இவ்வழியில் சர்வ கலாசாலைகள் உடனே கவனம் செலுத்த முன் வர வேண்டும்.

208536

## 'வரவர மாமி கழுதைபோலானாள்'

ஆங்கில அரசாங்கத்தார் இந்தியாவுக்கு அதிக அன்போடு அளித்துள்ள வாய்ப்பிரசாதமான வெள்ளை அறிக்கை என்னும் அரசியல் சீர்திருத்த அறிக்கை மிகமிகப் பிற்போக்கானதென்றும், அது இந்திய மக்களின் குறைகளைக் கொஞ்சமும் தீர்க்காதென்றும் இந்தியத் தலைவர்கள் பலரும் பகிரங்கமாகக் கூறி எதிர்த்து வருகிறார்கள்.



ஆனால் அந்த அறிக்கையின்படியேனும் அரசியல் அமையுமா என்று கவனித்தால், அது வரவர பல மாறுபாடுகளை அடைந்து முடிவில் ஒன்றுக்கும் உதவாததாக அமையுமென்றே இப்போது இங்கிலாந்தில் நிகழ்ந்து வரும் விஷயங்களிலிருந்து விளங்குகிறது. இது 'வரவர மாமி கழுதைபோலானாள்' என்ற கதைபோலிருக்கிறது. இந்தியத் தலைவர்கள், அந்த அறிக்கை இந்தியாவுக்குத் திருப்தியை அளிக்காது என்று எதிர்ப்பது ஒருபுறமிருக்க, இங்கிலாந்திலுள்ள பிற்போக்காளர்களோ, அந்த அறிக்கையின்படி ஒரு அரசியலை இந்தியாவுக்கு அளித்துவிட்டால் அதனாலேயே இங்கிலாந்து இந்தியாவை இழந்ததுபோலாகி விடுமென்றும், ஆதலால் இன்னும் பல திகாரங்களைக் குறைத்தும், பாதுகாப்புகளை ஏற்படுத்தியுமே அரசியலை அமைக்கவேண்டுமென்றும் வற்புறுத்துகின்றனர். இதனால் அந்த அறிக்கையைப்பற்றி ஆராய ஏற்பட்ட கூட்டுக் கமிட்டியின் அறிக்கை வெளியாக வீண் தாமதமாவதோடு வெள்ளை அறிக்கையின் சீர்திருத்தம் மேலும் குறைக்கப்படுவதற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டு வருகிறதென்றும் தெரிகிறது. இந்த நிலைமையில் இந்திய மக்கள் அனைவரும் ஏகமனதாக அந்தப் பயனற்ற வெள்ளை அறிக்கையை எதிர்ப்பதில் ஒற்றுமைப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். அந்த அறிக்கையை எதிர்க்கவே காங்கிரஸ்காரர்கள் இந்தியா சட்ட சபைக்குச் செல்கிறார்களாதலால் அவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டியது இந்திய மக்களுடைய தலைமையான கடமையாகுமென்று நாம் வற்புறுத்துகிறோம்.

## யாகக் கொலைகள்!

சமீபத்திலே கும்பகோணத்தில் 'வாஜபேய யாகம்' என்னும் பெயரால் முப்பத்திரண்டு ஆடுகளை வைதிக பிராமணர்கள் சித்திரவதை செய்த செய்தியை நேயர்கள் அறிந்திருக்கலாம். கும்பகோணத்தைப் பின்பற்றி வேறு சில இடங்களிலும் யாகக் கொலைகள் ...ட்ய வைதீகப் பிச்சுகள் முயன்று வருவதாக அறிந்து வருந்து...றும். இந்தக் கொலைத் தொழிலான யாகங்கள் தரும...மாணார்த்தமாகச் செய்யப் படுகின்றன வென்றும், யாகத்திற்காக உயிர் விடுவதால் ஆடுகள் மோட்சத்திற்குச் செல்கின்றன வென்றும், இந்த யாகங்கள் புரிவது வேதங்களுக்கு உடன்பாடென்றும் வைதீகர்கள் சமாதானம் சொல்லி வருகிறார்கள். அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சி உண்மையும் பெருகி வரும் இக் காலத்தில் இந்தச் சமாதானங்கள் செல்லா வென்றும், வைதீகர்களின் கூற்று மிகவும் அவமதிக்கத் தக்கதென்றும், நாம் கூற வேண்டியதில்லை. தமிழ் மக்கள் இந்தக் காட்டுமிராண்டி வழக்கத்திற்கு—மிலேச்ச வழக்கத்திற்கு இடங் கொடுக்காமல் அழுத்தமாய் அங்கங்கே கண்டிப்பார்களென்பதில் ஐயமில்லை. பொது மக்களும், தென்

னிந்திய ஜீவரட்சா பிரசார சபை போன்ற ஸ்தாபனங்களும் இந்தக் கொடிய செயலை எதிர்த்து வரும்போது அரசாங்கத்தார் இதற்கு ஆதரவு காட்டி வருவது மானக் கேடாகும்.

## சிறுவர் புகைக்குடித் தடை

நமது நாட்டில் பழங்காலத்தில் புகைக்குடி வழக்கம் இல்லை. இது நம் நாட்டிற்கு இறக்குமதியான புதிய சரக்குகளில் ஒன்று. புகைக் குடி வழக்க மெனும் கொடிய வழக்கம் நம் நாட்டில் இப்போது வெகு தீவிரமாய்ப் பரவி வருகிறது. சிறு கிராமங்களில் மாடு மேய்க்கும் சிறுவர்களுங்கூட சாதாரணமாய் பீடி பிடித்து வருகிறார்கள். இக்காரியத்தில் நகர வாசிகளின் அதி தீவிர முன்னேற்றத்தைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஆண்டவன் அளித்த அழகிய வாயைப் புகைப்போக்கி யாக்கிக் கொள்வது அறியாமையாகும். புகைக்குடிப் பழக்கம் உடலுக்கு ஊறு செய்வதோடு உயிருக்கும் உலை வைக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

சிறுவர்கள் சுருட்டு, பீடி, சிகரெட்டு முதலியவை பிடிப்பதைத் தடை செய்ய வேண்டுமென்னும் நன்னோக்கத்துடன் ஜனாப் அஹமத்ஷா என்பார் ஐக்கிய மாகாண சட்ட சபையில் ஒரு மசோதா கொண்டு வரப் போகிறார். இம் மசோதா சட்டமாக்கப் பட்டால் பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு யாரும் சுருட்டு, பீடி, சிகரெட்டுகளை விற்க முடியாது. மீறி விற்றால் தண்டனைக் குள்ளாக வேண்டும். இதே போன்ற சட்டமொன்று 1929-ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தில் நிறைவேற்றப்பட் டிருக்கிறது. புகைக்குடி சகஜமா யிருக்கும் வட இந்தியாவில் இத்தகைய தடை முயற்சிகள் நடைபெறுவது போற்றத் தக்கதாகும். ஜனாப் அஹமத்ஷாவைப் பின்பற்றிச் சென்னை சட்டசபை அங்கத்தினர்களும் ஏன் சிறுவர் புகைக் குடியைத் தடுக்க ஒரு மசோதாக் கொண்டுவந்து சட்டமாக்கக் கூடாதென்று கேட்கிறோம்.

## 'சுதந்திரம்'

சுதந்திர லட்சியத்தை உலகத்திற்கே முதலில் போதித்த பிரான்ஸின் குடியாட்சியி லிருக்கும் புதுவையி லிருந்து வெளிவந்துள்ள 'சுதந்திரம்' என்னும் புதிய மாதப்பத்திரிகை நம் பார்வைக்கு வரப் பெற்றோம். இப் பத்திரிகை புதுவையில் பொதுஜன சேவை புரிந்து வரும் அன்பர் வி. சுப்பையா அவர்களால் ஆரம்பிக்கப்பட் டிருப்பதறிந்து அகமகிழ்கின்றோம். திருவாளர் சுப்பையா அவர்கள் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், சீர்திருத்த வேட்கையும் வாய்ந்த இளைஞர்; சலியாத ஊழியர். அவரை ஆசிரியராகக் கொண்ட 'சுதந்தரம்' எல்லா வகைகளிலும் சிறப்புற்று விளங்குமென்பதில் ஐயமில்லை. 'சுதந்தரம்' சமூக சுதந்திரத்திற்கு உழைப்பதையே தனது முக்கிய லட்சியமாகக்கொண் டிருக்கிறது; தமிழ்மொழி வளர்ச்சிக்கும், தொழிலாளர் முன்னேற்றத்திற்கும் பாடுபடுவதைத் தனது சிறந்த நோக்கமாகப்பெற் றிருக்கிறது. இதுவரை வெளிவந்துள்ள முதல் மலரில் சுவாமி சுத்தானந்த பாரதியார் முதலிய சில அறிஞர்களின் கட்டுரைகள் மிளிர்கின்றன; பல்வேறு தலைப்புக்களில் பொருள்கள் உள்ளன; பத்திரிகையின் முகப்பில் இரண்டு வர்ணங்களில் அச்சிடப்பட்டுள்ள சுதந்திர தேவியின் படம் மனவெழுச்சியை உண்டாக்குகின்றது. உண்மையான ஊழியர் ஒருவரால் - ஊக்கம் வாய்ந்த இளைஞர் ஒருவரால் சிறந்த முறையில் தொடங்கப்பட் டுள்ள இந்தப் பத்திரிகையை ஆதரிப்பது தமிழர் ஒவ்வொருவரது கடமையாகும். வருட சந்தா ரூ. 1. தனிப் பிரதி அணா 1. விலாசம்:—'சுதந்தரம்' காரிய நிலையம், துய்ப்ளெக்ஸ் வீதி, புதுச்சேரி.

---

# வெள்ளிமலை வரலாறு

[மே. மா]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

மாலை 7½ மணி வரையில் திருப்புகழ் சாமியார் திருப்புகழ் பாராயணம் பாடி முடித்தபின் குகைக்குள்ளிருந்த நாங்கள் வெளிவந்து சாதம் வைக்கப்பட்ட கல்லினருகே சென்று சர்ச் லைட்டின் வெளிச்சத்தைக் கொண்டு பார்த்தபோது சாதம் வைக்கப்பட்ட இடத்தில் நன்றாக நாவினால் நக்கிச் சாப்பிட்ட அடையாளம் காணப்பட்டது. எனவே சின்னாவால் வைக்கப்பட்ட வெல்லம் கலந்த சாதத்தைச் சர்ப்பம் அல்லது கீரிப்பிள்ளை ஆகிய இவைகளில் ஏதாவதொன்று சாப்பிட்டிருக்கவேண்டும் என முடிவு செய்து கொண்டோம். இதனிடையில் என்னோடு வந்திருந்த ஆவிச்சி செட்டியார் அவர்கள் சின்னா என்பவர் பாறையில் சாதம் வைக்கும்போது இரண்டு கீரிப்பிள்ளைகள் அங்கு நடமாடிக்கொண் டிருப்பதைக் கண்டதாகத் தெரிவித்தார். ஒருசமயம் வைத்த சாதத்தைக் கீரிப்பிள்ளைகள் சாப்பிட்டிருக்கலாம். இதையே இவர்கள் சித்தர்கள் என நினைக்கலாம் என முடிவு செய்துகொண்டோம்.

திருப்புகழ் சாமியார் திருப்புகழ் பாடும்போது அப்பாட்டின் நயமும் வாத்தியத்தின் ஒலியின் சப்தமும் சர்ப்பங்களின் மனத்தைக் கவர்ந்து சாமிகள் பாடும் சமயத்தில் அவர் தொடையின் மீதும் பக்கத்திலும் பாடும் வரையில் அமர்ந்திருந்து பாடி முடிந்தபின் சென்றுவிடுவதாய்க் கேள்விப்பட்டேன். இதனையே அங்கு வந்து போகும் பக்தர்கள் கண்டதாய்க் கூறுகின்றனர். சித்தர்கள் அம்மலையில் வாசம் செய்வதாய்க் கூறப்பட்டாலும் அதன் உண்மை ஆராய்ச்சிக் குரியதாகும்.

நம்பிக்கையாளர்கள் எப்படி நினைத்தாலும் நமக்குக் கவலையில்லை. அறிவுடைய ஆராய்ச்சி மிகுந்த இந்தக் காலத்தில் முற்காலத்தைப்போல் கட்டுக்கதைகள் சொல்லி விடுவோமானால் உலகம் நகையாடும். எனவே மலையின் பிரபாவத்தில் எதும் நான் காணாததால் அது விஷயத்தை இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

அம்மலையில் ஒரு பெருமை இருக்கின்றது. அதனை ஒருவரும் மறுக்க இயலாது. அது யாதெனில் திருப்புகழ் பெரும் பக்தரும் திருப்புகழ் பாட்டை நன்றாய் மனப்பாடம் செய்தவரும் திருப்புகழை நன்றாகப் பாடக்கூடியவருமாகிய திருப்புகழ் சாமியார் அம்மலையில் வசிப்பதாகும்.

ஆதலால் பலர் அம்மலைக்குச் செல்லவும், மலையைத் தரிசிக்கவும் வெள்ளிமலை என்ற ஒரு மலை திருவலத்திற்கு அருகாமையில் இருக்கின்றது என்று தெரிந்துகொள்ளவும் என்னைப்போன்றோர் அங்குச் சென்று பார்த்து பத்திரிகையில் எழுதவும் அம்மலைக்கு ஏற்பட்டதை ஒப்ப வேண்டியதே.

---


## தேவை

தமிழ்ப்பேசும் படங்களில் நடிக்க ஆண் பெண் நடிகர்கள் தேவை. விண்ணப்பத்தில் வயது, கல்வி, உயரம், மார்பளவு முதலிய விவரங்களைக் குறிக்க வேண்டும். போட்டோ படங்களுடன் உடனே எழுதவும்.

ஆசிரியர்,

'தமிழரசு' சென்னை.


# கிருஷ்ண லீலா

## தமிழ்ப் பேசும் படம்

[பண்டித பா. பக்கிரிசுவாமி செட்டியார்]



படக்காட்சி உலகில் பெரும் மாறுதல் ஏற்பட்டு பேசும் படங்கள் வெளிவந்த பிறகு இந்தியாவில் பல பாஷைகளில் பேசும் படங்கள் தயாராகி வருகின்றன. இதுவரையில் இந்தியாவில் மௌனப் படங்களும், பேசும் படங்களுமாக எண்ணிறந்தன வெளி வந்திருந்தாலும் ஒன்றாவது மேல் நாட்டுப் படங்களுக்கு ஒத்ததாக இல்லை என்பதை எவரும் ஒப்புக்கொண்டு தானாக வேண்டும். இதற்கு முக்கிய காரணம் வெளிநாட்டார்க்குள்ள வசதிகள் இங்கில்லாததே என்று சொன்னாலும், நம் நாட்டில் படம் பிடிப்பவர்களுடைய கவனக் குறைவும், அவசர புத்தியும், அதிக ஆசையும் இதற்குப் பெரிதும் காரணங்களாகு மென்பதைச் சிறிதும் மறுக்க முடியாது.

இந்தியாவில் ஹிந்தி, உருது, தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகளில் பேசும் படங்கள் பல வெளிவந்திருப்பினும் தமிழ் மொழியில் சில படங்களே இதுகாறும் வெளிவந்திருக்கின்றன. அவைகள் அனைத்தும் அனேகமாகக் கீழே வருவனவாகும்.

1. அரிச்சந்திரா 2. காலவரிஷி (சாகர்) 3. காளிதாஸ் தமிழிலும், தெலுங்கிலும் 4. பாரிஜாத புஷ்பகாணம் 5. கோவலன் (இம்பீரியல்) 6. இராமாயணம் 7. பிரஹலாதா (ஈஸ்டு இந்தியா) 8. சாவித்திரி (மதன்) 9. நந்தனார் (நீயூ தியேட்டர்ஸ்) 10. வள்ளி கல்யாணம் (நேஷனல் மூவிடோன்) 11. வள்ளி திருமணம் (பயனீர்) 12. சக்குபாய் (அரோரா) 13. சீதா கல்யாணம் (பிரபாத்) 14. கிருஷ்ண லீலா (எஞ்சல் பிலிம்ஸ் கம்பெனி)

வெளிவந்துள்ள மேற்கண்ட தமிழ்ப் படங்கள் ஒன்றாவது எல்லாவழிகளிலும் சிறந்ததென்று சொல்லும் முறையில் இல்லையே என்று வருந்த வேண்டி யிருக்கிறது. வெளிவந்துள்ள படங்களில் சிலவற்றிற்கு நல்ல வசூலாயிற்றென்றும், பல்லாயிரக் கணக்கான மக்கள் போய்ப் பார்த்திருக்கிறார்களே என்றும் கூறினால் அதற்குக் காரணம் படங்கள் தமிழ்மொழியில் இருப்பதும், கதைகள் பழமை

யும், பழக்கமு முடையனவாய் இருப்பதும், பேச்சுக்களும் பாட்டுக் களும் சுமாராகக் கேட்கப்படுவதுமே யன்றி நடிகர்களின் நடிப்புத் திறமையாலல்ல வென்று உண்மையாய்ச் சொல்லித்தான் ஆக வேண்டும். மேற்கண்ட படங்களில் ஒன்றிரண்டு படக்காட்சிக் குரிய அம்சங்கள் சுமாராக அமையப்பெற்றிருந்தும் பாட்டுக்களும், பேச்சுக்களும் சரியாகக் கேட்கப்படாததால் மக்களின் ஆதரவை அதிகமாகப் பெறவில்லை. ஆகவே இப்போது பேசும் படங்களுக் கேற்பட்டுள்ள மதிப்பெல்லாம், பாஷையிலே, கதையிலே, பாட்டிலே ஒலி பரப்பும் கருவியிலே அடங்கி இருக்கிறதே ஒழிய நடிப்பிலில்லை அமைப்பிலில்லை என்று நன்கு விளங்குகின்றது.

இப்போது நமது பார்வையிலுள்ள படம் 'கிருஷ்ண லீலா' வாகும்.

## கிருஷ்ண லீலா

சேலம், ஏஞ்சல் பிலிம் கம்பெனியாரால் கல்கத்தா பயனீர் பிலிம்ஸ் என்னும் கம்பெனியில் தயாரிக்கப்பட்டது. டைரக்டர் திரு. பி. வி. ராவ். நடிகர்கள் ஸ்ரீமதிகள் பி. எஸ். சிவபாக்கியம், கே. எஸ். இராஜாம்பாள், திருவாளர்கள் சி. வி. வி. பந்துலு ஐயர், முத்து கிருஷ்ணன், ஜெயராம், சி. எஸ். சாமண்ணா முதலியவர்கள். கதை மிகவும் புராதனமும், பிரசித்தமும் வாய்ந்த கிருஷ்ணன் பிறப்பும், பால்ய லீலைகளுமாகும். இந்தப் பேசும் படம் 'கிருஷ்ண லீலா' என்னும் பெயரளவிலேயே மக்களை இழுக்கும் சக்தி வாய்ந்தது. இன்னும் இப்படம் எடுக்கப்பட்டுள்ள முறையானது பாமர மக்களுக்கு ஒரு விருந்தாக இருக்கிறது. சாதாரண ஜனங்களை எந்த வழியில் திருப்திபடுத்தலாமென்பதை இந்தப் படத்தைத் தயார் செய்தோர் நன்கு கவனித்திருக்கிறார்கள். பெயர் பெற்ற சில நடிகர்களைச் சேர்த்துக்கொண் டிருப்பதும், அளவுக்கு மீறிய அறுபதுக்குமேற்பட்ட பாடல்களைப்பெற்றிருப்பதும், எல்லாப் பாடல் களும் சாதாரணமாக கிராமபோன் பிளேட்டுகளில் வெளியாகிப் பழக்கத்திலுள்ள வர்ண மெட்டுகளில் அமைந்திருப்பதும் பெருங் கூட்டத்தை அழைப்பதற்கு ஆதாரமாக இருக்கின்றன.

திரு. பி. வி. ராவ் இந்தப் படத்தை இன்னும் நல்ல முறையில் எடுக்க முயன்றிருக்கலாம். படத்தின் முதலிலும் முடிவிலும் தோன்றும் காட்சிகள் திருப்திகரமாக இல்லை. முதலில் மகாவிஷ்ணு விடம் தேவர்கள் முறையிடும் காட்சி வருகிறது. இந்தக் காட்சி யானது பல படங்களிலும் வரப் பார்த்திருக்கலாம். அந்தப் படங் களிலெல்லாம் மகாவிஷ்ணு பாற்கடலில் ஆதிசேடன் மீது பள்ளி கொண்டிருக்கும் விதமாக அழகாய் எடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்தப் படத்திலோ மகாவிஷ்ணு தாமரை மலரில் கடற்கரை ஓரத்தில்



அலைகள் அடிக்கும் இடத்தில் காணப்படுகிறார். மிகவும் குள்ளமான சிலர் தாடிகளோடு தேவர்களெனக் கடற்கரையில் நின்று ஏதோ பிரார்த்திருக்கிறார்கள். இதைப் பார்த்தவுடனேயே சிரிப்பு உண்டா கிறது; இந்தப் படத்திற்கு அளிக்க வேண்டிய மதிப்பு குறைகிறது.



சிறையில் வசுதேவரும், தேவகியும்

கடைசியில் காணும் கண்ணன் காளிங்கனை அடக்கும் காட்சி மிகவும் சாதாரணமாக இருக்கிறது. படம் முழுவதிலும் நல்ல காட்சிகளை அமைக்க வேண்டியது அவசியமாயினும் முதலிலும் முடிவிலுமாவது அழகான முறையில் எடுக்க வேண்டியது மிகமிக இன்றியமையாதது. இதிலும் திரு. பி. வி. ராவ் தவறிப்போ யிருப்பது வருந்தத்தக்கது. டைரக்டர் ஏராளமான

பாட்டுகளுக்கு இடம் கொடுத்திருப்பது தவறாயினும் இடங்களைப் பார்த்தாவது பாட்டுக்களைக் கொடுத்திருக்க வேண்டும். அவ்வாறின்றி பொருத்தமில்லாத இடங்களில் பாடச்செய்திருப்பது படத்திற்குள்ள மதிப்பைக் குறைக்கிறது. தேவகி கிருஷ்ணனைப் பெற பிரசவ வேதனைப் படும்போது பாடுவதும், வசுதேவர் குழந்தை கிருஷ்ணனைக் கோகுலத்திற்குக் கொண்டு போகும்போது பாடுவதும் பொருத்தமாகத் தெரியவில்லை. டைரக்டர் சிரமம்எடுத்துக்கொண்டிருந்தால் நடிகர்களிடம் நல்ல நடிப்பு காணப்பட்டிருக்குமென எண்ண இடமிருக்கிறது. கம்சன் தன் தங்கை



குழந்தையைக் கொல்லவந்த கம்சனை வசுதேவர் வேண்டுதல்.

தேவகியையும் மைத்துனர் வசுதேவனையும் ரதத்தில் ஏற்றிக்கொண்டு சோலைக் காட்சியைக் காட்டச் செல்கிறான். வழியில் தேவகிக்குப் பிறக்கும் குழந்தையால் அவனுக்கு மரணமென்று அசரீரி சொல்லுகிறது. அதுகேட்க கம்சன் ரதத்தை விட்டு இறங்கி கோபத்தோடு தேவகியைக் கொல்லப் போகிறான். அப்போது நடுநடுங்கி பயந்து கீழே இறங்கி கம்சனிடம் உயிர்ப்பிச்சை கேட்டுக்கொள்ள வேண்



டிய தேவகியும் வசுதேவனும் ரதத்தில் அமர்ந்தபடியே ஏதோ பாட்டுப்பாடிக்கொண்டிருக்கிறார்கள். சிறையிலிடப்பட்ட தேவகியும், வசுதேவனும் பிரார்த்தனை செய்யும்போது படக்காட்சி என்பதை மறந்து ஜனங்களைப் பார்த்த முகமாகத் தோத்திரிக்கிறார்கள். டைரக்டர் காமிராவைப் பார்த்து நடிகர்கள் பாடவோ, பேசவோ நேராதபடி கவனிக்கவேண்டியது அவசியமல்லவா? பிறகு தேவகிக்குப் பிறந்த குழந்தை கிருஷ்ணன் அப்பொழுது பிறந்ததாகக் காணப்படவில்லை.



கிருஷ்ணனும், அவன் தோழர்களும்

ஒரு வயதிற்கு மேற்பட்டதாக இருக்கிறது. இதைத் தூரக்காட்சியாகக் காட்டியிருந்தால் இந்த அபிப்பிராயம் ஏற்படாதிருந்திருக்கும். வசுதேவன் குழந்தை கிருஷ்ணனைக் கோகுலத்திற்குக் கொண்டு போகும் போது குழந்தை இல்லாத வெறுங் கூடையோடு செல்கிறான்; கோகுலத்தில் யசோதையின் குழந்தையை மாத்திரம் எடுத்துக்கொண்டு குழந்தை கிருஷ்ணனை அங்கு வைப்பதற்குப் பதிலாக வெறுங் கையைக் காட்டி வருகிறான். நுட்பமாகக் கவனித்தால் இவைபோன்ற இன்னும் சில குறைகள் காணப்படும்.

பாதிப்படத்திற்கு மேல் பாலிய கிருஷ்ணன் வருகிறான்; தோழர்களோடு விளையாடுகிறான்; அடுத்த வீடுகளில் வெண்ணெய் திருடுகிறான். ஒரு வீட்டில் உயரத்தில் தொங்கிக் கொண்டிருந்த பானையிலுள்ள வெண்ணெயைக் கிருஷ்ணன் தனது தோழன் ஒருவன் மீது ஏறி எடுத்துக்கொண்டிருக்கும்போது அந்த வீட்டுக்காரி வர மற்றவர்கள் ஓடி விடுகிறார்கள். கிருஷ்ணன் மேலே தொங்கிய நிலையில் இருக்கிறான். அவள் கிருஷ்ணனைப் பிடிக்கப் பற்றியபோது பெரிய பாம்பாக மாறுகிறது. மற்றோரிடத்தில்



இடையனும் இடைச்சியும்

கிருஷ்ணன் வெண்ணெய் திருடிக்கொண்டிருக்கிறான். அதைப் பார்த்த அவ் வீட்டுக்காரன் கிருஷ்ணனை அடிக்கவரும்போது திடீரென்று குரங்காக மாறுகிறது. தன்னைப் பிடித்து அடிக்கவரும் மற்றொருவனைக் கிருஷ்ணன் தனியே வீட்டிற்குள் குளித்துக்கொண்டிருந்த ஒரு மாதின் முன் கொண்டுபோய் விட்டு மறைந்து, துடப்பக்கால் அவனை அடிபடச் செய்கிறான். இவை ஜனங்களுக்கு நகைச்




சுவையை ஊட்டுகின்றன. இன்னும் இடையன்-இடைச்சியின் காட்சி மக்களுக்குப் பெருங் களிப்பை உண்டாக்குகின்றது.

பி. எஸ். சிவபாக்கியம் முதலில் தேவகியாகவும் பிறகு இடைச்சியாகவும் கோபிகையாகவும் நடித்திருக்கிறார். தேவகியாக நடித்திருப்பதை விட இடைச்சியாகவும் கோபிகையாகவும் தோன்றியிருப்பது சிறப்பாக யிருக்கிறது. வெறும் 'வண்ணான் பாட்'டில் மாத்திரமன்றி எல்லாப் பாட்டுகளையும் நன்கு அனுபவித்துப் பாடும் தமது வல்லமையை இப்படத்தில் சிவபாக்கியம் காட்டியிருக்கிறார். சிவபாக்கியம் இடைச்சியாகத் தோன்றி நல்ல நடிப்போடு பாடிய 'மதிச்சியத்திலே' என்ற பாட்டும் 'மந்தையிலே மாடு மேய்க்கும் மச்சானுக்கு' என்ற பாட்டும் இடையனிடம் பாடிய 'என்னுசை துரையே' முதலிய பாடல்களும் அதிக இன்பமாக இருந்தன. இந்தப் பாடல்களை இயற்றியவரும் நல்ல பதங்களில் பொருளழகோடு செய்திருப்பது பாராட்டத் தக்கது.

கிருஷ்ணனாகத் தோன்றியுள்ள சிறுவன் ஜெயராம், தமிழ் நாடக உலகிற்கே ஒரு மணியாகத் திகழ்ந்து சமீபத்தில் காலஞ் சென்ற கிட்டப்பா, கிராமபோன் பிளேட்டுக்களில் கொடுத்துள்ள பாட்டுகளின் வர்ண மெட்டுகளில் அமைந்த பாட்டுகளை யெல்லாம் திரு. கிட்டப்பாவின் சாயலாக அதே முறையாகப் பாடுவது மெச்சத் தக்கதாகும்.

வசுதேவராக நடித்த பந்துலு ஐயர் உருவத்திலும் பாட்டிலும் அந்த வேடத்திற்குத் தகுதியுடையவராயினும் நடிப்பிலில்லை. கம்சனாகத் தோன்றிய திரு. முத்து கிருஷ்ணன் தமது வேடத்தைத் திறமையாகச் செய்யப் பெரிதும் முயன்றிருக்கிறார். இந்தியன் சார்லி என்று பெயர் பெற்றிருக்கும் திரு. சி. எஸ். சாமண்ணா மகரந்தனாக நடித்திருக்கிறார். ஆனால் அவரது நடிப்பு ஒன்றும் இப்படத்தில் பிரதிபலிக்கவில்லை. தலையை நீட்டுவதும் நாக்கை நீட்டுவதும் சிறந்த நடிப்பாகாது.


படக்காட்சித் தொழில் இந்தியாவில் வடநாட்டார் கையிலிருக்கிறது. கல்கத்தா, பம்பாய் முதலிய இடங்களிலுள்ளோர் படம்பிடிக்கும் தொழிலில் அதிக லாபமடைந்து வருகிறார்கள். தமிழ்ப் பேசும் படங்களும் எடுத்து ஏராளமான வருவாயைப் பெறுகிறவர்களும் அவர்களே. இந்நிலைமையில் சில கனவான்களுடைய உதவியைக்கொண்டு சேலத்தில் 'ஏஞ்சல் பிலிம் கம்பெனி' என்ற ஸ்தாபனத்தை அமைத்து இந்தத் தமிழ்ப் பேசும் படத்தை எடுத்துள்ள திரு. வேலாயுதம் பிள்ளை அவர்களுடைய நன் முயற்சியை நான் பாராட்டுகின்றேன். அன்பர் வேலாயுதம் அவர்களுடைய முயற்சி மேலும் மேலும் ஓங்கி தமிழ் நாட்டிற்கு ஒரு பெருமையை அளிக்குமென்று எதிர்பார்க்கிறேன்.




தாய்:—என்னடீ! சோறு கொழுக்கட்டை கொழுக்கட்டையா யிருக்கு?

மகள்:—நல்லதாப் போச்சு! பிள்ளையாருக்குச் சுருக்க நைவேத்தியம் பண்ணி அம்பி வருவதற்குள்ளே எனக்குக் கொடுத்து விடு.

—திருவை. கே. வைத்தியநாதன்



சேஷிபாட்டி:—(தன் நாட்டுப் பெண்ணைப் பற்றி) 'இந்த அரக்கையைப் போட்டுண்டு மீட்டிங்கு மீட்டிங்கா அவள் போர வயிற்றெறிச்சலே—'

குப்பு பாட்டி:— ராச்சியத்திலே புதுசு புதுசா என்னென்னதான் கிளம்பி இருக்கடீ!

—ஜி. எஸ். ஆர்

ஒரு பெண் கிளிமுத்திரை அடித்த ஒருசேலையைக் கட்டிக் கொண்டுவீதியில் போனாள்.

குறும்புக்காரப் பையன்:—இது என்னம்மா?

பெண்:—அதுதாண்டா கிளி.

பெண்:—(கோபமாக) ஏண்டா சேலையைச் கிழித்துவிட்டாய்.

பையன்:—நீங்கதானம்மா கிழி என்று சொன்னிங்கோ அதனால்தான் கிழித்தேன். —பே. சி. நாராயணசாமி செட்டி




வம்பன்:—தெருவில் பேபர் விற்கும் சிறுவனை நோக்கி "பையா! என்னோடு வா. உனக்கு அதிக சம்பளமுள்ள வேலை தருகிறேன்.

சிறுவன்:—என்ன வேலை ஐயா!

வம்பன்:—என் எஜமானர் உன்னைப்போல் ஊர் சுற்றிக்கொண்டு திரியும் பேர்வழிகளுக்கு அதிகச் சம்பளம் கொடுப்பார்.

சிறுவன்:—தங்களை நீக்கிவிட்டு என்னைச் சேர்த்துக் கொள்வாரா அல்லது தங்களையும் என்னையும் சேர்த்து வேலைக்கு வைத்துக் கொள்வாரா?

—எம். வி. தேவன்



நாடகாசிரியர்:—நான் எழுதிய நாடகத்தை நடித்துக் காட்டியபோது என்ன கும்பல் தெரியுமா? டிக்கட் விற்குமிடத்தில் கணக்கிட்டு சொல்ல முடியாத ஜனங்கள்.

நண்பர்:—சரிதான். எல்லோரும் பணத்தைத் திருப்பிக் கொடுங்கள் என்று கேட்டார்கள்போ லிருக்கிறது!

—நா. சு. வேங்கடராமன்

கணவன்:—என்னடீ இது! குழம்பில் இவ்வளவு கல்லைப் போட்டிருக்கிறாயே!

மனைவி:—மாமியார்தான் குழம்பில் உப்புப் போராது நாலு கல்லைப் போடு என்றார்.

—எஸ். எஸ். எஸ். வாஸன்

சீனு:—ராமு! உன்னுடைய வகுப்பில் யார் முதல் பெயர்?

ராமு:—சீதாராமன்.

சீனு:—எதில் முதல் பையன்?

ராமு:—பெஞ்சில் உட்காருவதில். —தாவூது மரைக்காய

ஒரு பட்டிக்காட்டு சாயபு ‘சந்திர விலாசில்’ சிற்றுண்டி அருந்தி விட்டு வெளிவர உத்தேசித்தார். அப்பொழுது கிராம்போனில ‘வண்ணான் வந்தானே’ என்ற பாட்டை இனிமையாய்ப் பாடிக் கொண்டிருந்தது.


சாயபு:—(பக்கத்தி லிருந்தவரைப் பார்த்து) ஐயா! அங்கே படிக்கிறது ஆம்புளேயா, பொம்பிளேயா?

அவர்:—பெண்பிள்ளைதான்.

சாயபு:—ஹூம். அப்படியானக்கா கொஞ்சம் (கோஷா) ஒத்திப்போகச் சொல்லுங்கோ. நான் வெளியே போயிடுரேன்.

—வ. அ. ம. தீன்

ஒரு கிழட்டு வண்ணாத்தி கழுதையை ஓட்டிக்கொண்டு போகையில் ஒரு துஷ்ட சிறுவன் எதிர்ப்பட்டு ‘கழுதை ஆயா! சுகமாயிருக்



கிறாயா? என்று க்ஷேமம் விசாரிக்க, அவள் ‘மகனே சுகமா யிருக்கிறேன்’ என்று பதில் சொன்னாள். —கே. காசி

உபாத்தியாயர்.—அடே கண்ணா! நீ கடைக்குப் போய் 1 சேர் விளக்கெண்ணெய் $3\frac{1}{2}$ அணாவாக 3 சேர் விளக்கெண்ணெய் வாங்கினால் என்னடா ஆகும்?

கண்ணன்:—சாகும்வரை பேதி யாகும் சார்!

—ஜி. சுப்பிரமணியன்

# தந்தையை அலக்ஷியம் செய்தால்

[திரு. கே. வேங்கடராவ்]

பொதுவாக எல்லாப்பாடங்களிலும் கண்ணன் வகுப்பில் முதல் பையனாக இருந்தான். இதற்குக் காரணம் முதன் முதலாக இவன் வெகு கஷ்டப்பட்டு சோம்பலின்றி வாசித்து வந்தது ஒன்று; மற்றொன்று தினந்தோறும் பள்ளிக்கூடத்தி லிருந்து வந்ததும் தனது தகப்பனாரிடம் உபாத்தியாயர் கற்பித்தவைகளை விவரித்துச் சொல்வான்; வீட்டுக் கணக்குகளையும், பாட அப்பியாசங்களையும் இரவில் எழுதி, தனது தகப்பனாரிடம் காண்பிப்பான். அவர் அவைகளைப் படித்துப் பார்த்து குற்றங் குறைகளை எடுத்துக்காட்டி, மீண்டும் தவறுதல்களின்றி எழுதி உபாத்தியாயரிடம் காண்பிக்குப்படி ஆஜ்ஞாபிப்பார். ஆகையால் வீட்டுக் கணக்குகளிலும், பாட அப்பியாசங்களிலும் கண்ணன் வகுப்பில் முதல் பையனாகயிருந்ததற்கு ஆச்சர்யமில்லை. ஓர் நாள் இவன் வீட்டுக் கணக்ருகளை வழக்கம்போல் இரவில் போட்டான். மறுநாட் காலை அதைத் தகப்பனாருக்குக் காண்பிக்க மறந்து போனான். ‘தினந்தோறும் நாம் போடும் கணக்குகள் எல்லாம் சரிவரத்தான் போடுகிறோமே! தகப்பனாருக்குக் காண்பிக்க வேண்டியதுமில்லை’ என்று சிறிது தன்னையு மறியாமல் அலக்ஷியமாகக் கருதி பள்ளிக்கூடத்திற்குச் சென்றான்.

முதன் முதலாக உபாத்தியாயர் வீட்டுக் கணக்குகளையும் அப்பியாசங்களையும் கவனித்தார். கண்ணனது நோட்டு புஸ்தகத்தை எடுத்து, அப்பியாசங்கள் ஒவ்வொன்றையும் பார்த்து வருகையில், உபாத்தியாயரது கண்கள் சிவந்தன. கடைசி வரையில் பார்த்து விட்டு வெகு கோபத்துடன் ‘கண்ணா’ என்று கூப்பிட்டார். இது வரையில் இம்மாதிரி தனது உபாத்தியாயர் கோபித்துக் கூப்பிட்டு அறியாதவனாதலால், கண்ணன் திடுக்கிட்டு எழுந்து நின்றான். ...பா க யாயர் கண்ணனை நோக்கி ‘இதுவரை வகுப்பில் முதல் பைய தினம் ந்தவன், இன்றையதினம் நீ கணக்குகள் போட்டிருப் ‘அம்மா பார்த்தால் நீ கடைசி பையனாய்த்தான் இருக்க வேண்டி கூட

யவனா யிருக்கிறாய்! இவ்வளவு நாட்களாய் வேறொருவர்தான் போட்டுக் கொடுத்து என்னை ஏமாற்றி வந்தாய் என்று நினைக்க வேண்டி யிருக்கிறது. உண்மையைக் கூறு' என்று அதட்டிக் கேட்கவே கண்ணன் கண்களில் நீர் ததும்பிற்று. இவன் பேரில் பொறாமை யுற்றிருந்த வேறு பையன்களும் இப்போது கண்ணன் இருந்த நிலைமையைக் கண்டு சந்தோஷப்பட்டனர். அதைச் சொல்லவும் கண்ணனுக்கு நாவெழவில்லை. மீண்டும் ஆசிரியர் 'இதுவரையில் உன்னைப்பற்றி பெருமையுட னிருந்தேன். இப்போது உன் மேல் அசிங்கியமாய் விட்டது. உண்மையைச் சொல்கிறாயா அல்லது வகுப்பை விட்டு வெளியேறுகிறாயா' என்று சொல்லிக் கொண்டே கையிலிருந்த நோட் புஸ்தகத்தை வீசி கண்ணன் முகத்தின் மேல் எறிந்தார். தன் மீது கொடிய ஈட்டி மாதிரி வந்து விழுந்த நோட்டு புஸ்தகத்தைக் கையிலெடுத்துக் கொண்டு துக்கத்தை அடக்க மாட்டாமல் 'கோ' வென்றழுதான். இதைக் கண்ட ஆசிரியர் கண்ணன் மீது இரக்கங் கொண்டு 'உட்கார்! இடை வேளை போஜனத்திற்கு நான் போகும்போது என்னை வந்து பார்!' என்று சொல்லிவிட்டு அன்றைய பாடங்களைப் போதிக்கத் தொடங்கி விட்டார்.

கண்ணன் மாளாத் துயரடைந்தான். மனம் பரிதவித்தது. ஆசிரியர் கற்பிக்கும் பேச்சு ஒன்றும் இவனுடைய காதில் விழவில்லை. 'ஐயோ! இன்றையதினம் தகப்பனாருக்குக் கணக்குகளைக் காண்பிக்காமல் வந்தது தப்பு. நான் செய்த தப்பிதத்திற்குச் சரியான தண்டனை கிடைத்தது. வகுப்பில் இந்த அவமானம்! உபாத்தியாயரிடமும் கெட்ட பெயர்! வீட்டிற்குப் போனால் தகப்பனாரிடம் இந்த நோட்டு புஸ்தகத்தை எவ்வாறு காண்பிப்பது? இடைவேளையின்போது ஆசிரியரிடம் என்ன தெரிவித்துக் கொள்வது?' என்று பலவாறு ஏங்கித் தவித்தான். தகப்பனாரிடம் காண்பிக்காத தவறுதலை நினைக்க நினைக்க கண்ணன் மனதில் துக்கம் பொங்கிப் பொங்கி எழுந்தது. இடைவேளை மணியும் 'கணகண' வென்று சப்தித்தது. பிள்ளைகளெல்லாம் எழுந்து தத்தம் வீட்டிற்கேகினர். கண்ணன் தன்னந் தனியே வகுப்பறையில் உட்கார்ந்திருந்தான். சிறிது நேரங் கழித்ததும் கண்ணன் ஆசிரியரைப் பார்க்கச் சென்றான்.

ஆசிரியர் தனது அறையில் தனியாக உட்கார்ந்திருந்தார். கண்ணன் உள்ளே சென்று ஆசிரியர் முன் மரியாதையாக நின்றான். இவனைப் பார்த்ததும் ஆசிரியர் 'என்னடா கண்ணா! வகுப்பில் முதல் பையனாயிருந்த நீ, இன்றையதினம் என் [illegible] மோசமாய்ப் போனாய்?' என்று வினவவே, கண்ணன் [illegible] நீர் ததும்ப, 'ஐயா! நீங்கள் கொடுக்கும் அப்பியாசங்களை [illegible]



தோறும் இரவில் எழுதி, காலையில் என் தகப்பனாரிடம் காட்டுவது வழக்கம்' அவர் அவைகளிலுள்ள தவறுதல்களை எடுத்துக் காட்டி திருத்துவார். அதன் பிறகு அவைகளை நான் மீண்டும் சரிவர எழுதி உங்களுக்குக் காட்டுவது வழக்கமா யிருந்து வந்தேன். இன்றையதினம் நான் எழுதியதை அப்படியே கொண்டு வந்து உங்களுக்குக் காண்பித்தேன். இதுவே நான் செய்த தவறு தலையொழிய, நீங்கள் நினைத்த வண்ணம் நான் எவ்வகையிலும் ஏமாற்றி வந்தவனல்ல. என்னை மன்னித்து பொறுத்தருளப் பிரார்த்திக்கிறேன்' என்று வினயமாகப் பதிலுரைக்கவே ஆசிரியர் இவனது ஒழுக்கத்தை மெச்சி 'கண்ணா! இப்போது உன்னை மெச்சினேன். நீ இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்திருப்பதற்கு உன் தகப்பனாரே காரணம் என்று இப்போதே உணர்ந்தேன். வாழ்க்கையில் உற்ற துணைவரும், நல்லாசிரியரும் தந்தையை விட வேறெவருமில்லை யென்பதை இப்போதேனும் நன்குணர்ந்தாயா? இனி நீ உன் தந்தையின் பேச்சுக்கள் ஒவ்வொன்றையும் பொன்னே போல் போற்றிவா!' என்று ஆறுதல் கூறி கண்ணனை யனுப்பிவிட்டார். இடைவேளைக்குப் பின் ஆசிரியர் வகுப்பிற்கு வந்ததும் தந்தையின் பேரில் கண்ணன் வைத்திருந்த அன்பை மெச்சியும், தந்தைக்கு வழக்கம்போல் அப்பியாசங்களைக் காட்டாமல் வந்ததற்குக் கண்ணன் அடைந்த தண்டனையினின்று வகுப்புப் பிள்ளைகள் அறிய வேண்டிய படிப்பினையையும் உணர்ந்து தமது ஆவியுள் பதித்துக் கொள்ளுமாறு ஆசிரியர் சிறிது நேரம் பிரசங்கம் செய்தார்.

கண்ணன் மாலையில் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்குச் சென்றான். எப்போதும் போல் முக மலர்ச்சியுட னில்லாமல், முகம் சோர்வடைந்திருப்பதைக் கவனித்த தாய் 'என்னப்பா! முகம் சோர்ந்திருக்கிறது. பசியா யிருக்கிறதா? பசியானால் சாப்பிடு. அல்லது வேறு ஏதாவது வேண்டுமா' என்று அன்புடன் கேட்கவே, கண்ணன் என்ன பதில் உரைப்பதென்று தோன்றாமல் திகைத்தான். மீண்டும் தாய் வற்புறுத்திக் கேட்கவும் இவன் மனதில் அடங்கி ஒடுங்கிக் கிடந்த துக்கம் மேலிட்டு, அடக்க முடியாமல் அழுதான். இவன் அழுவதைச் சகிக்க வொண்ணாத தாய் அப்பா! என் கண்ணா! நான் இருக்கும்போது உனக்கென்ன குறை? வீட்டில் உண்டானது எது வேண்டுமானாலும் கேள்; நான் 'இப்போதே கொடுக்கிறேன். வேறு ஏதேனும் வேண்டுமானாலும் சொல்; உன் தகப்பனாருக்குச் சொல்லி வாங்கிக் கொடுக்கச் சொல்கிறேன். வீணாக அழுது ஏன் என்னையும் நோக வைக்கிறாய்' என்று கேட்கவே, கண்ணன் உண்மையை ஒளிக்க முடியாமல் அன்றைய தினம் வகுப்பில் நடந்தவற்றை யெல்லாம் விவரமாகச் சொல்லி 'அம்மா இன்றையதினம் என் தகப்பனாரைப் பார்க்காமல் பள்ளிக்கூடம் சென்றதே தவறு. இப்போது எனக்கு நற்புத்தி வந்தது.


இதைக் கேட்டால் தகப்பனார் என்ன கோபிப்பாரோ தெரியவில்லை.
தந்தையின் பேச்சைத் தட்டலாகாதென்று நீங்கள் எனக்குச்
சொல்லி வந்ததை இன்றையதினம் கவனிக்காததனால் நான்
அடைந்த துயரம் போதும்! போதும்!! நான் செய்த தவறுதலுக்கு
என்ன செய்வேன்? இதை நினைக்க நினைக்க என் மனதை இந்த
எண்ணம் அறுத்துத்தள்ளுகிறதே' என்று சொல்லித் தேம்பித்தேம்பி
யழுதான். இவனது தாயார் மௌனமாகக் கேட்டுக் கொண்டு
'அப்பா! கண்ணா! நீ இதற்காக வருத்தப்படாதே! சென்றன செல்க!
இனியாகிலும் நற்புத்தி கொண்டு வாழ், நமது வாழ்க்கையில்
நாம் ஓர் தவறுதல் செய்து விட்டால் அதைப்பற்றியே நெஞ்சம்
குமுறி விசனப்படலாகாது. ஆனால் அதிலிருந்து நாம் அறியக்
கிடக்கும் படிப்பினையை உள்ளத்தில் பதித்துக் கொண்டு அதைக்
கடைப்பிடிக்க தீர்மானங் கொள்ள வேண்டும். நீ செய்த
தவறுதலை நீயே யுணர்ந்து அதற்சாக வருத்தப்படுகிறாயே, இதைக்
கேட்க உன் தகப்பனார் சந்தோஷப்படுவார். மேலும் நாம் ஓர்
பாவமான காரியத்தைச் செய்து விடடால், அதற்காக மனம் வருத்
தப்பட்டு, இப்போது மன்னிக்க வேண்டுமென்றும் இனி அம்மாதிரி
தவறுதல் செய்ய மனங் கொடுக்க லாகாதென்றும் கடவுளின்
திருவடியில் வீழ்ந்து கேட்டுக்கொள்ள வேண்டும். அவர் உன்னை கட்
டாயம் மன்னிப்பார். நற்புத்தியும் கொடுப்பார். நான் உன் தகப்பனா
ரிடம் தகுந்தபடி சொல்லுகிறேன். விசாரத்தை விட்டொழி. ஆகாரம்
எடுத்துக் கொள்ள எழுந்து வா' என்று தாயார் சொல்லவும்
கண்ணன் பாதி தைரியம் பெற்று அன்புடன் தாய் அளித்த
பண்டங்களை உண்டான்.

சாயங்கிரம் தகப்பனார் வீட்டிற்கு வந்தார். கண்ணன் அவரை
நேரில் காணவும் அச்சங் கொண்டான். கண்ணனிட தாயார் கணவ
னிடம் கண்ணன் அன்று வகுப்பில் அடைந்த அவமானத்தை எடுத்
துச் சொல்லி, அதற்காக அவன் வெகுவாக வருத்தப்படுவதாகவும்,
இனி அவ்வாறு செய்யாதவாறு தீர்மானித்துக்கொண் டிருப்பதாக
வும் சொல்லவே, இதைக்கேட்டு அவர் கோபித்துக்கொள்ளாமல்
சாந்தமாயிருப்பதை மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த கண்
ணன், தைரியத்துடன் தந்தைமுன் தோன்றி தாயைப் பார்த்து
" அம்மா! தகப்பனாரிடம் என் அப்பியாசங்களைக் காட்டாமல்
சென்றதற்குச் சரியான தண்டனை யடைந்தேன். அதை நினைக்க
நினைக்க என் மனம் அலைகடலில் அகப்பட்ட கழியைப்போல் தத்
தளிக்கிறது. எனக்கு அவமானம் ஏற்பட்டது என் குற்றத்திற்
காகவே! அதைப்பற்றி எனக்கு அக்கரையில்லை. நாளையதினம்
எனது ஆசிரியர் தந்தையை நோக்கி 'உங்கள் கண்ணன் செய்ததைப்
பார்த்தீர்களா?' என்று கேட்டால் எனது தந்தைக்கு வருத்த



முண்டாகுமே யென்பதை நினைக்க நினைக்க என் மனம் புண்ணடை
கிறது. என் செய்வேன்! ஆனால் இனி எக்காலும் தந்தை பேச்
சைத் தட்டமாட்டேன்' என்று சொன்னதையும், கண்ணனது
மனோ நிலையையும் அறிந்த அவனது தகப்பனார் 'இதைப்பற்றிக்
கவலை கொள்ளாதே! ஓர் நாள் தவறிப்போனால் அது குற்றமில்லை
ஆனால் எனக்கு அந்த அப்பியாசங்களைக் காட்டியிருந்தால் நான்
சரிவர திருத்தி யிருப்பேன். இன்று நடந்ததிலிருந்து ஓர் நல்ல
படிப்பினையை யுணர்ந்து அதைக் கடைப்பிடிக்க முயல்வாயாக'
என்று சாந்தமாகச் சொல்லவே கண்ணனது துயரமுற்றும் பறந்தது.
தனது தாயாரின் சொல்படி ஸ்ரீகிருஷ்ணன் படத்தின் முன் நின்று
'ஸ்ரீகிருஷ்ணா! நான் செய்த தவறுதலை உணர்ந்து மனமார வருந்து
கிறேனென்பதை நீ உணராயோ? இனிமேல் எனது தந்தையின்
நற்புத்திகளை சிரமேற்கொண்டு நடப்பேன். என்னை எப்போதும்
நல்லொழுக்கத்திலேயே நீ செலுத்த வேண்டும். என் மனதைத்
தீய வழியில் எப்போதும் செலுத்தாமல் காப்பாற்ற நீயே துணை'
என்று சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்தான். உடனே அவன்
மனதில் நல்லொளி பரவியது. இதுவரை அவன் மனதில் ஊசலாடி
யிருந்த பலப்பல எண்ணங்களெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல்
விலகின. கண்ணன் புத்துயிர் பெற்றான்.






# நன்றி மறவேல்

By Pandit S. S. Arunagirinathar

[All Rights Reserved by the author]

ஓர் ஊரில் ஒரு பணக்காரர் இருந்தார். அவர் பெயர் கருணாகரர் என்பது. அவர் மிகவும் நல்லவர்; ஏழைகள் இடத்தில் இரக்கம் உள்ளவர்; கஷ்டப்படுகிறவர்கள் எல்லோருக்கும் உதவி செய்வார்.

ஒரு நாள் சாயந்திரம் கருணாகரர் வழக்கம்போல் வெளியில் உலாவப் போனார். ஒரு மணி நேரம் வரையில் அவர் நல்ல காற்று உள்ள இடத்தில் உலவிக்கொண்டு இருந்தார். பிறகு அவர் வீட்டை நோக்கி நடந்தார்.


அவர் போகும் வழியின் ஓரத்தில் ஒரு சிறுவன் படுத்துக்கொண்டு இருந்தான். அவன், 'அம்மா, நான் என்ன செய்வேன். எனக்கு மிகவும் கஷ்டமாய் இருக்கிறதே,' என்று சொல்லி வருத்தப்பட்டான்.

அவன் வருத்தப்படுவதைக் கருணாகரர் அறிந்தார். உடனே அவர், அவன் அருகில் போனார். பிறகு அவர் அவனைப்பார்த்து, 'சிறுவனே, நீ யார்? உன் பெயர் என்ன? நீ ஏன் வருத்தப் படுகிறாய்?' என்று கேட்டார்.

அதற்கு அந்தச் சிறுவன், 'ஐயா, நான் ஓர் ஏழை. எனக்குத் தாயும் இல்லை; தந்தையும் இல்லை. என் பெயர் முனியன் என்பது. இன்று முழுவதும் நான் சாப்பிட வில்லை. இப்போது எனக்குத் திடீரென்று காய்ச்சல் கண்டு இருக்கிறது. அதனால் நான் கஷ்டப்



படுகிறேன். எனக்கு யாரும் உதவிசெய்யவில்லை. நீங்களாவது எனக்கு உதவி செய்யுங்கள். உங்களை நான் கையெடுத்துக் கும்பிடுகிறேன்,' என்று சொல்லிக் கும்பிட்டான்.




உடனே கருணாகரருக்கு அவன்மீது இரக்கம் உண்டாயிற்று. அதனால் அவர் அவனை ஒரு வண்டியில் ஏற்றித் தம்முடைய வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்; அவனுக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுத்தார்; வைத்தியரை அழைத்து அவனுக்கு வைத்தியம் செய்யச் சொன்னார். பிறகு நான்கு நாள்களில் முனியன் சுகம் அடைந்தான்.

முனியன் ஏழை அல்லவா? அவன் எங்கேபோய் பிழைப்பான்! அதனால், கருணாகரர் அவனைத் தம் வீட்டிலேயே வேலைக்கு வைத்துக்கொண்டார்.

ஆனாலும் என்ன? முனியன் நன்றி இல்லாதவன். அவன் கருணாகரர் தனக்குச் செய்த உதவியை உடனே மறந்துவிட்டான். அதனால் அவன் என்ன செய்தான், தெரியுமா?

கருணாகரர் பணக்காரர் அல்லவா? அவர் இரும்புப் பெட்டியில் பணப்பைகள் நிறைந்து இருந்தன. ஒரு நாள் இரவில் முனியன் சமயம் பார்த்து அந்தப் பணப்பைகளில் இரண்டை எடுத்துக்கொண்டு எவருக்கும் தெரியாமல் போய்விட்டான். அப்போது நிலவு நன்றாய்க் காய்ந்துகொண்டிருந்தது. முனியன் மூன்று மைல்

தூரம் போனான். அப்போது அவன் எதிரில் சில திருடர்கள் வந்தார்கள். அவர்கள் முனியனைப் பார்த்து விட்டார்கள். முனியனும் அவர்களைப் பார்த்து விட்டான். உடனே முனியன் ஓட ஆரம்பித்தான். ஆனாலும் அவனுக்குமேல் வேகமாய் ஓடித் திருடர்கள் அவனைப் பிடித்துக்கொண்டார்கள். பிறகு அவர்கள் அவனை அடித்



துக்கொன்று பணப்பைகளை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

கருணாகரர் செய்த உதவியை மறந்த முனியன் எப்படியானான் பார்த்தீர்களா? ஒருவர் செய்த உதவியை மறக்கிறவர்களுக்கு உடனே தீமை வரும். ஆகையால் நாம் நமக்கு ஒருவர் செய்த உதவியை எப்போதும் மறக்கக் கூடாது.

---

# தெய்வம் இகழேல்

நாங்கூரில் ஒரு மனிதன் இருந்தான். அவன் பெயர் நாகன் என்பது. நாகன் மிகவும் பொல்லாதவன். அவன் எல்லார் இடத்திலும் சண்டை போடுவான்; நல்லவர்களையும் கல்லால் அடிப்பான்.

நாகன் கோயிலுக்குப் போகமாட்டான்; சுவாமியைக் கும்பிட மாட்டான். யாராவது கேட்டால், 'கோயிலுக்கு ஏன் போக



வேண்டும்? சுவாமியை ஏன் கும்பிடவேண்டும்?' என்று கேட்பான். அவன் சுவாமியைப் பற்றி நினைப்பதே இல்லை. ஒரு நாள்கூட நாகன் சுவாமியை நினைத்துக் கும்பிட்டது கிடையாது.



நல்லவர்களையும் கல்லால்.........

ஒரு நாள் நாகன் ஓர் ஊருக்குத் தனியே போனான். வழியில் ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டில் செடிகளும் மரங்களும் நிறைந்து வளர்ந்திருந்தன. இருந்தாலும் நாகன் தைரியத்தோடு தன் வழியே போய்க்கொண்டு இருந்தான். அப்போது திடீரென்று அவன் எதிரில் மதங்கொண்ட யானை ஒன்று வந்தது. அதைக் கண்டவுடன் நாகன் பயந்து ஓடினான். அந்த யானையும் அவனைத் துரத்திக்கொண்டு அவன் பின்னால் ஓடியது.

ஓடும்போது நாகன் தண்ணீர் இல்லாத கிணற்றில் தவறி விழுந்துவிட்டான். கிணற்றுக்குள் ஒரு நல்ல பாம்பு படுத்துக்கொண்டு இருந்தது. அது படம் எடுத்துச் சீறிக்கொண்டு நாகனைக் கடிக்க வந்தது. 'ஐயோ' என்று கூச்சல் போட்டு நாகன் பயந்தான். உடனே அவன் ஒரு குதிகுதித்துக் கிணற்றின் சுவற்றில் முளைத்து இருந்த ஒரு சிறிய செடியைப் பிடித்துக்கொண்டு தொங்கினான். அவன் மேலே போனால் அவனைக் கொல்லுவதற்காக யானை காத்துக்கொண்டிருந்தது. கீழே குதித்தால் பாம்பு கடிப்பதற்காகத் தன் தலையைத் தூக்கிக்கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் அங்கே ஒரு பெரிய எலி வந்தது. அந்த எலி நாகன் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்த செடியின் வேரைக்



கடிக்க ஆரம்பித்தது. அதைப் பார்த்த நாகனுக்குப் பயம் உண்டா



யிற்று. அவனால் அந்த எலியை ஓட்ட முடியவில்லை; அது தூரத்தில் இருந்தது.

சிறிது சிறிதாக நாகன் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்த செடியின் வேரை எலி கடித்தது. பிறகு செடி கனம் தாங்காமல் அறுத்துக்கொண்டது. உடனே அதைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு இருந்த நாகன் திடீரென்று கிணற்றின் அடியில் போய் விழுந்தான். அப்போது அங்கே இருந்த நல்ல பாம்பு வெடுக்கென்று அவனைக் கடித்தது.

பிறகு நாகன், 'ஐயோ, நான் எல்லோருக்கும் கெட்டவனாய் இருந்தேன்; சுவாமியை மறந்தேன்; அதனால் எனக்குத் துன்பம் வந்தது,' என்று சொல்லி அழுதான்.

சிறிது நேரத்தில் பாம்பின் விஷம் அவன் தலையில் ஏறியது. அதனால் அவன் செத்துப்போனான்.

நல்லவர்களைத் திட்டுகிறவர்களுக்கும், சுவாமியைக் கும்பிடாதவர்களுக்கும் துன்பமே உண்டாகும். இதனால் நாம் நல்லவர்களை மதிக்கவேண்டும்; சுவாமியைக் கும்பிடவேண்டும் என்று தெரிகிறது அல்லவா?

---


# ஆலமரமும் பறவைகளும்

ஓர் ஊரில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அதில் இலைகளும் பழங்களும் நிறைந்து இருந்தன. அதனால் அநேகம் பறவைகள் வந்து அந்த மரத்தில் கூடு கட்டின. பிறகு அவைகள் ஆலம் பழத்தைத் தின்று கூட்டில் சுகமாய் வாழ்ந்து வந்தன.



சிறிது காலம் ஆயிற்று. ஆலமரத்தில் இருந்த பழங்களையெல்லாம் பட்சிகள் தின்று விட்டன. சில பழங்கள் கீழே உதிர்ந்து விட்டன. மரத்தில் இருந்த இலைகளும் பழுத்து உதிரத்

தொடங்கின. பிறகு சில தினங்களுக்குள் எல்லா இலைகளும் உதிர்ந்து விட்டன. மரம் வெறுங் கிளைகளோடு மொட்டையாய் நின்றது.



அப்போது அந்த மரத்தில் இருந்த பறவைகளெல்லாம் அந்த மரத்தை விட்டு இலைகள் நிறைந்து இருந்த வேறு ஒரு மரத்திற்குப்போய் விட்டன.

அதைக் கண்ட ஆலமரம், இந்தப் பட்சிகள் இது வரையில் என்னிடத்தில் ஆனந்தமாய் வாழ்ந்துகொண்டு இருந்தன. இப்போது என்னிடத்தில் இலையும் இல்லை; பழமும் இல்லை. அதனால் இவைகள் இது வரையில் நான் செய்த உதவியை மறந்து என்னை விட்டுப் போகின்றன. நம்மிடத்தில் ஏதாவது இருந்தால்தான் நம்மையும் யாராவது தேடி வருவார்கள். ஒன்றும் இல்லாதவர்களிடம் ஒருவரும் வரமாட்டார்கள், ' என்று சொல்லிற்று.


பிள்ளைகளே! ஆலமரம் சொல்லிய வார்த்தைகள் உண்மைதான் ஆகையால், நீங்கள் நன்றாய்ப் படியுங்கள்; நன்றாய்ப் படித்தால் நன்றாய் இருக்கலாம். அப்பொழுது எல்லோரும் உங்களைத் தேடி வருவார்கள். நீங்கள் சந்தோஷமாய் வாழலாம்.

குறிப்பு:—மேலே உள்ள கதைகள் என்னால் கற்பித்து எழுதப்பட்டவைகளாகும். இந்தக் கதைகள் இதுவரையில் எந்தப் பாஷைகளிலும் வெளி வராதவைகள். ஆகவே, இந்தக் கதைகளை என்னுடைய அனுமதியின்றி எவரும் உபயோகிக்கலாகாது ; மாற்றி எழுதவும் கூடாது.

எஸ். எஸ். அருணகிரிநாதர்

# இங்கர்சாலின் பொன்னுரைகள்

[குமரன்]



உரிமை இல்லாமல் ஒரு தொழிலுமே நடவாது. அறிவின் வளர்ச்சியே உரிமையாகும். அவ் வழியிலேயே பல தொழில்களும் வளர்ச்சியடைந் திருக்கின்றன. தற்பொழுதுள்ள பெரிய சண்டைக் கப்பல்களும் சிறியவற்றிலிருந்து நாளேற நாளேறப் புதுப்பிக்கப் பட்டனவாகும். இக் கப்பல்கள் எதி லிருந்து கண்டுபிடிக்கப்பட்டன வென்பதைச் சிறிது ஆராய்வோம். முதன் முதலில் பலகையைப்போட்டு ஏறிச் சென்றார்கள். பின் கட்டுமரம் கட்டினார்கள். அப்பால் படகுகள் உண்டாக்கினார்கள்; பிறகு பெரிய கப்பல்களும் இறுதியாகச் சண்டைக் கப்பல்களும் கட்டியிருக்கிறார்கள்.

நாம் இப்பொழுது காகிதத்தில் எழுதுகிறோம். பண்டை நாளில் தோலில் எழுதிவந்தார்கள். அதிலிருந்து அடுத்தபடியாகத் தகடுகளில் வரையத் தொடங்கினார்கள். அதன் வளர்ச்சியாக, ஓலைகளில் கீச்சினார்கள். இன்றைய நாளில் காகிதங்களைக் கண்டுபிடித் திருக்கிறார்கள்.

மனிதர் மண்டையோடும்கூட தலைமுறை தலைமுறையாக மாறி வருகின்றது. இவ் வேற்றுமையை அறிய விரும்பினால் காட்சி சாலையிற் சென்று தோன்று தொட்டுப் பலவேறு காலங்களிலுள்ள மனிதர்களின் மண்டையோடுகளைப் பார்வையிடுவோமே ஆயின் தெள்ளிதில் விளங்கும்.

ஒரு காலத்தில் உள்ள மக்கள் கட்டுமரம் வருணதேவனால் மக்களுக்கெனக் கொடுக்கப்பட்டதென்று எழுதி வைத்திருக்கிறார்கள். அதைப் படகாக்க முடியுமென எவரேனும் முன்வந்தால் அவர்கள் நாஸ்திகர்களானதோடு தண்டிக்கவும் பட்டிருக்கிறார்கள். இது போலவே ஒவ்வொரு காலத்து மக்களும் ஒவ்வொரு பொருளும் இந்த இந்தக் கடவுளால் கொடுக்கப் பட்டதெனவும், இந்த இந்தத் தேவர்களால் கொடுக்கப்பட்டதெனவும் எழுதிவைத்திருக்கிறார்கள். மழை வருணதேவனால் பொழியப்படுகின்றதென்றும், காற்று வாயு தேவனால் வீசப்படுகின்றதென்றும், வெயில் அக்னி பகவானால் அடிக்கப்படுகின்றதென்றும், பூமி ஆதிசேஷனால் சுமக்கப்படுகின்ற

தென்றும் கூறப்படுகின்றது. ஆறு, குளம், கடல் முதலிய நீர் நிலைகளிலுள்ள நீரானது சூரிய வெப்பத்தால் ஆவியாகமாறி உயரச் சென்று கார்ப்படலங்களாகி குளிர்ந்த காற்றுபட்டவுடன் மழையாகப் பொழிகின்றது என்று கூறின் இன்றும்கூட இதை நம்பாது நம்மை நாத்திகவாதி எனக் கூறும் வைதீகர்களும் இருக்கின்றார்கள். காற்று இயற்கையிலேயே இருக்கின்றதென்றும் அதைப் பிரிக்கவும் சேர்க்கவும் முடியும் என்றும், வெயில் சூரிய ஒளியினால் உண்டாகின்றதென்றும் கூறினால் எத்தனைபேர் அதற்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள். பூமி ஆதிசேஷனால் சுமக்கப்படுகின்றது என்று கூறுகின்றீர்களே ஆதிசேஷனுக்குத் தலைவலிக்காதா? ஓய்வு வேண்டாமா? இவ்வளவு பெரிய உலகத்தை ஒரு பாம்பு சுமக்கத்தான் முடியுமா? என்று கேட்டால் எத்தனை மதக்குருக்கள் நம்மேல் சீற்றங்கொள்கின்றார்கள். ஞாயிற்றுக்கும், பூமிக்கும் இடை இடையே உள் கவர்ச்சிவலி (Force of Attraction) யில் ஒன்றுக்கொன்று நின்றுகொண்டிருக்கின்றது என முதலில் கூறியவர்களைக் கடவுள் இல்லையெனக் கூறுகிறார்கள் எனத் தூற்றினார்கள். தங்கள் அறிவுக்கு ஒவ்வாத பழைய கட்டுக்கதைகளை யாரேனும் புதுப்பிக்கவோ மறுக்கவோ வந்தால் நாத்திகர்களெனக் குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டே வந்திருக்கிறார்கள். ஆதலால் யான் உங்களை வேண்டிக்கொள்வது யாதெனில் நடுநிலைமையோடு எதையும் எண்ணுங்கள். முன்னாளில் உலகம் தட்டையென எண்ணிவந்தார்கள்; இப்பொழுது உருண்டையெனக் கண்டுபிடித்திருக்கிறார்கள்; பண்டைநாளில் வலிமையே வெல்லும் என எண்ணிவந்தார்கள். இப்பொழுது உண்மையே வெல்லக் காண்கிறோம்.

அன்பர்களே! வளர்ச்சியான வழிகளில் செல்லுங்கள். ஒவ்வொருவரும் செல்லும் வழிகளில் உரிமையுடையவராய் வாழுங்கள். இக் குற்றம் ஒன்றையே நான் உங்கள் முன்னால் கூறுகின்றேன். ஒவ்வொருவரும் தங்கள் எண்ணங்களை வெளியிடட்டும். கடவுள் ஒருவர் இருப்பாரேயானால் பாசாங்கும் போலியும் நிறைந்தவர்களின் வணக்கத்தால் திருப்தியடையப் போவதில்லை. உண்மையான அவநம்பிக்கை உடையவர்களிடத்திலும், உண்மையான நாத்திகர்களிடத்திலும் பாசாங்குக்காரர்களிடத்திலும் அன்பு செலுத்துவதைவிடக் கூடுதலாக அன்பு செலுத்துவார் என்பது திண்ணம்.

என்னுடைய கொள்கை யாதெனில் இயற்கைக்கு ஒத்து நடக்க வேண்டும்; இயற்கையில் நடப்பனவற்றை முழுமனத்துடன் ஏற்று ஆராய்தல் வேண்டும். ஒவ்வொருவருடையவும் புது எண்ணங்களைக் கேட்டல் வேண்டும். இவ்வாறிருந்தால் முன்னேற முடியும்.


தற்பொழுதுள்ள சமயப்பற்றுடையாரெல்லாம் உலகத்தையே அறியாது பழைய மூடப்பழக்க வழக்கங்களையே பற்றுக்கோடாகப்



பிடித்துக்கொண்டு அவற்றை நிலைநாட்ட அல்லோல கல்லோலப்படுகிறார்கள். யாரேனும் ஒரு புது உணர்ச்சியைக் கிளர்த்துவார்களேயானால் நாத்திகத்தைப் பரப்ப வந்து விட்டார்களென்றும், மக்களை அலைந்த உள்ளத்தினராக்க வந்து விட்டார்களென்றும், இந்த முன்னேற்றத்தைவிட பழைய வழக்கங்களே சிறந்தனவென்றும் அவர்கள் கூக்குரலிடத் தொடங்குகிறார்கள். ஆதலின் கடலைப் போன்று விரிந்த மனப்பான்மையுடையராய் வாழுங்கள். காலம் நாளுக்குநாள் முன்னேறிச் செல்கின்றது. நாமும் முன்னேறிக் கொண்டே செல்கின்றோம். கோவில்களும் நாளுக்குநாள் முன்னேறி வருகின்றன. அவைகள் காலத்திற்கேற்பச் சில செயல்களை அமைத்துக்கொண்டும், சிலவற்றை வெளிப்படையாக மாற்றிக் கொண்டும் முன்னேறுகின்றன. முன்னாளில் எவரேனும் சமயக்கட்டுப்பாட்டிற்கு எதிரிடையாக உரைப்பரேல் அவரைக் கொளுத்தி விடுவார்கள். இப்பொழுது யான் இவ்வளவு திடமாகக் கூறுவதற்கும் கால முன்னேற்றமே காரணமாகும்.

மக்கள் எவ்வளவு தூரம் செயலை அறிவோடொத்துச் செய்கின்றார்களோ அவ்வளவு தூரம் உலகில் முன்னேறக் காண்கின்றோம். எந்த மாலுமி ஒருவன் கடலிலுள்ள சுழிகளையும், நீர் ஓட்டங்களையும் அறியாதவனாயிருக்கிறானோ அவன் எப்பொழுதும் நடுநடுக்கமுள்ளவனாகவே இருக்கிறான். அது போலவே உழவாளியும் நல்ல விளைவின் நுட்பத்தை யறியாத வரையிலும் அது அவன் எல்லையைக் கடந்து நிற்கின்றது. ஒரு பொறியில் ஒரு சக்கரம் சுற்றவில்லையானால் அதைப் செப்பனிடுவதை விட்டு விட்டுக் கடவுளிடத்தில் பாரத்தைப் போடவில்லை. அவ்வாறு ஓடாதிருக்க ஏதேனும் காரணம் வேண்டுமெனக் கருதுகின்றோம். அதிலுள்ள குறைபாட்டை நீக்கி நிறைப்பாடாக்கி அச் சக்கரம் செவ்வனே சுழலும் வரையிலும் வேலை செய்கின்றோம். மக்கள் முன்னேறுந்தோறும் தங்கள் செயல்களை மிக மதிக்கிறார்கள். தன்னாசை கடவுள் தன்மையாக மதிக்கிறார்கள். தன்னைத்தான் மதிக்கும்பொழுது பிறரையும் மதிக்கத் தொடங்குகிறார்கள். எப்பொழுது உலகினர் யாவரும் உரிமையில் திளைப்பார்களோ அப்பொழுதே உலகம் உண்மையான நாகரிகம் அடையும்.






கணவனை இழந்த பெண் தன் ஆயுட்காலமெல்லாம் அவனையே நினைந்து வருந்துகிறாள்.

மனைவியைப் பிரிந்த ஆண் விரைவிலேயே மறுமணம் செய்துகொள்கிறான்.

**இது நீதியா ?**



# நாகராஜனின் ஜாதிப் பிரஷ்டம்

[திரு. மு. வெ. நல்லசாமி]

அந்திமாலை வெகு ரம்மியமா யிருந்தது. தென்றல் காற்று மிகவும் மெல்லென வீசியது. அக்காற்றின் ஸ்பரிசம் தேகத்தின் ஒவ்வொரு அவயவங்களுக்கும் ஆனந்தத்தை யளித்தது. மேகங்கள் சிறிது சிறிதாய்க் காற்றில் கலந்து கொண்டிருந்தன. பறவைகள் தங்கள் கூடுகளுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தன.

அவ்வழகிய மாலை நேரத்தில், கமலாபுரத்தின் சிங்கார வரதப் பெருமாள் தெப்பக்குளத்து வடகரையில், ஒரு வாலிபன் பெரிய சிந்தனையில் மூழ்கினவனாய்க் காணப்பட்டான். அவன் அடிக்கடி கீழ்த் திசையை நோக்கிக் கொண்டிருந்ததானது யார் வரவையோ எதிர்பார்க்கிறானெனக் காட்டியது.

சற்று நேரத்தில் ஒரு பெண் அவ்விடத்தை நோக்கி வந்துகொண்டிருந்தாள். அவளைக் கண்டதே அவ்வாலிபன் சற்று சந்தோஷத்தோடு நோக்கினான்; என்றாலும் மீண்டும் அவனுடைய முகத்தில் விசனக் குறியே தோன்றிற்று.

சிறிது நேரத்தில் அவளும் அவ்வாலிபனருகில் வந்து விட்டாள். அவள் வதனம் மிகவும் வாடி யிருந்தது. அவளுடைய கண்களில் கண்ணீர்த் திவலைகள் தேங்கி நின்றன. அவள் அவ்வாலிபனை நோக்கி, 'அன்பரே! தாங்கள் என்னைக் காதலிப்பதினின்றும் விலகி விட வேண்டும்!' நான் ஒரு 'கழித்தெறிந்த காகிதத் துண்டு' என்று என்னைத் தள்ளிவிட வேண்டும்' என்றாள்.

அதைக் கேட்ட அவ்வாலிபன் (நாகராஜன் - இதுதான் அவன் பெயர்) 'சிவகாமி! நீ இப்படிச் சொல்வதானது என் மனத்தைப் புண்படுத்துவது போலிருக்கிறது. நான் எந்தவித கஷ்டப்பட்டாலும் உன்னை யடையாதிருக்க மாட்டேன். என்னுடைய கஷ்டம் ஒரு பெரிதல்ல. உன் பொருட்டு என் உயிரையும் தியாகஞ் செய்யத் தயாரா யிருக்கிறேன்' என்றான்.

சிவகாமி:—அன்பரே! தாங்கள் இந்த ஏழையின் பொருட்டு உங்கள் அந்தஸ்தையும் செல்வத்தையும் இழக்க வேண்டாம்! என்னைவிட பதின் மடங்கு அழகும், செல்வமும் படைத்த எத்தனையோ கன்னிகைக ளிருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தியை உங்கள் குலத் துதித்தவளை—உங்கள் தந்தையாரின் இஷ்டப்படிக்குக் கல்யாணஞ் செய்துகொண்டு, சுகமாய் வாழ்வதே எனக்குப் பெரு மகிழ்ச்சியை யளிக்கும். நான் இப்படியே என் வாழ்நாளைக் கழித்து விடுவேன். என்னைப்பற்றித் தாங்கள் ஏதும் கவலை கொள்ள வேண்டாம். அன்பரே! என்னை உங்களுக்குச் சொந்தமான ஒரு பொம்மைச் சித்திரம் என்றே எண்ணிக் கொள்ளுங்கள். அதுவே எனக்குத் திருப்தி யளிக்கும்.

நாக:—சிவகாமி! என் சிந்தை கவர்ந்த காதலி! நீ இவ்விதஞ் செய்வது அழகாகாது. செல்வமிழப்பேன் சிறப்பிழப்பேன் இல்லம் விட்டுச்—செல்வதற்கும் பின்வாங்கேன் சேயிழையே! ஆருயிரே! என் செல்வம் இழந்திடினும், என் தாய் தந்தையர் வெறுத்திடினும், என் ஜாதியார் என்னை விலக்கிடினும், நான் அன்று கலாசாலையில் சொன்ன வாக்குத் தத்தத்தை மறவேன்! நீ எக்குலத்தவளாயினும், எனக்கு நற்குலத்தவளாகவே விளங்குகிறாய். ஜாதியின் கொடுமை நம்மைவிட்டு ஓடட்டும். ஜாதிப்பழக்க வழக்க ஒழுங்குகளும் மூடக் கொள்கைகள் நசுங்கட்டும்.

**அந்த நேரத்தில் அந்த இடத்தில் அவ்விருவரைத் தவிர வேறு ஒருவரும் காணப்படவில்லை. அவ்விருவருக்கும் இடையில், இயற்கை அன்னை தன் பூரண அதிகாரத்தையும் செலுத்த ஆரம்பித்தாள். அவ்வழகிய வாலிபனும், சித்திரம்போன்ற அப்பெண் மணியும் சிறிது நேரம் ஒருவரை ஒருவர் அன்போடு நோக்கினர். அவ்வளவுதான். இருவர் முகங்களும் ஒன்றையொன்று பல முறை முத்தமிட்டுக் கொண்டன. அவர்களுடைய காதல் வெள்ளம் கரை கடந்தது. ஜாதி வேற்றுமை அங்கே கிடையாது. ஜாதிக் கொடுமை தலை காட்டவில்லை. ஆனால் அவர்களுக்கு இடையில் பெரிய பாறை குறுக்கிட்டுக் கொண்டிருக்கிறது. பகிரங்கமாய்க் கல்யாணஞ் செய்து கொள்ள அவர்களால் முடியவில்லை. இவ்வளவு இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் இடையில் தத்தளிக்கும் இவர்கள் கதி யாது?**

* * *



சுமார் 15-வருடங்களுக்கு முன் கமலாபுரத்தின் வேளாளர் தெருவிலுள்ள ஒரு சிறு கூரை வீட்டில், சிந்தாமணிப் பிள்ளையும், அவர் மனைவி செல்வாம்பாளும் வசித்து வந்தார்கள். அவர்கள் வறுமை யுடையவர்களென்பதற்கு அடையாளமாக அவர்களுடைய வீடு இருந்த நிலைமையே சாக்ஷியா யிருந்தது. அத் தெருவிலுள்ள வேளாள சமூகத்தினர்களெல்லாம் அவர்களுக்குப் பந்துக்கள்தான்; ஆனால் அவர்கள் வறுமையி லிருந்ததால் எல்லோரும் அவர்களைத் தங்கள் பந்துக்களென்று சொல்லிக்கொள்ள வெட்கப்பட்டனர். சிந்தாமணிப் பிள்ளையும், செல்வாம்பாளும் மிகவும் நற்சிந்தையும் அடக்கமும் உடையவர்கள். வெகுகாலம் வரை குழந்தை யில்லாம லிருந்து, கடைசியாக ஒரு பெண் குழந்தை ஜனித்தது. குழந்தை பிறந்த காலத்தில், சிந்தாமணிப் பிள்ளைக்கு வயது 45. அவருடைய அக்காள், கணவனை இழந்ததால் அவளும் அவருடைய குடும்பத்திலேயே வசிக்கிறாள். வறுமையோடு வறுமையாய் அவளையும் ஆதரிக்க வேண்டிய நிலை சிந்தாமணிப் பிள்ளைக்கு ஏற்பட்டது. கடவுளின் சோதனை!

சிந்தாமணிப் பிள்ளையின் குமாரத்திக்கு வயது 5-ஆகி விட்டது. அந்தச் சமயம், சிந்தாமணிப் பிள்ளை இறந்து விட்டார். அவருடைய மனைவி செல்வாம்பாளும், அவருடைய சகோதரியும் ஆதரிப்பாரின்றி அதிக கஷ்டமடைந்தார்கள். பெண் பிள்ளைகளால் வேறு வேலை ஒன்றும் செய்ய முடியா விட்டாலும், 'ராட்டை' சுற்ற மட்டும் பின் வாங்கவில்லை. அவர்கள் வீட்டில் உபயோகமற்றதென்று சுமார் நூறு வருடங்களுக்கு முன், வீட்டு மேல் வாரத்தில் கட்டித் தொங்க விட்டிருந்த 'ராட்டி'னத்துக்குப் புத்துயிர் உண்டாயிற்று. 'பாட்டியின் ராட்டினம் பலனைத் தந்தது' என்னும் வாக்கியம் உறுதியாயிற்று.

மூதாட்டிகளிருவரும் கஷ்டப்பட்டாலும், அவர்கள் சந்தோஷமடையக்கூடிய ஒரு வஸ்துவையும் உடைத்தா யிருந்தார்கள். அது அப்பெண் குழந்தையே. அவள் மண் வீடு கட்டி மாப்பாச்சி பிள்ளை வைத்து விளையாடுவதுடன் நின்று விடுவதில்லை. அவள் வாயி லிருந்து

'ராட்டினமே ராட்டினமே ராஜாத்தி ராட்டினமே! நல்லதொரு சக்கரமும், நடைவண்டிச் சட்டம் வைத்து, மெல்ல மெல்ல சுற்றுகிறாய் விளையாட 'வாராயோ?...........ராட்டினமே ராட்டினமே ராஜாத்தி ராட்டினமே!' என்று வரும் சிறு பாட்டு அவர்களுக்குத் தெவிட்டாத இன்பமா யிருந்தது. அப்பெண் குழந்தைக்கு 6-வயது ஆனபொழுது, கமலாபுரத்தின் கலாசாலையில் வைக்கப் பட்டாள். படிப்பில் மிகுந்த கவனமுள்ளவ ளாகையால் 2-வருடங்களுக்குள் மூன்றாம் வகுப்பில் வாசித்து வந்தாள்.

கமலாபுரத்திலுள்ள ஐயன் செட்டி தெருவில் வசிக்கும் சுங்குராம செட்டியார் குடும்பம் பரம்பரையாகச் செல்வம் படைத்த குடும்பம். கிட்டத்தட்ட இரண்டு லக்ஷத்துக்குச் சொத்திருக்கிறது. அக்குடும்பத்தில் இப்போது பலராம செட்டியாரே குடும்பத் தலைவரா யிருக்கிறார். மிகுந்த வைதீகமும், பழங்கொள்கைகளில் இம்மியும் பிசகாதவருமான பலராம செட்டியார், தம் மூதாதைகள் வாழ்ந்த பெருமையைத் தம் வீட்டுக்கு வரும் விருந்தாளிகளிடம் அவிழ்த்துக் கொட்டி அளந்துகொண்டே இருப்பார். ஜாதி வித்தியாசமில்லை யென்றால் காதைப் பொத்திக் கொள்வார். தீண்டாமை இல்லையென்றால், மாண்டாலும் விடமாட்டேனென்பார். தீண்டாதாரென்போரைக் கண்டால் தீட்டுப்பட்டுவிட்டதே யென்று சொல்லி, ஸ்நானம் செய்து கொண்டுதான் வீட்டில் நுழைவார். இதற்குப் பயந்து வீட்டை விட்டுக்கூட அதிகம் வெளியே போவதில்லை.

இந்தப் பெரியாருக்கு அனுசரணையாக, மூன்று குமாரர்களிருந்தார்கள். நான்காவது பையன்மட்டும் 'சேற்றில் முளைத்தெழுந்த செந்தாமரைப் பூ'ப்போல இவருடைய கொள்கைகளுக்கெல்லாம் எதிரிடையா யிருந்தான். அதனால் பலராம செட்டியாருக்கு இளைய புத்திரன்மேல் வாஞ்சை யில்லா திருந்தது. அவனுக்கு வயது ஐந்தான பொழுது, அவனும் கமலாபுரத்தின் கலாசாலையிலேயே படித்து வந்தான்.

பலராம செட்டியார் மகன் நாகராஜனும், சிந்தாமணிப் பிள்ளை மகள் சிவகாமியும் ஒரே பள்ளிக்கூடத்தில், ஒரே வகுப்பில் படித்து வந்தார்கள். செல்வ நிலையில் இருவருக்கும், மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாச மிருப்பினும், மனோநிலையில் இணை பிரியாத நேசர்களா யிருந்தார்கள். அவர்களுடைய அன்பு நாளொரு விதமும், பொழுதொரு வளர்ச்சியும் பெற்றது.

நாகராஜனுக்கு வயது இப்போது 22. சிவகாமிக்கு வயது 17. இரண்டுபேரும் பள்ளிப் படிப்பைவிட்டு நீங்கி விட்டார்கள்; என்றாலும், நாகராஜன் தினம் இருமுறை சிவகாமியின் வீட்டுக்குப் போகாம லிருப்பதில்லை. அவன் சிவகாமியின் குடும்பத்துக்கு வேண்டிய பொருளுதவியும் செய்து வந்தான். ஆனால் சிறிது காலத்துக்குள் பலராம செட்டியாருக்கு இது விஷயம் தெரிந்ததே, அவர் நாகராஜன் விஷயத்தில் மிகக் கடுமையாக நடந்துகொண்டார். இனி சிவகாமி வீட்டுப் பக்கம் போகக் கூடாதென்றும், மீறிப் போனால் தம் சொத்திலிருந்து கால் துட்டும் பாகம் கொடுக்க முடியாதென்றும் கண்டிப்பாய்ச் சொன்னதுடன், தம் தமக்கையின் புத்திரியை விவாகஞ் செய்து கொள்ளும்படிக்கும் சொன்னார்.



நாகராஜன் தன் தந்தையிடம் மிகப் பணிவுடன், தான் சிவகாமியைக் கல்யாணஞ் செய்து கொள்வதாய் வாக்குத்தத்தம் செய்து கொடுத்திருப்பதாயும், அதை மீறி நடக்க தன் மனம் இடங் கொடுக்கவில்லை யென்றும், இப்போது ஜாதி வித்தியாசம் என்பதில்லையென்றும், ஆகையால் சிவகாமியையே மண முடித்து வைக்க வேண்டுமென்றும் எவ்வளவோ கெஞ்சினான். ஆனால் பலராம செட்டியார் மனம் இசையவில்லை. அவர் கடுகடுத்த முகத்துடன், 'அடே போக்கிரி! தகப்பன் சொல்வதைக் கேட்காத தரிதலை. நீ என் முகத்தில் இனி விழிக்காதே!



இன்று முதல் நீ எனக்கு மகனல்ல, நான் உனக்குத் தந்தையல்ல, ஓடிப்போ வீட்டை விட்டு, உனக்கு என் சொத்தில் இம்மியும் கிடைக்காது' என்று மேலும் வாயில் வந்தபடி திட்டினார்.

நாகராஜனுக்குத் தன் தந்தைமேல் வெறுப்பாய் விட்டது. சிவகாமியைத் தவிர வேறு பெண்ணை மணப்பதென்றால் இந்தப் பிறப்பில் அவன் மனம் சம்மதிக்காது. ஆகவே அவன் மனம் உடைந்தவனாய் வெளியே போனான். அவன் மனம் ஒரு நிலையிலில்லை. சிவகாமியை மணந்தால், தன் தந்தையின் சொத்தில் ஒரு தூசி கூட கிடைக்க மாட்டாதென்று நன்றா யறிந்தான். தன் தந்தையிடம் எல்லா ரொக்கமும், நகையுமா யிருப்பதால் வியாஜிய மூலமாய்ப் போவதென்றாலும் முடியாது. தன் தந்தையின் பணம் பெரிதா? அல்லது சிவகாமியின் குணம் பெரிதா? என்று யோஜித்தான். கடைசியாய் எச்செல்வம் போனாலும், தன் ஜாதியிலிருந்து நீங்கினாலும், சிவகாமியை மணப்பதே மேல் என்று கருதி அவள் வீட்டுக்குப் போனான்.

எல்லா விஷயங்களையும் தன் வீட்டில் நடந்தபடியே சொன்னான். சிவகாமியும், அவள் தாயும், அவள் அத்தையும் நாகராஜனிடம் அவன் தந்தை சொன்னபடியே அவர்கள் குலத்தில் சொந்தக்காரர் வீட்டில் ஒரு பெண்ணை மணப்பதுவே சிலாக்கியமென்றும், 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்றும் வேண்டிய வரை சொன்னார்கள். நாகராஜன் கேட்பதாயில்லை. சிவகாமியின் மனம் மிகுந்த வியாகூலத்துடன் விளங்கியது.

பலராம செட்டியார் கமலாபுரத்தில் பெரிய தனவந்தராயும், வாக்குப் பலமுள்ளவராயு மிருந்ததால், சிவகாமியின் அன்னைக்கும், அத்தையம்மாளுக்கும், நாகராஜன் விஷயத்திலும், சிவகாமியின் விஷயத்திலும் அதிக கவலை யுண்டாகி விட்டது. நாகராஜன் இனி சிவகாமியை மணக்க நினைத்தால் சிவகாமிக்கும், அவர்களுக்கும் நிச்சயம் தீங்கு விளையுமென்றும், ஆதலால் இனி அவ்விஷயத்தை மறந்து விடும்படிக்கும் வேண்டிக்கொண்டார்கள். சிவகாமிக்கு மனோ வேதனை சொல்லி முடியாது. நாகராஜன் மிகுந்த மனச் சோர்வுடன் சிவகாமியை ஒரு முறை பரிதாப நோக்குடன் பார்த்துவிட்டு, செல்ல மனமின்றி சிவகாமியின் வீட்டை விட்டு வெளியே சென்றான். சிவகாமி நளனைப் பிரிந்த தமயந்தி போலானாள்.

நாகராஜன் தன் மன சஞ்சலத்தை மாற்றிக்கொள்ளும் இடம், சிங்கார வரதப் பெருமாள் கோவில் தெப்பக் குளத்தின் வடகரையிலுள்ள ஆலமரத்தடியே. சந்தோஷமான நாளாயினும், சலிப்பான நாளாயினும், ஒவ்வொரு நாள் மாலையிலும் அங்கே போய், நிம்மதியாய் ஒரு மணி நேரமிருப்பான். சிவகாமிக்கு, அவன் அங்கே போய் மாலை நேரத்தைக் கழிப்பது தெரியும். நாகராஜன் அந்த இடத்தில் போய் இருந்தாலும் சிவகாமியின் வீட்டுப் பக்கமே அவன் கண்களும் மனமும் நாடி யிருந்தன. இந்தச் சமயத்தையே நாம் முதலில் பார்த்தோம்.

முதலில் சொல்லியபடி இருவரும் அன்றைய தினமே காந்தர்வ விவாகம் செய்து கொண்டனர். நாகராஜன் மனத்தில் சிவகாமியைத் தவிர பொருளும், பூமியும், நகையும், மணியும் வேறு ஒன்றும் இருப்பதாக நினைக்கவில்லை. அவ்விடத்தைவிட்டு மாலை 6-மணிக்கு இருவரும் சிவகாமியின் வீட்டை யடைந்தார்கள்.

சிவகாமியின் தாயும், அத்தையும் இவர்கள் இருவரும் ஒன்றாய் வருவதைக் கண்டதே திடுக்கிட்டு விட்டார்கள். நாகராஜனும், சிவகாமியும் அம் மூதாட்டிகள் இருவரையும் பணிந்தார்கள். அவர்



களுக்கு விஷயம் புலனாகி விட்டது. மறுநாள் பலராம செட்டியாருக்குத் தகவல் எட்டியது. அவர் இருந்த சொத்துக்களையெல்லாம் தம் குமாரர்கள் மூவருக்கும், சிங்கார வரதப் பெருமாள் கோவிலுக்கும் எழுதி வைத்து விட்டார். தமது இளைய குமாரனைக் கனவில் காண நேரிட்டாலும், எழுந்து கண்ணைக் கழுவிக் கொள்வார். அவர் அதோடு நிற்கவில்லை. அவர் தம் இன பந்துக்களை அழைத்து, தம் மகன் பாவியாய்ப் போய்விட்டானென்றும், ஜாதிப் பிரஷ்டம் செய்ய வேண்டுமென்றும் சொல்லி, அதுபோல் ஜாதிப் பிரஷ்டமும் செய்து விட்டார். அவனைப் பெற்ற பாவந்தீர, பிராமணனுக்கு மனந் திருப்தியாகுமட்டும் போஜன மளித்தார்.



நாகராஜன் இப்போது ராட்டினம் சுற்றுவதுடன் நிற்கவில்லை. ஜாதிவித்தியாசத்தைப் பழிக்க தீவிர பிரசாரம் புரிகிறான். மகாத்மாவின் கோஷ்டியாருடன் மாறுபெயர் வைத்துக் கொண்டு சேவை புரிகிறான். அவன் வீட்டுக்கு வரும் நாட்களில் அவனுக்கு ஆனந்தத்தை யளிக்கும் கீதமான

பொல்லாது ஜாதிவேற்றுமை—புவிதனிலே (பொல்)
இல்லா தொழியவென்று—எல்லாருஞ் செய்தல் நன்று (பொல்)

என்னும் கீதத்தை 'ராட்டின'த்தைச் சுற்றிக் கொண்டே பாடுவாள் சிவகாமி.



# ‘யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்’

[நளினம்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

என் நிலையை அறிந்த அவ்வாலிபர் பதறிய தேகத்தவராய் இரு கைகளையும் நீட்டியவாறே, ‘என் கண்மணியே! ஜீவா! அஞ்சாதே! உன் மனநிலை யிதுவாயின், அதை நிறைவேற்றுவதே என் கடன். இதனால் எனக்கு எவ்வளவு துன்பம் வரினுஞ் சரி; பலர் என்னைப் பழி தூற்றினுஞ் சரி; எதற்கும் அஞ்சேன். வருவது வருக! என் கடமையைச் செய்யும் விஷயத்தில் எவ்விதக் கட்டுப்பாட்டையும் பொருட்படுத்தேன். யானும் உன்னைக் காதலிக்கிறேன். யானும் உன்னை என் ஆருயிர்க் காதலியாய் ஏற்றுக்கொண்டேன். உன் உயிருள்ள வரை உன்னைக் கைவிடேன். இது உறுதி’ என்று கூறி என்னை அவ்வாறே சேர்த்து அணைத்து மார்புறத் தழுவி என் அதரங்களிலும், கன்னங்களிலும், நெற்றியிலும் மாறி மாறி முத்தமிட்டார். யான் அவரது பிணைப்பில் கட்டுண்டதும் இருவரும் ஓருருவ மாயினோம். அப்புறம் யான் என்பது ஒரு பொருள் இருப்பதாகவே நினைக்கவில்லை. உண்மையாகவே என்னை மறந்தேன்.

இந்நிலையில் எவ்வளவு நேரம் யாங்கள் இருந்தோமோ எனக்குத் தெரியாது. மணி ஏழடிக்கும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்தோம். யாங்கள் ஒன்று சேர்ந்திருந்த சமயத்தில் என் தம்பி மனைவி அங்குவந்து பார்த்து விட்டுச் சென்றாளோ என்று எனக்குச் சந்தேக மேற்பட்டது. யான் அச்சத்தோடு மெல்ல நடந்து சமயலறையினுள் எட்டிப் பார்த்தேன்.



அவள் மிகுந்த ஊக்கமாகச் சமையல் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்ததாகத் தெரிந்தது. எனவே அவள் பார்த்திருக்க மாட்டாள் என்று யான் மனந்தேறி என் காதலர் இருக்கு மிடத்தை யடைந்தேன். அவர் தாம் இனி இங்கிருப்பது சரி யல்ல வென்றும், பிறகு வருவதாகவும் கூறி விட்டு விரைந்து சென்றார்.

இங்ஙனம், என் காதலர் அருளை யான் பெற்றபின்னர், என் உயிர்த்துணைவரிடம் ஒரு பெருமாறுதல் காணப்பட்டது. முன்னெல்லாம் என் தலைவர் எங்கள் வீட்டுக்கு வந்தால், என் தந்தையுடன் பேசி முடிந்தவுடனே, என் அண்ணி முதலியவர்களிடம் அளவளாவி மகிழ்ந்து அவர்கள் குறைகளைக் கேட்டு அவற்றிற்கு வேண்டுவன செய்வார். இப்போதோ அவர்களிடம் அவர் அவ்வளவாக அளவளாவுதல் வைத்துக் கொள்ளவில்லை. என் அண்ணியே ஏதேனும் சொன்னால் அப்போதுதான் அவளுடன் அது சம்பந்தமாகப் பேசுவார். என் தந்தையுடன் உரையாடினவுடனே என்னைக் கண்டு யான் சொல்லுவனவற்றைக் கேட்டு மனமகிழ்ந்து நீண்ட நேரம் என்னோடு பேசிக்கொண் டிருந்துவிட்டுச் சென்றுவிடுவார்.

நாளடைவில் இம்மாறுதலை யுணர்ந்த என் அண்ணி அது காரணமாக மேலும் பொறாமை கொள்ளலானாள். எனவே அவள் ஒரு நாள் தன் தங்கையைப் பார்த்து, ‘பூங்கொடி! பார்த்தாயா! அவர் நம்மிடம் முன்போலப் பேசுகிறாரா என்று. நாம் ஏதேனுஞ் சொல்லப் போனாலும் அதை அவர் காதிலும் வாங்கமாட்டேனென்கிறாரே! எப்போது பார்த்தாலும் அவ் வறுதலியோடுதான் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டு மிருக்கிறார். அம் முண்டை அம் மனிதரை மாமால மெல்லாஞ் செய்து தன் வசப்படுத்திவிட்டாள். அவள் வலையில் மாட்டிக் கொண்டதாலேயே அவர் நம்மை ஏறெடுத்துக்கூடப் பார்க்கமாட்டே னென்கிறார்’ என்று சொன்னாள்.

இதைக்கேட்ட பூங்கொடி ‘அக்கா! அவ்வாறு அபவாதஞ் சொல்லாதே! அவர் அப்பேர்ப்பட்டவரல்ல! நம்தாயின் வேண்டுகோளின்படி அவர் நம்மைத் தம்முடன் பிறந்த சகோதரிகளைப் போலவே நினைத்து அன்பு பாராட்டிவருகிறார்! நாம் கேட்கா முன்னமே அவர் நமக்கு எவ்வளவு உதவிசெய் திருக்கிறார்? அவர் தயாள குணம் யாருக்கு வரும்? நம் மதனி (மைத்துனி) நிராதரவாயிருக்கிறாளே என்ற எண்ணத்தால்தான் அவர் அவளிடம் அதிக சலுகை காட்டுகிறார். அதுவன்றி, நீ சொல்லும் வண்ணம் அவள் வலையில் மாட்டிக்கொண்டு அறிவிழக்கக் கூடியவரல்ல! இவ்வளவு நாள் அவரோடு பழகியும் அவர் குணம் உனக்குத் தெரியவில்லையே! இவளும் அப்பேர்ப்பட்ட தீச்செயலைச் செய்யக்கூடியவளல்லவே! அவரோடு தனியாகப் பேசிக்கொண்டு சிரித்துக்கொண்டு மிருப்பதினாலேயே அவள் அவரிடம் கள்ள நட்பு கொண்டிருக்கிறாள் என்று சொல்லிவிடலாமா! நாம் அவரோடு தனியாக ஒரு அறையிலிருந்து

நீண்ட நேரம் பேசிக்கொண்டிருக்க வில்லையா? நம் கணவன்மார் அது பற்றிச் சந்தேகிக்கலாமல்லவா? அவர்கள் இவர் குணத்தை யறிந்திருப்பதனால்தானே, நாம் அவரோடு தனியாகப்பேசி யிருக்கும் போது அங்குவரக்கூட மாட்டேனென்கின்றனர். நம்மை அச்சமயம் அழைக்கவும் அஞ்சுகின்றனர். இவ்வாறிருக்க, நீ மதனிமீது கொண்ட துவேஷத்தால் விபசாரிப் பட்டங்கட்டிவைப்பது சரியல்ல. இதை யாராகிலும் கேட்டால் ஊரெல்லாம் தூற்றிவிடுவார்களே! இனி இவ்வாறு சொல்லாதே அக்கா!' என்றாள்.

உடனே, என் அண்ணி தன் தங்கைமீது சீறிவிழுந்து, 'இவள் ரொம்ப நியாயங் கற்றவள்! எனக்குப் புத்திசொல்ல வந்துவிட்டாள்! ஏதோ விஷயம் இன்னதென்று சொன்னால், அதைக் கேட்டுக்கொண் டிருப்பதை விட்டு, ஏதேதோ அளக்கிறாள். எனக்கு அவர் தன்மை தெரியாதா! அவர் அருங்குணமணி யென்பதை யானறியேனா? இருந்தாலும், பெண்கள் தளுக்கு மினுக்கில் மயங்காத ஆடவர்களும் உண்டோ! ஜீவா எத்தனை மாயவித்தையெல்லாஞ் செய்து அவரை மயக்கிவந்திருக்கிறாள் என்பது உனக்குத் தெரியுமா? அவர் அவள் காதலுக்குக் கட்டுப்பட்டது அவருடைய தவறல்ல. அவளுடைய சூழ்ச்சித்திறனே அதற்குக் காரணமாகும். இதெல்லாம் அறியாப் பெண்ணாகிய உனக் கெப்படித் தெரியும். உலகானுபவ மில்லாத உன்னிடம் இவ்விஷயத்தைச் சொன்னதே தவறு' என்று கூறிக் கோபமாக அவ்விடத்தை விட்டு எழுந்து போய்விட்டாள். இவர்கள் பேசிய தனைத்தும் என் காதில் விழுந்தது. அப்போது என் மனம் எவ்வாறிருக்கும்! 'நம் களவொழுக்கத்தை இவள் எவ்வாறு அறிந்துகொண்டாளே' என்று நான் ஏங்கினேன். ஆனால் இதைப்பற்றி என் காதலரிடம் யான் சொல்லவில்லை.



மற்றொரு நாள் யானும் என் காதலரும் என் அறையில் பேசிக்கொண் டிருக்கும்போது காதற் பெருக்கால் யான் அவரை மார்புறத் தழுவி முத்தமிட்டேன். அச்சமயம் ஏதோ காரியமாக என் அறையைநோக்கிவந்த என் அண்ணி இக் காட்சியைக் கண்டு விட்டாள். இப்போது என்னைக் கையும் மெய்யுமாக அவள் முன்னர் அகப்பட்டுக் கொண்டேன். அவள் பார்த்துச் சென்றது



என் காதலருக்குத் தெரியாது. அவள் இக் காட்சியைப் பார்த்து விட்டுத் திரும்பும்போது என்னைப் பய முறுத்தும் பாவனையாகப் பார்த்துவிட்டுச் சென்றாள். அச் சம்பவத்திற்குப் பின்னர் நான் என் அண்ணியைப் பார்க்கும்போதெல்லாம் நடுங்குவேன். அவள் கண்ணில் படாம லிருக்கவே விரும்புவேன். ஆனால் என் அண்ணி அதைப்பற்றி யொன்றுங் கேட்கவில்லை. என் காதலரோ டல்லாது மற்றொருவரோடாகிலும் நான் அவ்வாறு இருந்ததைப் பார்த்திருப்பாளே யானால், அவள் அப்போதே அவ் விஷயத்தைப் பகிரங்கப்படுத்திச் சந்தி சிரிக்க வைத்திருப்பாள். என் காதலரிடம் அவள் வைத்திருந்த அன்பும் மதிப்புமே அவ்வாறு அவளைச் செய்யாது தடுத்தது. எனினும், அவள் என்மீது கொண்ட பொறாமை வளர வளர அதை யடக்கிவைக்க முடியாது எங்கள் வீட்டுக்கு வந்துசெல்லும் எதிர் வீட்டுப் பெண்களிடம் பேச்சோடு பேச்சாக விஷயத்தை வெளியிட்டுவிட்டாள். அப் பெண்கள் இதை ஊர் முழுதும் அலர் தூற்றி என்னைப் பழிக்கலானார்கள். அவர் தகுதி யின்னதென்பதை நீங்க ளறிந்தால், அவர்கள் செய்கையைக் கண்டு ஆச்சரியப்பட மாட்டீர்கள். அவர்களுக்குக் கணவன்மாரிருந்தும் மற்றும் பல ஆடவர்களோடு அவர்கள் கள்ள நட்புக்கொண்டு தகாத செய்கைகளில் ஈடுபட்டிருப்பதும், தாய், மகள், மருமகள் அனைவரும் அத் தொழிலையே சிறப்பாகக் கொண்டிருப்பதும் உலகறிந்த இரகசியம். அத்தகைய அப் பெண்கள், கணவனை யிளமையிலேயே இழந்து சிற்றின்ப சுகத்தை யறியா திருக்கும் யான் உத்தம புருடரான ஒருவரைக் காதலராகக்கொண்டு கூடிவருவதை இழிவாகக் கருதிப் பழிப்பது வியக்கத் தக்க தல்லவா !

## VII

இவ்வாறு ஊர் முழுதும் பரவிய இச்செய்தி என் தந்தையின் காதுக் கெட்டியது. அவர் இதைக் கேட்டதும் என்ன நினைத்தார், என்ன செய்தார் என்பதைச் சொல்வதற்குமுன், அவர் பொதுவாகப் பெண்களைப்பற்றி எந்த விதமான அபிப்பிராயங் கொண்டிருந்தா ரென்பதையும், அவர் தகுதி என்ன வென்பதையும் பற்றி அவரோடு வாணாள் முழுதும் உடனிருந்து அனுபவித்து வந்த என் தாய் சொல்லிய சில விஷயங்களை இங்கே குறிப்பிடுவது அவசியமென நினைக்கிறேன். ஆனால் அவரைப்பற்றி நான் குறை கூறுவ

தாக நீங்கள் எண்ணக் கூடாது. என் தந்தை பொதுவாகப் பெண்ணுலகையே நம்புவதில்லையாம். 'சேலை கட்டின மாதரை நம்பினால் தெருவில் நின்று தியங்கித் தவிப்பர்' என்று கூறிய புலவர் கூட்டத்தில் சேர்ந்தவர் போலும்! தன்னைப் பெற்ற தாயையே அவர் சந்தேகித்தாராம். ஏனென்றால், எனது பாட்டனுக்கு எங்கள் பாட்டி மூன்றாவது தாரமாம். வயதுசென்ற கிழவருக்கு வாழ்க்கைப்பட்ட கட்டிளம் பெண்ணான தம் தாய் தவறான நடத்தையில் இறங்காது எவ்வாறிருக்க முடியுமென்பது அவரது ஆராய்ச்சியாகும். பின்னர் அழகு மிக்க என் தாயை அவர் மணந்தபோது அழகற்றவராயும், குள்ளமாயுமுள்ள தம்மைத் தம் மனைவி விரும்புவாளா என்று சந்தேகித்து அடிக்கடி என் தாயோடு காரணமில்லாமலே சண்டையிடுவாராம். என் தந்தை யிளமையிலேயே பிறருக்குத் தமிழ் நூல்களைப் பாடஞ்சொலும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தாராம். ஒரு சமயம் ஒரு பார்ப்பன வாலிபரும், நாயுடு வாலிபரும் எங்கள் வீட்டுக்கு வந்து பாடங் கேட்டுக்கொண்டு வந்தார்களாம். அவர்களில் பார்ப்பன வாலிபர் அழகாக இருந்தமையால், எங்கு அவனைக்கண்டு தம் மனைவி மயங்கி அவனோடு கள்ள நட்பு கொள்வாளோ என்று பயந்து, அவர்கள் வந்திருக்கும்போது என் தாயை அடுப்பங்கரையைவிட்டு வெளியே வரக்கூடாதென்று கட்டளையிட்டிருந்தாராம். அவ்வாறிருந்தும் அவர் தம் சந்தேகம் நீங்காமலே, அச் சமயம் என் தாய்க்குப் பிறந்த என் அண்ணனையும், என்னையும் அப் பார்ப்பன வாலிபனோடு சேர்ந்து பெற்றதாகவே கூறி அடிக்கடி துன்புறுத்துவாராம். இவ்வாறு தம் ஆண்மையிலேயே ஐயங்கொண்ட மனிதரும் இவ்வுலகிலுண்டோ! இங்ஙனம் தம் மனைவியைச் சந்தேகிக்கும் இவர் தம் ஒழுக்கங்கெடா திருந்தாரோ என்றால், அவ்வாறும் இல்லை. அவர் மற்றும் பல பெண்களோடு கூடாவொழுக்கங் கொண்டிருந்தாராம். பெண்களிடம் இனிமையாகப் பேசி வசப்படுத்துவதில் அவர் மிகவுங் கெட்டிக்காராராம். எங்கள் வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரியோடும் அவர் தேக சம்பந்தம் வைத்திருந்தாரென்றால் அவர் தகுதியைப் பற்றி அதிகஞ் சொல்வானேன். இதைப்பற்றியெல்லாம் என் தாய் கண்டித்தால் அவளை அநியாயமாக அவர் அடிப்பாராம். யானே நேரே பார்த்த ஒரு சம்பவத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். என் தாய் காச நோயால் இறந்தாள் என்று முன்னர் சொன்னேனன்றோ! அவள் இறந்த பதினாறாம் நாள்—அதாவது உத்தரகிரியை யன்று மாலை



அச் சடங்குக்கு வந்திருந்த அவரது பழங் காதலியான கைம் பெண்ணொருத்தியோடு எங்கள் வீட்டு எதிர் வீட்டுப் புறக்கடையில் கூடிக் குலாவியிருந்ததை ஏதோ காரியமாக அங்கே சென்ற யானும் மற்றிரு பெண்களும் கண்ணாரக் கண்டோம். ஆனால் நாங்கள் இவ் வெட்கக்கேட்டை வெளியே சொல்லவில்லை. தம் சொந்தமனைவி இறந்த பதினாறும் நாளே வேறொரு மாதோடு எம்மனிதனாயினுஞ் சேருவானா? தூர்த்தன்கூட அவ்வாறு செய்யானே? மகா மேதாவியாகிய இவர் இவ்வித தகாத செயலைச் செய்ய எவ்வாறு மனங் கொண்டாரோ? அறியேன். அத்தகைய பெரியாராகிய என் தந்தை பெண்ணுலகைப் பழிப்பதை நீங்கள் ஆச்சரியமாகக்கொள்ள மாட்டீர்களல்லவா? தன்னைப் போலவே மற்றவர்களு மிருப்பார்க ளென்பதுதானே பெரும்பாலாருடைய எண்ணம்.



இனி, என் தந்தையாரது இத் தவறான கொள்கைக் கேற்ப, தாம் பயிலும் நூல்களிலும் பொருள் கொண்டு யாரோடேனும் பெண்களைப்பற்றிப் பேசும்போது சில பாடல்களைப் பிரமாணமாகக் கையாடி வந்தார். அதற்கு ஒரு உதாரணஞ் சொல்லுகிறேன்.

ஒரு நாள் என் காதலரும், தந்தையாரும் மகளிர் நிலைமையைப் பற்றிப் பேசிவரும்போது, எனது தந்தையார், 'பெண்கள் சபலசித்தம் படைத்தவர்கள்; அவர்கள் மனம் நிமிஷத்திற்கு நிமிஷம் மாறும் தன்மையுடையது. தம் கணவன் அழகு வாய்ந்தவனாகவும், இளமையுடையவனாகவும், சங்கீதத்தில் தேர்ச்சி பெற்று இனிமையாகப் பாடும் ஆற்றல் வாய்ந்தவனாகவும், மிகவும் நெருங்கிய உறவுடையவனாகவும் இருந்தாலும் மாதர்கள் மற்ற ஆடவர்களைக் கண்ட காலத்துத் தங்கள் மனத்தை அவர்கள்மீது செலுத்தாது இருக்கமாட்டார்கள். இவ் வுண்மையையே குமரகுருபர சுவாமிகள்,

'எந்நாளழில் மிக்கான் இளையான் இசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான் - வாய்ந்த
நயன்உடை இன்சொல்லான் கேள்எனினும் மாதர்க்கு
அயலார்மேல் ஆகும் மனம்'

என்று அருளி யிருக்கிறார். நம் திருவள்ளுவதேவரே,

'இனம்போன்று இனம்அல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்'

என்று மகளிர் மனம் இடம்பெற்றால் வேறுபடுந் தன்மையை நன்கு விளக்கிக் காட்டி யிருக்கின்றார். ஆதலால், மாதரை நம்பலாகாது. அவர்களுக்குக் கல்வி அளிக்கப்படாது. அவர்களைக் கட்டுத்திட்டத்தில் வைத்துக் காத்தல் வேண்டும்' என்று சொல்லிவருகையில், எனது காதலர் இடைமறித்து, 'பெண்கள் மாத்திரந்தான் சபலசித்த முடையவர்களா? ஆண்கள் சபலசித்த முடையவர்களல்லா! மக்கள் முக்குண வயத்தராய் இருக்கும்போது, யார் மனந்தான் நிமிஷத்திற்கு நிமிஷம் மாறாதிருக்கிறது? 'திருவினும் நல்லாள் மனைக்கிழத்தியேனும், பிறர்மனைக்கே பீடு அழிந்து நிற்பார்' என்று அக் குமாரகுருபர சுவாமிகளே கூறியிருக்கிற அமுதவாக்கை நோக்குங்கள். பெரும்பாலும் ஆடவர்களே பார்க்கும் மங்கையர் மீதெல்லாம் மனத்தைச் செலுத்தி அவர் பிறகோடித் திரிந்து அழிகின்றனர். அவ்விதமிருக்க, பெண்கள்தான் சபலசித்த முடையவர்கள்; பிற ஆடவர்கள் மீது மனத்தைச் செலுத்தும் இயல்புவாய்ந்தவர்கள் என்று கூறுவது சிறிதும் அடாது. 'தான் திருடி அயலாரை நம்பான்' என்றும், 'கூத்திக் கள்ளன் பெண்டாட்டியை நம்பமாட்டான்' என்றும் வழங்குகின்ற சாதாரண பழமொழிகளுக் கிணங்க, தூர்த்தத் தன்மையுடைய ஆடவர்களே பெண்களை இவ்விதமாகக் குறைகூறுவார்கள்; பெண்களிலும் இழிகுணமும், தீய நடத்தையு முடையவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. நல்லது என்று இருந்தால் கெட்டதும்கூட இருக்கத்தானே செய்யும்? அதை விட்டு மாதர்கள் எல்லோருமே பிற ஆடவர்கள்மீது மனத்தைச் செலுத்துபவர்கள் என்று கூறுவது ஒரு சார்பான முடிவாகும். அவ்விதம் நாம் கொள்வோமானால், நாம் எல்லோருமே விபசாரிகளின் பிள்ளைகளாகவே ஆவோம். ஏனென்றால், நம் தாய்மாரும் நம் தந்தையரல்லாத மற்ற ஆடவரை விரும்பியோ—அவர்களோடு சேர்ந்தோதா[illegible] நம்மைப் பெற்றிருக்க வேண்டும். அதுதானே தாங்கள் கூ[illegible]ம் கொள்கையின் கருத்து?' என்று புன் சிரிப்போடு கேட்டார்.


இதற்கு என்ன சமாதானஞ் சொல்வதென்று என் தந்தையார்க்குத் தோன்றவில்லை. அவர் முகம் சாம்பிக் கூம்பியது. எனவே, அவர் பேச்சை வெறு வழியில் திருப்பிவிட்டார். இவர்கள் உரையாடலைக் கேட்டுக்கொண் டிருந்த நாங்கள் கல்வியும், உலகானுபவ



மும் நிறைந்த என் தந்தையின் அறிவைக் காட்டிலும் சிறு பிராயத்தினராகிய என் காதலரின் அறிவு விஞ்சியிருப்பதைக் கண்டு வியப்பெய்தி அவரை உள்ளூற வாழ்த்தினோம். இவற்றிலிருந்து என் தந்தையார் என்மீது வந்த அலர்தூற்றலைக்கேட்டு என்ன நினைந்திருப்பார் என்பதை நீங்களே நினைத்துப் பாருங்கள்.

எனவே, இப் புகாரைக் கேட்ட அன்றிரவு நாங்கள் படுக்கைக்குச் செல்லும்போது, என் தந்தையார் என்னைப் பார்த்து வருத்தத்தோடு, 'ஜீவா! உன் தொல்லையே எனக்குப் பெரிதாயிருக்கிறது. நீ என் உயிர்க்கு உலைவைத்து விடுவாய்போ லிருக்கிறது. உன் நடத்தையில் அவர்கள் சந்தேகங்கொண்டு கண்டவாறு பிதற்றுகிறார்கள். நீ ஆன்மநாதனை நேசிக்கிறதாகவும், அவனுக்குப் பல முறை காதற் கடிதங்கள் எழுதியனுப்புவதாகவும், அவனோடு தனித்திருந்து பலகால் பேசிக் களிப்பதாகவும் அவர்கள் எங்கணும் அலர்தூற்றி வருகிறார்கள். இச் செய்தி காதுக்கெட்டியதும் என் உயிரே போய்விட்டதுபோ லிருக்கிறது......நீ ஏன் ஆன்மநாதனோடு பேசுகிறாய்? இனி நீ அவனோடு பேசுதலாகாது. அவ்வாறு நீ பேசியதாக அறிந்தால் நான் தற்கொலை செய்துகொள்வேன். அவன் இங்கு வந்து வார்த்தையாடிக்கொண் டிருக்கும்போது, நீ அவன் எதிரில் வரப்படாது; அவன் கண்ணிலும் படாது உன் அறையினுள்ளேயே இருக்க வேண்டும். தெரிகிறதா?" என்று கூறி முடித்தார்.

என் தந்தையார் கூறிய வார்த்தைகளையும், அவர் இட்ட கடுமையான கட்டளையையுங் கேட்டு யான் என்ன நிலைமையை அடைந்திருப்பேன் என்று சகோதரிகளே! நீங்கள்தான் உய்த்துணர்ந்துகொள்ளுங்கள். என் மனம் மயங்கியது. தொண்டை துக்கத்தால் அடைத்துக் கொண்டது. எனவே, பேச என் நா எழவில்லை. கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வந்துகொண்டேயிருந்தது. என் தந்தை இதையெல்லாங் கவனியாது வெகு கோபமாகப் படுக்கைக்குச் சென்றார். எனக்கு அன்றிரவெல்லாம் உறக்கம்



வரவே யில்லை. நான் படுக்கையில் புரண்டு கொண்டே

என் தந்தையார் சொன்ன வார்த்தைகளைப் பற்றிச் சிந்தித்துக்கொண் டிருந்தேன். 'ஐயோ! யான் ஆன்மநாதரிடங் காதல் பூண்டு கலந்துறவாடுவது எப்படியோ வெளியாய் விட்டதே! அன்று ஒரு நாள் நான் ஆன்மநாதரைத் தழுவி முத்தமிட்டதை என் அண்ணி பார்த்தாளல்லவா! ஆ! அக் காதகிதான் எதிர் வீட்டு இமயபார்வதியிடத்தும், பக்கத்து வீட்டுப் பங்கஜத்திடத்தும், அயலகத்து அம்மணியிடத்தும் என் களவொழுக்கத்தைப் பறைசாற்றி விட்டாள். ஆ! தெய்வமே! அவள் எங்கிருந்து எனக்கென்று எமனாய் வந்து வாய்த்தாளோ! அவள் இன்னும் என் தலையில் என்னென்ன விதமான திம்பை (பழியை)க் கொண்டுவந்து போடுவாளோ! இவள்தான் தன் கொடுங்குணத்தால் பழி கூறினால், இப் பெண்களாகிலும் சும்மா இருக்கப்படாதா! அவர்கள் ஒன்றை ஒன்பதாகத் திரித்து ஊரெல்லாம் தூற்றிக் கைகொட்டி சிரிக்கிறார்களே! இவர்களென்ன? என்னைப்போல் பெண்களல்லையா? இவர்களெல்லாம் தங்கள் கணவன்மாரோடு சேர்ந்து இன்புற்று வாழ்வது போல், எனக்கும் காதலரோடு கூடி மகிழ்ந்திருக்க விருப்பமிருக்குமென்று தெரியாதா? தாங்கள் எல்லாம் கணவன்மாரோடு கலந்து இன்புற்றிருப்பது தகும்; என்போன்ற ஏழை மகளிர் தாங்கள் விரும்பிய காதலரோடு களித்திருப்பது தகாது என்பது இவர்கள் எண்ணமா? இவர்களும் என்னைப்போன்று விதவைத் தன்மையிலிருப்பார்களானால் இவ்விதம் நினைப்பார்களா? ஆண்டவனே! என் இனத்தாராகிய மகளிரே இவ்வாறு கருதிக் கொடுமைப் படுத்துவார்களானால் ஆடவர் செய்வதைப்பற்றிக் கேட்க வேண்டுமோ?......

(தொடரும்)

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால்
தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும்
கீழ்க்கண்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

லெக்ஷ்மணாஞ்சனம் டிப்போ,
புதுவயல், (இராமநாதபுரம் ஜில்லா)

# * போலித் தேசாபிமானிகள்

[சாமி. சிதம்பரனார்]

## கிளிக் கண்ணிகள்

1. தேசாபிமானி என்று
தீர்மானம் பேசி நின்று
மோசம் புரிவாரடி—கிளியே
மூட மனிதரடி

2. கூட்டத்தில் ஒன்று சொல்வார்
வீட்டுக்குள் வேறு செய்வார்
நாட்டத்தில் கொள்ளாரடி—கிளியே
ஞாயம் உரைப்பாரடி

3. ஏழை மனிதர் துன்பம்
இன்றி மகிழ இன்பம்
சூழப் புரிவோம் என்பார்—கிளியே
சொந்த நலமே காண்பார்

4. சாதி தொலைப்போம் என்பார்
சண்டை கெடுப்போம் என்பார்
பேதம் தவிர்த்தல் செய்யார்—கிளியே
பேசிக் கொடுமை செய்வார்

5. மாந்தர் தலைவர் என்று
மாற்றம் மொழிந்து நின்று
தாந்தீமை செய்வாரடி—கிளியே
தாழ்ந்த மனிதரடி

* பதிப்புரிமை ஆசிரியர்க் குரியது.

6. குடி அரசாட்சி என்பார்
கோனரசாட்சி என்பார்
அடிமை தொலையாரடி—கிளியே
ஆண்மை அழிவாரடி

7. கல்வி வளர்க்க வென்றும்
செல்வம் குவிக்க வென்றும்
சொல்லுவர் செய்யாரடி—கிளியே
சோம்பேறி மாந்தரடி

8. கைத்தொழில் வேண்டும் என்பார்
கவலை கொண்டோம் என்பார்
மெய்த்தொழில் பேணாரடி—கிளியே
மேலுக்குச் சொல்வாரடி

9. பக்கத்து நாடு பாரார்
பண்ணும் செயல்கள் தேரார்
தூக்கத்தில் வாழ்வாரடி—கிளியே
தூங்கிக் கிடப்பாரடி

10. பெண்ணின் உரிமை என்பார்
பேச்சில் சரியே என்பார்
மண்ணில் புரியார் ஒன்றும்—கிளியே
மகிழச் சொல்வார் என்றும்

11. காதல் மணங்கள் என்பார்
காணல் நலமாம் என்பார்
ஓதி ஒழிவாரடி—கிளியே
ஒன்றும் இயற்றாரடி

12. விதவைத் துன்பம் என்பார்
வீழ்த்திடல் வேண்டும் என்பார்
உதவி ஒன்றும் செய்யார்—கிளியே
ஊனம் விளைத்து நிற்பார்.

---

# வினோத பிரமசாரிய நாடகம்

[திரு. ஏ. சொக்கலிங்கம் பிள்ளை]

## இந் நாடகத்தில் வரும் புருஷர்களும் பெண்களும்

ஷண்முகநாதம் பிள்ளை—கதா நாயகன்

கிச்சிகான்—ஷண்முகநாதம் பிள்ளையின் வேலைக்காரன்

வீரண்ணன்—தோட்டக்காரன்

குண்டு வெங்கையன்—புரோகிதன்

கோமளாம்பாள்—ஷண்முகநாதம் பிள்ளையின் மனைவி

மோகனாங்கி—கிச்சிகான் மனைவி.

## காட்சி 1

இடம்—வேலூரில் ஷண்முகநாதம் பிள்ளையின் வீடு.

காலம்—காலை மணி 7.

### கிச்சிகான் பிரவேசம்

*கிச்சிகான்:*—நான் என் எஜமானிடத்தில் வேலைக்கமர்ந்து இரண்டு வருடமாகிறது. இதுவரையும் என் மனைவியை என் எஜமான் கண்ணில் அகப்பட வொட்டாமல் காப்பாற்றி வருகிறேன். அவள் அவருடைய கண்ணில் அகப்பட்டால் இனி எனக்குப் பெண்டாட்டி யென்கிற ஆசையே போய் விடும். இன்றுவரையும் என் எஜமானர் நான் கலியாணமாகாத பிரமசாரி யென்கிற எண்ணத்தோ டிருக்கிறார். இப்படியே இன்னும் ஏமாற்றிக் கொண்டு எப்போதும் இந்த எண்ணத்தோடு இருக்கும்படி செய்கிறேன். எனக்குப் பெண்டாட்டி யிருக்கிறாளென்று பிள்ளையவர்களுக்குத் தெரிய வருமானால் இதற்கு முன்னமே என் வீடு முழுகிப்போ யிருக்கும். இந்தத் தெருவில் பெண்டாட்டியோ டிருப்பவர்களில் அநேகர் 'அவன் எப்போது தொலைவானோ' என்று அழுது கொண்டிருக்கிறார்கள். அவர் பெரிய ஜமீன்தாரி, டிஸ்ரிக்ட் போர்டு மெம்பர், பெஞ்சு மாஜிஸ்டிரேட், பெரிய போக்கிரி. ஆனதால், எப்போது என்ன செய்வாரோ என்று பயந்து சும்மா யிருக்கிறார்கள். தொப்பாச்சாரி பெண்டாட்டி தன் தாய்வீடுபோக உத்தேசித்திருப்பதால், அவள் நிமித்தம் என் எஜமானர் இன்றைய தினம் இரெயிலேறி சைதாபுரத்துக்குப் போகிறார். அம்மா அவர்கள் பிறந்த வீட்டிற்குப் போயிருக்கிறார்கள். இன்றைய தினம் வீடு காலிதான். நான் என் பெண்டாட்டியை இவ்விடங் கொண்டுவந்து, அம்மாவின் படுக்கை அறையில் இன்றைய இராத்திரி முழுதும் சந்தோஷமா யிருப்பேன். வெளியிலிருந்து யாரோ வந்து கொண்டிருக்கிறார்.

## ஷண்முகநாதம் பிள்ளை பிரவேசம்


ஷண்முக:—கிச்சிகா! கிச்சிகா! தொப்பாச்சாரி பெண்டாட்டி இரெயி லுக்குப் போனாளா?

கிச்சிகான்:—இப்போதுதான் போனாள். நீங்கள் பின்னோடே போனால் இரெயில் அகப்படும். சீக்கிரம் புறப்பட வேண்டும். (தானே) நான் இன்றைய இராத்திரிக்கு இவரை யெப்படி யாகிலும் அனுப்பிவிட வேண்டும்.

ஷண்முக:—என்னையுங் கூடப் போகச் சொல்லுகிறாயா? உங்களம்மாள் ஊரிலில்லை. வீட்டைப் பார்த்துக் கொள்ளுகிறாயா?

கிச்சிகா:—அப்படியே, அவசியம் போய் வாருங்கள். நான் பிரமசாரி பெண்டாட்டியிடம் போக வேண்டிய காரியமேயில்லை. இன்றைய இராத்திரி யிங்கேயே படுத்துக் கொண்டிருந்து உங்கள் பொருள் ஒன்றும் போகாமல் பார்த்துக் கொள்ளுகிறேன்.

ஷண்முக:—இதற்குள்ளே உங்களம்மாள் ஊரிலிருந்து வரமாட்டாளே? நான் ஆண்பிள்ளையா யிருந்தும் அவளை விட்டிருக்க நேர்ந்தது. அவள் எனக்குப் பிரயோசனமற்ற பெண்ணா யிருந்தாலும் பத்து நாளாக என்னை விட்டுப் பிறந்த வீட்டில் இருக்க மாட்டாள். நான் அவளை வரும்படி சமாசாரம் சொல்லி யனுப்பாம லிருக்கும் போதே திடீரென்று வண்டியேறி வந்து கொண்டிருப்பாள். அவள் தாய் வீடு சமீபத்தி லிருக்குமூராதலால், இவ்வித அசந்தர்ப்பம் அடிக்கடி வந்து கொண்டிருக்கிறது.




கிச்சிகா:—அந்த விஷயத்தில் தாங்கள் பயப்பட வேண்டியதில்லை. அம்மா அவர்கள் இன்றைய தினம் வரமாட்டார்கள். ஒருகால் வந்தாலும், ஊரில் தகாதாவிலிருக்கும் நிலங்களைப் பார்க்கப் போயிருக்கிறாரென்று தந்திரமாய்ச் சொல்லி விடுகிறேன். இரெயில் மிஞ்சிப்போம். நீங்கள் சீக்கிரம் போக வேண்டும்.

ஷண்முக:—யான் சீக்கிரம் போகவேண்டுமென்று உனக்கு வெகு அவசரமா யிருக்கிறதே அதேன்?

கிச்சிகா:—எனக்கொன்றும் அவசரமில்லை. வேண்டுமானால் ஆயிரம் வருஷம் இங்கேயே யிருங்கள். நீங்கள் ஊரை விட்டுப்போனால் போதுமென்று சந்தோஷிக்க எனக்குப் பெண்டாட்டி யிருக்கிறாளா என்ன?

ஷண்முக:—அடே! பெண்டாட்டி யிருப்பவர்களுக்கு நான் ஊரை விட்டுப் போவேனா வென்றிருக்கிறதே, அதென்ன? நானிப்போது



விபசாரத்தை விட்டுப் பெரிய மனுஷனாகிக் கொண்டிருக்கிறேன். மேல் வருஷத்திலிருந்து அடியோடு விட்டு விடுவேன். தொப்பாச்சாரி பாரியாள் மிக்க அழகி. அவளைப் பாராதிருக்க மனந்தாளவில்லை. யான் போகிறேன். வீடு பத்திரம் நில்லு. உங்களம்மாள் நல்ல வேலைக்காரி யொருத்தியைத் தயார் செய்து வைக்க வேண்டுமென்று சொல்லிப் போனாள். அதனை மறவாதே. இதோ வீட்டின் சாவிகள். நான் திரும்பி வர இரண்டு நாள் செல்லும். இதற்குள் உங்களம்மாள் ஊரிலிருந்து வந்தால் சாவிகளைக் கொடு (என்று போகின்றார்)

கிச்சிகா:—எஜமான் போய் விட்டார். இனி என் பெண்டாட்டி அச்சமில்லாமல் சுயேச்சையாக வரலாம். அவள் வரும்போது வழியில் இவர் கண்ணில் அகப்படாமல் மாத்திரம் வரவேண்டும். அப்படி வந்தால் இன்றைய இராத்திரி என் எஜமானனுடைய படுக்கை யறையிலிருக்குங் கட்டிலின் மெத்தையின் மேல் மோகனாவும் நானும் இராஜா இராணியைப்போ லிருப்போம். அதோ மோகனா வந்து கொண்டிருக்கிறாள்.

## மோகனாங்கி பிரவேசம்

மோகனா:—உன்னெஜமான் ஊருக்குப் போனாரா?

கிச்சிகா:—உன் புண்ணியத்தால் இப்போதுதான் போனார். நீ வரும் வீதிகளிலெங்கும் அவர் எதிர்ப்படவில்லையே? நீ அதிர்ஷ்டசாலி. உனக்கு இன்றைய இராத்திரி அழகிய கட்டிலும் மெத்தையும் கிடைக்கிறது. நீ இராணியைப்போ லிருப்பாய். நீ நம்முடைய கலியாண சங்கதியை யாரோடுஞ் சொல்லாதே.

மோகனா:—யாரோடுஞ் சொல்லேன். என் சிநேகிதிகளாகிய பொன்னி, சுப்பி, மங்கியுடனும்............(யோசித்து) இனி யாரோடேனுஞ் சொல்லுவேனா? என் மாமன் காட்டேரியோடு கூட...............மாட்டேன்.

கிச்சிகா:—சரி, சரி, அழுதாப்போ லிருக்கிறது. உன் இரகசியத்தைக் கூலி வாங்கிக்கொண்டு தமுக்கடிக்கும் ஆளோடு கூடச் சொல்லு. நான் கலியாணமாகாதவன் என்று என் எஜமானரோடு சொல்லி வருகிறேனே, என் இரகசியம் அவருக்குத் தெரிந்தால்—


மோகனா:—யாருடனுஞ் சொல்ல வேண்டாமென்று சத்தியஞ் செய்யக் கைபோட்டுக் கொள்ளுகிறேன்.

கிச்சிகா:—உன்னுடைய இரகசியத்தை நீயே மறைத்துக் கொள்ளக் கூடவில்லையே, மற்றவர்கள் செவ்வையாக மறைப்பார்கள். எப்படியானாலும் என் எஜமானுக்குத் தெரியாமற் போகாது. பெண்களிடத்தில் இரகசியம் மறையாதென்று பெரியோர்கள் சொன்னது வீண் போகுமா?

மோகனா:—ஆம் ஆம், என்னிடத்தில் இரகசியந் தங்காது. இரகசியந் தங்க வேண்டுமானால், நீ எனக்குத் தெரியாமலே என்னைக் கலியாணஞ் செய்து கொள்ளக்கூடாதா?

கிச்சிகா:—சரி, சரி, இது இன்னும் ஆச்சரியமா யிருக்கிறது. உனக்குத் தெரியாமலே உன்னை நான் விவாகஞ் செய்து கொள்ள வேண்டுமா? இந்த தேவ இரகசியம் என்னெஜமானருக்கே ஒழிய எனக்குத் தெரியாது.

மோகனா:—நம்முடைய இரகசியம் உன்னுடைய எஜமானுக்குத் தெரிந்தால் நமக்கென்ன கெடுதி? என்னைப் பார்த்து அவர் சந்தோஷிப்பாரோ என்னமோ? ஒருநாள் என்னை யிட்டுக்கொண்டு போய் அவருக்குக் காட்டு. அவர் மட்டுங் கலியாணஞ் செய்துகொண்டு சுகமனுபவித்துக் கொண்டிருக்கும்போது, வேலைக்காரர் கலியாணஞ் செய்து கொண்டால் அவருக்கேன் கோபம் வரும்?




கிச்சிகா:— மோகனா! உன்னைப் பார்த்தால் அவர் சந்தோஷிப்பார். அவருக்கு விவாகமான பெண்டாட்டி விஷயத்தில் இஷ்டமில்லை. உன்னைப்போலொத்த வயது பெண்ணைப் பார்த்தால் அவருக்குப் பரம சந்தோஷம்.

மோகனா:—அப்படியானால், நான் நம்முடைய இரகசியத்தை எத்தனை நாளைக்கு ஒளிக்கக்கூடும்?

கிச்சிகா:—வெகு நாள் அவசியமில்லை. நானிவரிடத்தில் என்னுடைய வேலையை விட்டு விடும் பரியந்தம் ஒளித்தால் போதும். எனக்கிப்போது முப்பத்திரண்டு வயதாகிறது. நான் கிழவனாகிறபோது என் வேலையை விட்டு விடுகிறேன். அதுவரையும் ஒளிப்பதற்கு உனக்குச் சரிப்படாமற் போனால் என் எஜமான் கிழவராகும் பரியந்தமாகிலும் ஒளித்துவை. அதுபோதும் அவர் என்னைக் காட்டிலும் ஐந்து வருஷம் சின்னவர். நீ அப்படி செய்தால் அவர் எனக்கு வரவர சம்பளம் உயர்த்துவார். மேலும் நானெப்போதும் வேலையை விடாமல் சுகமா யிருப்பேன்.

மோகனா:—நீ வேலையை விட்டு விடும் பரியந்தம் இரகசியத்தை மறைக்கின்றேன். ஆனால், அவர் கிழவராகும் வரையும் மறைக்க முடியாது. எப்படியாகிலும் கஷ்டப்பட்டு மறைக்கப் பார்க்கின்றேன். எனக்காக நீ நாளை முதல் தப்பாமல் வேலையை விட்டு விடப்பார்.

கிச்சிகா:—நான் வேலையை விட்டு விட்டால் சாப்பாடு, புடவை, இரவிக்கை, நகைகள் எங்கிருந்து வரும்?

மோகனா:—ஆனால், நீ மெத்த பணஞ் சம்பாதித்து மெத்தை வீடும், கட்டிலும் போட்டு, எனக்கு வேலைக்காரிகளையும் தாதிகளையும் வைத்து வண்டியிலேற்றி, பயாஸ்கோப்பு, டிராமா முதலிய வேடிக்கைகளைக் காட்டி, இந்த ஊரை யெல்லாஞ் சுற்றி வரும்படி சந்தோஷப்படுத்துகிறாயா?

கிச்சிகா:—நீ சொன்னவற்றை யெல்லாம் இன்றைய இராத்திரியே செய்கிறேன். இப்போது, நாம் அம்மா அவர்கள் படுக்கை யறையிலிருக்கும் கட்டிலின்மேல் படுத்துக் கொள்வோம். இருட்டின பிறகு உன்னை எஜமான



னுடைய வண்டியிலேற்றி, பயாஸ்கோப், ட்ராமா முதலிய வேடிக்கைகளைங் காட்டி வருகிறேன். தோட்டக்கார வீரண்ணன் உனக்கு வேண்டிய காரியக்களைச் செய்வான்.

மோகனா:—அப்படியானால், நான் வீட்டுக்குப் போய், என் கலியாணத்தில் வைத்த மதுரைப் புடவையைக் கட்டிக் கொண்டு வருகிறேன். இதற்குள்ளாக வண்டி, மிட்டாய் இவைகளைச் சித்தப்படுத்து.

கிச்சிகா:—போய் அஞ்சி நிமிஷத்தில் வரவேணும். மிட்டாய் தயார் செய்கிறேன். நாம் மிட்டாய் சாப்பிட்ட பிறகு குளிர்ந்த காற்றில் உலாவி வரலாம்.

மோகனா:—நல்ல சந்தனமும், மல்லிகைப் பூவும் வந்திருக்க வேண்டும்.


கிச்சிகா:—அடே வீரண்ணா! தோட்ட வேலையை விட்டு இங்கே வா.

### வீரண்ணன் பிரவேசம்

வீரண்ணன்:—ஐய! ஏன் வரச்சொன்னீர்கள்?

கிச்சிகா:—எஜமானவர்கள் ஊருக்குப் போனபோது, உன்னை, தோட்ட வேலையைவிட்டு இன்றைக்கெல்லாம் என்னோடு கூடவிருந்து யான் சொல்லும் வேலைகளைச் செய்யச்சொன்னார். கேட்டையா? யான் சொல்லும் வேலையைச் செய்யாமற் போவாயானால், இனி உனக்கு வேலையிராது, தெரியுமா? நீ சீக்கிரம் போய்ச் சாப்பிட்டுவந்து, நானும் என் பெண்சாதியும் படுத்துக் கொண்டிருக்கும்போது இன்றைய இராத்திரி எங்களுக்குப் பங்கா இழுக்க வேண்டும். வண்டிக்காரனோடு சொல்லிச் சாயங்காலம் உலாவப்போவதற்கு வண்டி கட்டித் தயாராக வைக்கச்சொல். நீ இப்போது போய், எஜமானுக்கு வாடிக்கையாய் மிட்டாய் கொடுக்கும் கிஷிங்சிங்கு இடத்தில், நான் சொன்னதாக 5 பலம் சர்க்கரை மிட்டாய் பொட்டளங் கட்டிக்கொண்டுவா.

வீரண்ணா:—ஐயா! அப்படியே செய்கிறேன். தண்ணீரில்லாமல் பூச்செடிகள் வதங்கிப் போச்சுதென்று எஜமானவர்கள் கோபித்துக் கொள்வாரே அதற்கு என்ன செய்வது?




கிச்சிகா:— என்னிடத்தில் எதிர்பேசாதே. நான்சொல்லுகிறபடி செய். நீ புதிதாய் வந்தவன். உனக்கு என் சங்கதி தெரியவில்லை. என் உத்தரவென்றால் எஜமானவர்கள் உத்தரவினும் மேலானது. எஜமானுக்குக் கோபம் வந்தாலும் நீ வேலை செய்வாய் எனக்குக் கோபம் வந்தால் ஒரு நிமிஷங்கூட வேலை செய்யமாட்டாய். எஜமானவர்கள் உன்னைக் கோபித்துக் கேட்டால், நான் வேலையின்மேல் அனுப்பியதாகச் சொல்.

வீரண்ண:—அப்படியே.

சிச்சிகா:—முன்னேபோய் மிட்டாய் வாங்கிக்கொண்டுவா. போ சீக்கிரம்.

வீரண்:—பலாப்பழ மிட்டாயா? (போகின்ருன்)

கிச்சிகா:—(தானே) நான் இன்றைய தினம் என் எஜமானரைக் காட்டிலும் மேலானவளு யிருக்கிறேன். இப்போது மோகனுங்கி வந்துகொண்டிருப்பாள். யாரோ வந்துகொண் டிருப்பதுபோல் காலடி சத்தங் கேட்கிறது. அதோ வருவது என் எஜமானரா? பூட்சு சத்தங் கேட்கிறது. அவர்தான் வருகிருர். மோகனு அவர் கண்ணில் தென்பட்டால், ஐயோ தெய்வமே! என் சமுசாரம் முழுகிப்போமே என்ன துர் அதிர்ஷ்டம். இனி என் சமுசாரத்திற்கு என்ளுந் தண்ணீரும் விடவேண்டும். யான் ஏதோ ஒரு காரியமாகப் போவதுபோல் தெருவிலோடிப்போய் என் பெண்டாட்டியை வரவேண்டாமென்று சொல்லிவிட்டு வருகிறேன். இதற்குள் வீரண்ணன் மிட்டாய் வாங்கிக்கொண்டு வரமாட்டான்.

ஷண்முக:—கிச்சிகா!

கிச்சிகா:—(மோகனு, வீரண்ணன் வருகிருர்களோ என்னமோ வென்று வாசலண்டையி லிருந்து பார்த்துக்கொண்டு) ஐய! என்ன நீங்கள் போகவில்லைபோ லிருக்கிறது.

ஷண்முக:—நான் இரெயிலேறப் போனபோது ஒரு வேடிக்கை நடந்தது. டிக்கெட்டு வாங்கிக்கொண்டு, அந்த வேடிக்கையைப் பார்த்துத் திரும்பி வருவோமென்று போனதால், இரெயில் போய்விட்டது. நான் ஜமீன்தாரென்றும், பெஞ்சு மாஜிஸ்டிரேட்டென்றும் கொஞ்சங்கூடப் பாராமல் இரெயில் போய்விட்டது. அவர்கள் காரியத்தை நாளைக்குச் சொல்லுகிறேன். நான் சொன்ன வேடிக்கையை நீ கண்டு பிடிப்பாயா?

கிச்சிகா:—எனக்கு அவ்வளவு புத்தியில்லை. ஆனுலும் ஆகட்டும். உங்களுக்கு எவளோ அழகிய பெண்ணொருத்தி காணப்பட்டாள்போ லிருக்கிறது.

ஷண்முக:—நீ சரியாகக் கண்டு பிடித்தாய். உனக்குக் கொஞ்சம் ஜோதிஷங்கூடத் தெரியும்போ லிருக்கிறது. நீ எங்கள் ஜோதிஷரைக் காட்டிலும் சரியாகச் சொன்னுய். உன்னைப் புத்தியீனனென்று எப்படிச் சொல்வது? நீ புத்தியில் பிரகஸ்பதிதான்.

கிச்சிகா.—எல்லாம் உங்கள் தயை.

ஷண்முக:—மூன்று நாளைக்கு முன் நானும் என் சிநேகிதனும் சேர்ந்து வரும்போது, இரதிதேவியைப் போன்ற அழகான பெண்ணொருத்தி எனக்குக் காணப்பட்டாள். அந்தப் பெண்ணை நான் இரெயிலேறப் போனபோது எனக்குக் கொஞ்சந் தூரமாகக் காணப்பட்டாள். பிறகு யான் வந்து பார்க்கு முன்னமே எந்த வீட்டிற்குள் போனுளோ அவளைக் காணவில்லை. வீதி முழுதும் இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடிவரையும் இரண்டு மூன்று தரந் திரிந்தும் எங்குங் காணப்படாமல் அலைந்துகொண் டிருக்கையில் இரெயில் வண்டி வெகுதூரம் போய்விட்டது. ஆனதால் திரும்பி வீட்டிற்கு வந்தேன்.



கிச்சிகா:—(தானே) இவருக்கு யாரோ ஒரு அழகிய பெண் காணக் கிடைத்ததுபோ லிருக்கிறது. இவரை மறுபடியும் அனுப்பிவிட்டு, நானும் என் பெண்டாட்டியும் சுகமா யிருப்போம். இவரைத் தந்திரமாக எங்கேயாகிலும் பெண்களில்லாத வீட்டின் திண்ணையின்மீது பொழுது விடியுமளவும் உட்காரவைத்து வருகிறேன். ஐயா! நீங்கள் பார்த்தது சிகப்பும் ஒல்லியுமான பெண்ணல்லவா?

ஷண்மு:—ஆம், ஆம். சிகப்புப் பெண்ணே. இன்னுமேதாகிலும் அடையாளம் சொல்.

கிச்சிகா:—அவள் குள்ளமுமல்ல நெட்டையுமல்ல. நடுத்தரமானவளே.

ஷண்மு:—ஆம். மெய்தான், அப்படித்தா னிருப்பாள். இன்னொரு அடையாளஞ் சொல்.

கிச்சிக்கா:—தலைமயிர் கறுத்திருக்கும். கொண்டைபோட் டிருப்பாள்.

ஷண்மு:—எல்லோருங் கொண்டை போடுகிருர்கள். தலை மயிருங் கறுத்தே யிருக்கிறது. இதென்ன அடையாளம்?

கிச்சிகா:—அப்படியானுல், யாருக்கு மில்லாத இன்னொரு அடையாளஞ் சொல்லுகிறேன் கேளுங்கள். அந்தப் பெண் குங்குமப் பொட்டுவைத்திருக்கிருள். கண்ணுக்கு மையிட்டிருக்கிருள்.

ஷண்முக:—இந்த இரண்டு வேலையும் எல்லோரும் செய்கிருர்கள்.

கிச்சிகா:—எல்லோரும் அப்படிச் செய்கிறதில்லை. என் தமயன் பெண்சாதி அப்படிச் செய்யமாட்டாள். அந்த அம்மாள் எப்போதும் பொட்டு வைக்கமாட்டாள். மைவைக்கமாட்டாள். மஞ்சள்பூசமாட்டாள். வளையல் போடமாட்டாள்.

ஷண்மு:—உன் தமயன் பெண்சாதி கைம்பெண்போ லிருக்கிறது.

கிச்சிகா:—ஆமாம். கைம்பெண்போலவே யிருக்கிறது. நீங்கள் சொன்னது என் தமயன் பெண்சாதிதான்.

ஷண்மு:—இப்போது உன் அம்மான் வீட்டில் வேலையிலிருப்பது உன் தமயன் பெண்சாதி அல்லவா?

கிச்சிகா:—அவள் கைம்பெண்ணே. அந்த அம்மாளின் புருஷனுக்குக் கோபம் வந்தால் 'அடி முண்டை, முண்டை' என்று சொல்லுவார். போன வருஷம் அவர் இன்புளியென்சா சுரத்தா லிறந்து போனுர். அவருடைய பெண்டாட்டி மாத்திரமே முண்டைச்சியல்ல.

ஷண்முக:—உன் தமயன் பிழைத்திருக்கும் போதே அவன் பெண்டாட்டி எப்படி முண்டைச்சியானுள்?

கிச்சிகா:—நீங்கள் சும்மா கேள்விகள் கேட்டு என்னைக் கலக்கிவிடாதீர்கள். நீங்கள் 100 கேள்விகள் போட்ட போதிலும் நான் பொய் சொல்லேன். பெரிய ஜமீன்தாராகி வீட்டில் உட்காந்திருக்குந் தங்களுக்கு


உலக விவகாரம் என்ன தெரியும்? உலகத்தில் தேவரகசியம் எவ்வளவோ யிருக்கிறது. நீங்கள் எல்லாந் தெரிந்தவாள்தான். என் சொல்லை நம்புங்கள். புருஷர்கள் பிழைத்திருக்கும் போதே சில பெண்டாட்டிகள் முண்டைச்சிகளா யிருக்கிறார்கள். விவாகமான பிறகும் சில புருஷர்கள் பிரமசாரிகளாகவே யிருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் பல காரணங்களுண்டு. அவற்றை யெல்லாஞ் சொல்வானேன். நீங்கள் பார்த்தது கண்டனூர் கோவிந்தன் மகள் அவள் புருஷன் கிழவன்.

ஷண்முக:—அந்தப் பெண்ணின் சங்கதி யெல்லாம் முன்னமே உனக்குத் தெரியும்போ லிருக்கிறது.

கிச்சிகா:—எனக்கு அவள் சங்கதி யெல்லாந் தெரியும். நாளைய உதயத்திற்குள்ளாக அந்தப் பெண்ணை உங்களுக்குச் சொந்தமாக்குகிறேன். நீங்களிப்போதே புறப்பட்டு, அவள் வீட்டிற்கு எதிரே யிருக்கும் திண்ணையின் மீது இன்றைய இராத்திரி யெல்லாம் படுத்திருக்க வேண்டும். நான் அந்தப் பெண்ணைக் கொண்டு வந்து உங்களுக்கு நேத்திரோற்சவஞ் செய்து வைக்கிறேன். உங்களுக்குத் தெரியாமலே அந்தப் பெண்ணை உங்களிடம் சேர்ப்பதற்கே முயற்சி செய்து கொண்டிருந்தேன்.

ஷண்முக:—அப்படியா! நீ மகாபுத்திசாலி. நீ செய்யும் நன்றியை மறக்க மாட்டேன்.

நீ அந்தப் பெண்ணை எனக்கு அகப்படும்படி செய்வாயானால், உனக்கு ரூபாய் 20 வெகுமதி செய்கிறேன்.




(அப்போது, திடீரென்று தன் புருஷன் பின் பக்கமிருந்து மோகனா உள்ளே வந்து கொண்டிருக்கிறாள்) (ஷண்முகநாதம் பிள்ளை மோகனாவைப்பார்த்து) என் பாக்கியமே பாக்கியம். கிச்சிகா இதோ உன் ரூபாய்களை வாங்கிக்கொள். (கொடுக்கிறார்)

கிச்சிகா:-என்ன! அதிஷ்டமே அதிஷ்டம். பெண் வருமுன்னமேயே ரூபாயைக் கொடுக்கின்றாரே! (பின்னே திரும்பினான். மோகனாவைப் பார்த்தான்.) (மோகனா பிரமித்து நிற்கின்றாள்.)

ஷண்முக:—கிச்சிகா! அந்தப் பெண்ணை ஒரு நொடிக்குள், நினைத்தும் நினையாததற்கு முன்னமே வரவழைத்தாய். இவளுக்கு நூறு வருஷம் ஆயுசிருக்கிறது.



கிச்சிகா:—(தானே) ஐயோ! என் வீடு முழுகிப்போயிற்று.

மோகனா:—கிச்சிகா! நீ என்னை மன்னிக்கவேண்டும். நான் தெரியாமல் அந்த சமயத்தில் வந்தேன்.

ஷண்மு:—சமயமில்லாமற் போகவில்லை. நல்ல சமயத்தில் வந்தாய். என் மனைவி ஊரிலில்லை. கிச்சிகான் வரச்சொன்னது எனக்காகத்தான்.

கிச்சிகா:—(மோகனாவோடு இரகசியமாய்) இவர்தான் என் எஜமானர் ஷண்முகநாதம் பிள்ளை. நான் முன்னமே உனக்கு சொல்லியிருக்கிறேன். நம்முடைய இரகசியம் ஜாக்கிரதை.

ஷண்மு:—சுந்தரி உன் பெயரென்ன!

மோகனா:—என்பெயர் மோகனா. யான் உங்கள் வேலைக்காரி.

கிச்சிகா:—(இரகசியமாக) வேலைக்காரி என்று சொல்லாதே.

மோகனா:—நான் உண்மையாக வேலைக்காரியல்ல. பாலாற்றங்கரையில் குடியிருக்கும் கிழச் செங்கம்மாள் மகள்.

(தொடரும்)

---

வேலைக்காரன்:—

எஜமான் வீட்டில் இல்லை என்று சொல்லச் சொன்னார்.

கடன்காரன்:—

அப்படியானால் நான் வரவில்லை யென்று அவரிடம் சொல்லு.



—பி. என். நரசிம்மன்

தந்தை:—இந்த மருந்தைச் சாப்பிடு.

சிறுவன்:—மாட்டேன்.

தந்தை:—சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும். அதுதான் என் இஷ்டம்.

சிறுவன்:—அப்படியானால் நீங்கள் சாப்பிடுங்கள்.

—பி. என். நரசிம்மன்



# தமிழ்த் தாய்

[காழிக்கண்ணன்]

கள்ளக் காதலரிருவர்கள் ஒரு நாள் கூடிப் பிரிந்தபோது காதலியின் காதி லிருந்த ஒரு பொன்னோலை காதலனின் தலை மயிரிற் சிக்கிக்கொண்டது. அவ்வாறு சிக்கிக் கொண்டதை அறியாமல் விரைந்து அவன் கொல்லைப்புறமாக வெளியே வந்தபொழுது தன் தலைமயிரில் ஒரு பொன்னோலை சிக்கியிருக்கக் கண்டு அதைக் கொல்லையி லிருந்த பாகற் பந்தலில் ஒரு கொடியில் மாட்டிவிட்டுப் போய்விட்டான். ஓலையைக் காணாது வீடெங்கும் தேடிப் பார்த்த காதலி நீராடுவதற்கு ஆற்றங்கரைக்கு வந்த பொழுது, ஆற்றில் ஒரு புறத்தில் தன் காதலன் நீராடிக்கொண் டிருக்கக் கண்டு அவனிருக்கு மிடத்திற்கருகே தானும் ஆற்றி லிறங்கிக்கொண்டே,

‘எண்ணெய்த் தலையழகா இருதோளும் பொன்னழகா
வண்ணமணிக் கூந்தலிலே வந்ததுண்டோ பொன்னோலை?’

என்று மெல்லிய குரலிற் பாடினாள். அதுகேட்ட காதலன் சற்று நேரங் கழித்து,

‘வண்ணமணிக் கூந்தலிலே வந்த துண்டு பொன்னோலை
தோட்டத்துப் பாகலிலே தொங்குதடி பொன்னோலை’

என்று குறிப்புரைத்தான்.

இது காலப்போக்கிற்காகத் தமிழ் நாட்டிற் புனைந்துரைக்கப் படும் குற்றமற்ற சிறு கதைகளில் ஒன்று. எனினும் இக் கதையில் வரும் பாட்டின் நயங்களை என்னென் றுரைப்பது!

* * *



இனி, ஒரு வீட்டில் ஒரு சாவு நேர்ந்தது. அதற்காக ‘எட்டாந் துக்கம்’ என்று ஐந்தாம் நாள் துக்கங் கொண்டாடுவதாக அவ்வீட்டிலுள்ளார் பிற வீட்டிலுள்ள பெண் மக்களுக்குச் சொல்லிவந்தார்கள். அந்த ஐந்தாம் நாளன்று காலை பெண்மக்கள் எல்லோரும் வந்து கூடினார்கள். அத் துக்கத்தில் பெண்கள் மார்பிற் புடைத்துக் கொண்டு அழுவதோடு ‘உரை’ அல்லது ‘பிலாக் கணம்’ சொல்லுவதென்று ஒரு முறையைக் கொண்டாடுவார்கள். அது என்னவென்றால் இறந்தவரின் பிறப்பு, வளர்ப்பு, பெருமை, அருமைகளையும் அவர் சென்ற இடத்தில் அடையவிருக்கும் மேன்மைகளையும் நான்கைந்து சீர்களுக்கு மேற்படாத சொற்களால் பாட்டாகப் புனைந்து இழுத்தாற்போற் சொல்லிக்கொண்டே யழுதலாகும். அதன்படி உரை சொல்ல ஆரம்பித்தார்கள். அப்பொழுது, அண்டை வீட்டிலிருந்து அங்குவந்திருந்த மாமியார், மருமகள் இருவரில் மருமகள் வீட்டுக் கொல்லையில் செழுமையாகப் பாகற்காய்கள் காய்த்துத் தொங்குவதைப் பார்த்து,

‘பாகற்காய் பந்தலிலே,
தொங்குதடி அத்தையரே’

என்று பாட்டோடு பாட்டாய்ச் சொன்னாள். அதற்கு மாமியார்,

‘போகச்சே ஆகட்டும்
பொன்னனையா(ள்) கூவாதே’

என்று பதிலுரைத்தாள்.

அதுகேட்ட அந்த வீட்டுக்காரி, இழவுக்கு வந்து சந்தடி சாக்கில் பாகற்காயை யடித்துப் போக நினைத் திருக்கும் இவர்கள் கருத்தை யறிந்துகொண்டு,

‘ஐயையோ, ஐயையோ!
படுபாவி விட்ட அது
விரைக்கல்லோ, விரைக்கல்லோ’

என்று, பாகற்காய் இறந்துபோனவரால் விரைக்காக விடப்பட்டதாகையால் பறித்து விடவேண்டாம் என்று பாட்டாகவே பாடித் தடுத்தாள்.

இது அழுகையில்வந்த நகைச்சுவைப் பாட்டு. நளினமாக இப்பாட்டுகளின் நடை செல்வது யாவரும் வியக்கத்தக்கது. எளிமை

யும் நயமும் வாய்ந்த இப் பாட்டைக் கட்டிப் பாடியவர்கள் எல்லோரும் பெண்மக்களே. கல்வி நலமில்லாமலும் கற்றுக்கொடுப்பாரில்லாமலும் காலையோ, மாலையோ, கடும்பகலோ, காரிரவோ, மழையோ, மப்போ என்பதில்லாமல் எந்நேரமும் வீட்டு வேலையையன்றி வேறு வேலை செய்யவும் நேரமில்லாமல் இருக்கும் நம் தமிழ்த் தாய்மார்கள் நினைத்தவுடன் எத்தகைய இடர்ப்பாடுமில்லாமல் 'சொல்லி ஒரு கூடை சொல்லாமல் ஒரு கூடை' வார்த்தைகளைக் கோவைப்படவும் அழகாகவும் அடுக்கி விடுவார்கள். அழுகை முறையில் அவர்கள் சொல்லும் பாட்டுக்கு இதனாலன்றோ 'ஒப்பாரி' யென்று பெயர் வாலாயிற்று. அலங்காரம் என்று பொருள்படும் ஒப்பனை யென்ற சொல்லுக்கும் ஒப்பாரி என்ற இந்த சொல்லுக்கும் உள்ள ஒற்றுமையை நோக்கி நாம் மகிழவேண்டாமா? அவர்கள் உரை சொல்லும்போது அவர்களின் வாய்களி லிருந்து வெளிப்படும் எதுகையும், மோனையும், அணியும், அலங்காரமும், சொற்பசுவையும், பொருட்சுவையும் நிறைந்த பாடல்களைக் கேட்கும் ஒவ்வொரு சிறந்த தமிழ்ப் புலவனும் திறந்தவாய் திறந்தாற்போல் அயர்ந்து உட்கார்ந்திருப்பான் என்று கூறவும் வேண்டுமோ? 'காரிகைகற்று நாம் பாடப்புகும் சீரமைந்த பாடல்கள், ஓரிசையுங் கற்றுணராத இந்த இயலிசைக் காரிகையார்தம் ஒப்பாரிப் பாடல்களின் முன் எதிர் நிற்குமோ?' என்று கருதமாட்டானா?

'ஒப்பாரிப் பாட்டை இவ்வளவு உயர்த்திவிட்டீர்களே' என்று கேட்கலாம். அன்பர்களே! ஒப்பாரிப் பாட்டை இலேசாக மதிக்க வேண்டாம். ஒரு தமிழ்த்தாய் ஒற்றைக்குரல் பாய்ச்சி ஒப்பாரி சொல்லி அழுதாளானால் அது 'அப சகுனம்' என்று அப்பாடலின் சொற்களின் அமைப்பினால் நேரக்கூடிய ஓராற்றலுக்கு அஞ்சுவது தமிழ்நாட்டு வழக்கமானால் இன்னும் அதிகங் கூற வேண்டுமோ?

தமிழ் நாட்டில் மக்கள் எல்லோரும் பழைய நாட்களி லிருந்தே நினைத்ததும் பாட்டிலே, உரைத்ததும் பாட்டிலே, அறுத்ததும் பாட்டிலே, அடித்ததும் பாட்டிலே, அழுததும் பாட்டிலே, தொழுததும் பாட்டிலே, எல்லாம் பாட்டிலேதான் என்று சொல்வது பொய்யாமா? திருமகளின் உருவமைந்து கலைமகளின் அருள் நிறைந்து இயற்கையில் விளங்கும் நந் தமிழ்த்தாயர் மாட்டன்றோ பாட்டும் இசையும் பண்ணும் பாவும் யாவும் அமைந்துகிடக்கின்றன! அதனாலன்றோ தமிழைத் தமிழ்த்தாய் என்று அழைக்கின்றனர்!

---

# அசட்டுக் கேள்விகள்

[திரு. டி. எஸ். ராமநாதன் பி. ஏ,]



சுப்பா தீக்ஷிதர் சுவற்றில் மாட்டியிருந்த புகைப் படத்தை அரைமணி நேரம் உற்று நோக்கினார். என் மனைவி கைக்குழந்தையுடன் என் அருகில் வீற்றிருக்கும் காக்ஷி தீக்ஷிதரை யோஜனையில் ஆழ்த்தியது.

தீக்ஷிதர் தலையைச் சொரிந்து கொண்டே போட்டோவையும், என்னையும் மாறி மாறிப் பார்த்தார்.

'போட்டோ பேர்வழி உங்கள் ஜாடையாய்தான் இருக்கிறான்!' என்று ஒரு போடு போட்டார் தீக்ஷிதர்.

எனக்கு வந்த சிரிப்பை அடக்க முடியவில்லை.

'பேர்வழி நான்தான்' என்று ஒருவாறு ஸமாளித்து நிதானமாய் பதில் அளித்தேன்.

'எனக்கு அப்பவே தெரியும்,' என்று புன்முறுவல் செய்தார்.

'பக்கத்தில் இருப்பது உங்கள் ஸம்ஸாரம்தானே.'

'இல்லை இல்லை! அவள் என் பாட்டி!' என்று சீறினேன்.

தீக்ஷிதர் அன்றுமுதல் எங்கள் வீட்டுப் பக்கம் திரும்புவதில்லை

* * *

குப்புப்பாட்டி எங்களூர் வம்பர் மஹா சபைக்குப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட அக்ராசனாதிபதி (ஜன நாயகப் பிரசாரத்தின் மஹிமைதான் என்ன!)

ஒரு நாள் பிற்பகல் சில நண்பர்களுடன் உப்புமா தயார் செய்துகொண் டிருந்தேன்.

குப்பு வெண்கலக்கடையில் யானையைப்போல் வீட்டினுள் நுழைந்தாள்.

'அவ்வளவு உப்பு போடப்படாது. பி. ஏ. பாஸ் செய்தும் உப்புமா கிண்டத் தெரியவில்லையே!' என்ற கர்ஜனை எங்களைக் கலக்கத்தில் ஆழ்த்தியது.

அப்பொழுது மட்டும் எங்கள் காலேஜ் புரொபஸர் அங்கு இருந்திருப்பாரானால், சட்டி உப்புமாவையும் அவர் தலையில் கொட்டியிருப்பேன்.

* * *

கல்யாணம் முடிந்து அன்றுதான் நாங்கள் ஊர் திரும்பினோம். நண்பன் சுப்பன் தபகுபலாய் என்னைப் பார்க்க ஓடி வந்தான்.

'ஏண்டா போக்கிரி! உனக்கு ஆயிடுத்தாமே!' என்று அலறினான். நான் திகைத்துப் போனேன்.

'அது இருக்கட்டும்! உங்கள் மாமனாருக்கு பெண் உண்டா?'

'இல்லை! இல்லை! எல்லாம் பிள்ளைகள்தான்!' என்று ஓர் அதிர் வெடி போட்டேன்.

சுப்பன் முகம் வாடியது. பேர்வழி மெள்ளப் பின் வாங்கினான்.

*　　　*　　　*

லக்னப் பத்திரிகை கொடுக்கும் தினம். சம்மந்திகள் பெண்ணைப் பார்க்க வரும் நேரம்.

சாஸ்திரிகள் ஸம்ஸாரம் பெண்ணுக்குப் பொட்டிட்டு தலைச் சீவி விட்டாள். கண்ணுக்கு மை தீட்டி கையில் கொஞ்சம் வெற்றிலைப் பாக்கு கொடுத்தாள்.

'ஆம்பான் வரப்போரான். வெத்திலை போட்டுக்கோ! வாய் சேப்பா இருக்கும்!' என்று சொல்லிக்கொடுத்தாள் தாயார். பெண் ஆடுபோல் தலையசைத்தாள்.

குறிப்பிட்ட நேரத்தில் சம்மந்திகள் குழுமினர்.

'ஆம்பான் வந்துட்டான்! வாயில் போட்டுக் கட்டுமா?' என்று அலறினாள் கல்யாணப்பெண்.

அவ்வளவுதான்! பெண் வருவதற்கு முன்னமேயே வாயில் போட்டுக்கொள்ள நிற்பதைக் கண்டு பேசாமல் கம்பி நீட்டினர் மாப்பிள்ளை வீட்டினர்.

*　　　*　　　*

அப்பா தீக்ஷிதர் பிள்ளை சுப்புவுக்குக் குடுமிக் கல்யாணம். நாள் நக்ஷத்திரம் பார்த்து நடக்கப் போகிறது சுப காரியம்.

மெழுகி கோலம் போடப் பட்டது. சுப்பு மனையில் உட்கார்ந்தான்.

வந்து விட்டது கேடு காலம் நாவிதர்களுக்கு. வைதீகர் மூலைக்கு மூலைத் தேடிப் பார்த்தனர். ஒரு க்ஷவரகன் கூட அகப் படவில்லை.

'வேறு திதி பார்க்க வேண்டியதுதான்!' என்றார் ஸோம ஸுந்திர கனபாடிகள்.

'மேளக்காரனுக்கு அச்சகாரம் கொடுத்து விட்டேனே!' என்று அலறினார் அப்பா தீக்ஷிதர்.

'க்ஷவரகனில்லாமல் குடுமிக் கல்யாணம் நடத்த சாஸ்திரத்தில் ஆதாரமில்லையே!' என்று ஒரு போடு போட்டார் கனபாடிகள்.

சாஸ்திரத்தில் மட்டும் ஆதாரம் இருந்திருந்தால் க்ஷவரகனில்லாமலேயே அன்று குடுமிக் கல்யாணம் நடந்திருக்கும்.




# இந்திரா

[திரு. வி. சுப்பையா]

'காதல், காதல், காதல்,
காதல் போயிற் காதல்போயிற்
சாதல், சாதல், சாதல்'

என்ற பாரதியின் பொன்மொழிகள் மீண்டும் மீண்டும் ராமநாதன் காதுகளில் ஒலித்தன. கடைசியில் தனது எண்ணங்களெல்லாம் ஆகாயத்தில் கட்டிய கோட்டைகளாகி—பகற் கனவுகளாகி யாவும் இடிந்து தரை மட்டம் ஆனதை உன்னியபொழுது அவனால் இரண்டு துளி கண்ணீராவது சிந்தாமல் இருக்க முடியவில்லை. தன் மனக்கோயிலில் இருத்தி எக்கணமும் பூஜித்துவரும் ராஜத்தின் உயிர்ச்சிலை அடியுடன் எரிக்கப்பட்டு விடுமோ என்ற சந்தேகங்கள் உண்டாகுந் தோறும் ராமநாதன் உடல் பயத்தால் சிலிர்த்தது. இவைகளுக்கெல்லாம் காரணகர்த்தர்களாக இருந்துகொண்டு தன் வாயில் மண்ணை அள்ளிப் போட்டுக்கொண்டு வரும் வைதீகப் பிச்சுக்களின் மீது அவனுக்குச் சகிக்க முடியாத,—அளவு மீறிய கோபம் உண்டாயிற்று. காவிரி நதிக்கரையில் ஆலமரத்தின் அடியில் உட்கார்ந்துகொண்டு, உருக்கி வார்த்த தங்கத் தாம்பாளமே போல் பொன்னியை மேலும் பொன்னிற மாக்கிக்கொண்டு மேற்றிசையில் மறையும் சூரியனைக்கண்டு களித்தவண்ணம் இந்திராவின் நேயத்தில்—என் காதலிலேயே மயக்குண்டு கடத்திய மாலை நேரங்களை எண்ணி ஏங்கினான் ராமநாதன். ஒரு சிறிதும் தான் கனவிலும் கருதாத விதமாக தம்முடைய காதல் வெள்ளத்தில் முட்டுக்கட்டை போடப் பட்டதானது ராமநாதனுக்கு ஒரு இடி விழுந்த மாதிரியாகவே இருந்தது. 'ஜாதகங்கள் இரண்டும் பொருந்தி வரவில்லை' என்ற ஆதாரமற்றதொரு பேய்

எண்ணங்கொண்டு தன்னுடைய காதல் போக்கே—எதிர்கால வாழ்க்கையே சின்னா பின்னப் படுத்தப்பட்டது என்ற விஷயம், அவனுக்கு வைதீகப் பிச்சுக்களின் மீதிருந்த கோபத்தைப் பன்மடங்கு அதிகமாக்கியது.

'அன்பரே!—காலம் கடந்து விட்டது. நான் இனி வைதீகத்திற்கே நம் நாட்டினரின் ஆதாரமற்றதொரு பழக்க வழக்கங்களுக்கே ஒரு பலிப் பொருளாக இருக்கிறேன். மணாளரே—அவ்விதம் உம்மைக் கூப்பிட எனக்குப் பூரண உரிமையுண்டு. உம்மை இனிமேல் நான் காண இயலாதவாறு நேரிடினும் நம்முடைய இருவரது உள்ளமும் வெகு நாட்களுக்கு முன்னமேயே ஒன்று பட்டுவிட்டது. நான் இனிமேல் உமக்கு வெகு தூரத்தில் இருப்பவளாகி விட்டேன்......' என்று இந்திரா தொடர்ந்து மேலும் சொல்லுவதற்குள் ராமநாதன் இடைமறுத்து 'அப்படியானால் நாம் இனிமேல் எப்பொழுதுமே சந்திக்க முடியாது என்பது உனது எண்ணமா?' என்று கேட்டான். இந்திரா தனது புருவங்களின் மேல்வந்து தேங்கி நின்றிருந்த கண்ணீரைத் தன் முந்தானையால் துடைத்துக்கொண்டே 'ஆம், அப்படித்தான். ஆனால் அது என்னுடைய எண்ணமல்ல. இது நம்மவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு கட்டுப்பாடு. இனிமேல் நீங்கள் என்னைப்பார்த்த போதிலும் யாதொன்றும் பேசாது பார்க்காதவர்போலவே போய்விடவேண்டும். இவ்விதம் செய்வதானது உமக்கு மிக்க கஷ்டத்தைக் கொடுக்கும் என்று எனக்குத் தெரியும். ஆனாலும் நாம் இனி அவ்விதம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். அதிருக்கட்டும்; நீங்கள் ஏன் இனி என்னை மறந்து வேறொருத்தியை மணந்து இனிதாக இல்லறம் நடத்துதல் கூடாது? எனது மாமன் மகள் ருக்மணி இருக்கிறாள். அவள் அழகாக இல்லை என்று நீங்கள் சொல்ல முடியாது......' என்றாள். அப்பொழுது அவள் முகத்தின் தோற்றம் எதற்கும் துணிந்தவர்களதே போல் தோன்றியது. சற்று நேரம் ஆலமரத்து இலைகளின் கலகல என்ற சப்தமும் காவிரியின் தெள்ளிய ஓடை பாய்தலால் உண்டாகும் சலசல என்ற ஓசையும் தவிர அவ்விடம் நிச்சப்தமே குடிகொண்டிருந்தது.

ராமநாதன் கண்கள் இப்பொழுது சிவந்துவிட்டன. கோபத்தினாலா அல்லது துக்கத்தினாலா என்பது தெளிவாக விளங்கவில்லை. சிறிது நேரம் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான், பிறகு இந்திராவின் முகத்தை உற்று நோக்கினான். இந்திரா தன் காதலனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்றே எண்ணி விட்டாள். அப்பொழுது ராமநாதனின் சிவந்த கண்களினின்றும் சூடான இரண்டு துளி கண்ணீர் அருகில் உட்கார்ந்திருந்த இந்திராவின் கால்களின்மீது விழுந்தது. ராமநாதன் பொங்கிவரும் தன் துக்கத்தை அடக்கிக்கொண்டே 'இந்திரா! நரகம் என்பது எப்படி இருக்கும் என்று இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. பல நிலையற்ற,—முடிவுகாண இயலாத பல உணர்ச்சிகள் இப்பொழுது என் மனத்தகத்தே தவித்துப் போராடிக் கொண்டிருக்கின்றன. இப்பேர்ப்பட்ட கேள்வியை நீ வினவுவாய் என்று நான் கனவிலும் கருதவில்லை. உன்னை நொந்துகொள்வதில் யாதொரு பிரயோசனமும் இல்லை. எல்லாம் என் தலைவிதி. நீ அப்படிக் கேட்கவேண்டும் என்றும் நான் இப்படி வருந்தவேண்டும் என்றும் என் பழவினை உள்ளது போலும்! இந்திரா! என் முகத்தைப்பார்.........வீணாக வருந்தி அழுவதில் பிரயோசனமில்லை. நான் உன்னை உன் அழகின்பொருட்டு நேசிக்கிறேன் என எண்ணிக்கொண்டாயா? காதல்தீயை—உண்மையாக உண்டாகிக் கொழுந்துவிட்டெறியும் காதல்தீயை யாரே அணைக்கவல்லார்! நான் உயிருடன் இருக்குந் தனிலும் உன்னை மறப்பேன் என எண்ணுகிறாயா? இக்கேள்விக்கு மாத்திரம் விடை சொல்லிவிடு' என்று தழுதழுத்த கம்மியகுரலில் விவரிக்க இயலாத வருத்தத்துடன் கூறினான். இந்திராவால் இதற்குமேல் பொறுக்க முடியவில்லை. அவள் ஓவென அழ ஆரம்பித்துவிட்டாள். ராமநாதன் 'இந்திரா! இந்திரா! அழாதே. உன் அழுகைக்குரல் அதோ தண்ணீர் தூக்கிச் செல்லும் அக் கிழவிக்குக் கேட்கப் போகிறது. இப்பொழுது திடமனதுதான்—எதற்கும் துணிந்த மனதுதான் அவசியமாக வேண்டியது. எனக்குப் பலமுறைகளில் தைரியம் சொல்லிவந்த நீயே அழ ஆரம்பித்துவிட்டதை நோக்க என் மனம் தவிக்கிறது. கடைசியாக நாம் சந்தித்திருக்கும் இப்பொழுதாவது சிறிது சந்தோஷமாக இருப்போம். உன் துக்கத்தை அடக்கிக்கொள்' என்று தேறுதல் கூறினான், அதற்குள் உட்கார்ந்தபடியே ராமநாதன் தோளில் தன் தலையைச் சாய்த்துக்கொண்டு அழுதுகொண்டு இருந்த இந்திரா தலையைச் சற்று நிமிர்த்து 'அன்பரே! அப்படிக் கூப்பிட இன்னும் சிறிது நேரம் எனக்கு அனுமதி கொடும். சந்தோஷம் என்பது எனக்குள் இனி பிளவுபட்டதொரு பூமிக்குள் மறைந்ததொரு பதார்த்தமே. நான் இப்பொழுது எப்படி இருக்கிறேனோ அப்படியே எனது மீதி வாழ்நாட்களும் கழிதல் வேண்டும். சந்தோஷம், ஆனந்தம், ஏகபோகம் ஆகிய இவைகளுக்கும் எனக்கும் இனி வெகுதூரமே. கடைசியாகப் பாவியேன் கொடுக்கும் இந்த ஒரு முத்தத்தையாவது ஏற்றுக்கொள்வீர்களா?' என்று சொல்லிக்கொண்டே ராமநாதனுக்கு ஒரு முத்தத்தைக் கொடுத்தாள். ராமநாதன் மௌனமாக அதைத்திருப்பிக் கொடுத்துவிட்டான். மாலை நேரம். அதற்குள் சூரியன் தன் தினசரி வேலையை முடித்துக்கொண்டு மறைந்து விட்டான் எங்கும் இருள் சூழ்ந்துவிட்டதால் அவர்கள் இருவரும் அந் நிலையில் மேலும் எவ்வளவு நேரம் இருந்தார்களென்று புலப்படவில்லை.

* * *

ராமநாதன் சீனியர் இண்டர் மீடியட்டில் வாசித்துக்கொண்டிருந்த ஒரு உயர்தர கலாசாலை மாணவன். ஸ்ரீரங்கத்திலுள்ள அட்வொகேட் ஆனந்த சகாயருடைய குமாரன். இந்திராவின் தகப்பனார் ஸ்ரீரங்கத்திலேயே ஒரு சிறந்த தனவந்தர். முதலியார் மாசிலாமணி என்றால் அவ்வூரிலுள்ள வியாபாரிகள் யாவருக்குமே தெரியும். மாசிலாமணி தம் பெயருக்கேற்ப மாசிலாமணியாகவே திகழ்ந்தாராயினும் வைதீகப்பேய் அவரையும் விட்டபாடில்லை. உண்மைக் காதலைப் போற்றும் உத்தமர்தான் அவர். இருந்தும், என்ன? வைதீகத்தினிடத்தில் இவர் ஆற்றல் பயனற்றதாகிவிட்டது. இந்திரா ராமநாதனை நேசிக்கிறாள் என்று பலமுறை ஜாடையாகவும் நேராகவும் அறிந்திருந்தாராயினும் மாசிலாமணி, இருவருடைய ஜாதகங்களும் பொருந்தவில்லை என்று கேட்டவுடனேயே அவ்விருவரையும் தம்பதிகளாக்கும் யோசனையைக் கைவிட்டு விட்டார். ராமநாதன் இந்திராவை எவ்விதம் காதலிக்க நேர்ந்தது என்ற விஷயம் இன்னும் எமக்கு மர்மமாகவே இருக்கிறது. இவ்விதம் பொங்கிப் பாய்ந்துகொண்டிருந்த இவர்களது காதல் நீரோட்டத்தில் 'ஜாதகம்' என்னும் முட்டுக்கட்டைவிழுந்து நீர்ப்போக்கைத் தடுத்த பின்னர்தான் நாம் முன் சொல்லியபடி இந்திராவும் ராமநாதனும் அன்று

மாலை காவிரியின் கீழ்க் கரையில் ஜன நடமாட்டம் அற்ற ஒரு இடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

* * *

ஏழு வருடங்கள் கண் காணாது ஓடி மறைந்தன. அதற்குள் நடந்து போன காரியங்கள் மிகச் சொற்பமேயாயினும் மிக முக்கியமானவைகள். நாம் முன்பு கூறியபடி ராமநாதனும் இந்திராவும் சந்தித்த ஒன்பதாமாதம் இந்திரா லக்ஷ்மீநாராயணன் என்னும் ஒருவனுக்கு மனைவியானாள்.—இல்லை; மனைவியாக்கப்பட்டாள். இருவருடைய ஜாதகமும் பொருந்தியிருந்ததென்று நாம் சொல்லத் தேவையில்லை. கலியாணம் ஆன அன்றுதொட்டு இந்திரா என்னமோ ஒரு நடைப்பிணமாகத்தான் விளங்கி வந்தாள். லக்ஷ்மீ நாராயணன் உண்மையில் நற்குணமுள்ள ஒரு அழகிய யுவகன்தான். இந்திரா ராமநாதனை நேசித்திருக்காவிட்டால் லக்ஷ்மீநாராயணனைத்தான் நேசித்திருப்பாள் என்று நாம் அவ்வளவு உறுதியாகக் கூறிவிடலாம். ஆனால் இந்திராவால் தற்போதிருக்கும் நிலைமையில் லக்ஷ்மீநாராயணன்பால் அன்பு செலுத்த இயலவில்லையே. எப்பொழுது இருவர் மனமும் ஒத்து வரவில்லையோ அப்பொழுதே அவர்களது வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் என்று நாம் சொல்லத் தேவையில்லை. இந்திராவின் நிலைமை நாட்கள் செல்லச் செல்ல மிக்க கேடுகெட்டதாகி விட்டது. கலியாணமாகி ஒரு வருடம் ஆவதற்குள்ளேயே இந்திரா விதவையாகிவிட்டாள். இப்பொழுது இந்திராவின் புகலிடம் தன் தந்தைவீடு ஒன்றே!

'ஜாதகத்தை இவ்வளவு பொருத்தம் பார்த்துக் கலியாணம் செய்தீர்களே அப்பா! அந்த ஜாதகம் நான் விதவையாகி விடுவேன் என்று மாத்திரம் சொல்லவில்லையா?' என்று இந்திரா கேள்விகேட்கும் பொழுதெல்லாம் அவைகளுக்குப் பதிலாக அவள் தந்தையார் மௌனத்துடன் இரண்டு துளி கண்ணீர் சிந்துவதை விடுத்து வேறொன்றையும் செய்ய இயலாதவராக இருந்தார்.

இந்திராவுக்குக் கலியாணமான ஆறுமாதம் அனந்த சகாயர் சென்னையில் குடியேறிவிட்டார். ராமநாதனும் அங்கு வைத்திய கலாசாலையில் படித்து எம். பி., பி. எஸ். டாக்டராகத் தேர்ந்தான். அவன் டாக்டரான மறு வருடத்திலேயே பெரும் புகழும் பெற்று விட்டான். ராமநாதன் தனது பெருத்த அலுவல்களிடையேயும் பல ஊர்களுக்கு அடிக்கடி பிரயாணம் செய்வதைப் பெரு வழக்கமாகக் கொண்டிருந்தான். அநேக நாட்கள் வரையில் இவன் இவ்விதம் அயலூர்களுக்குப் பிரயாணம் செய்வதன் காரணம் அவனுடைய ஆப்த நண்பர்களாகிய எங்களுக்கும் ஒரு மர்மமாகவே இருந்தது.

சென்ற ஜனவரி மாதம் மகாத்மா காந்தி அவர்கள் சென்னைக்கு விஜயம் செய்த பின்னர் வேறு தென்னிந்திய நாடுகளுக்குப் பிரயாணம் செய்ய ஆரம்பித்தபொழுது டாக்டர் ராமநாதனும் அவன் சகாக்களுடன் பிரயாணம் செய்ய ஆரம்பித்தான். ராமநாதன் கடைசியாக திருச்சியை யடைந்தான். காந்தி அவர்கள் அந்நாட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பின்னரும் ராமநாதன் தன்னுடைய சொந்த ஊராகிய திருச்சியை (ஸ்ரீரங்கத்தை) விட்டுப் பிரிய மனமில்லாது அவ்வூரிலேயே இரண்டொரு நாட்கள் தங்கிவிட்டான். இவன் அவ்வூரில் தங்கிய மறுநாள் மாலை பொது ஜனக்கூட்டம் ஒன்றில் 'தற்கால இந்தியா' என்னும் விஷயத்தைக் குறித்துப் பேச சந்தர்ப்பம் வாய்த்தது. அக்கூட்டத்தில் ராமநாதன் பேசியது :—



தற்போது இந்தியாயிருக்கும் நிலைமை—இந்தியர்கள் வலிவு குன்றி தாழ்நிலையை அடைந்திருப்பது—இவைகளுக்கெல்லாம் காரணமான பால்ய விவாகத்தின் கொடுமை—தற்போது இந்தியாவில் உள்ள விதவைகளின் பெருஎண்ணிக்கை—அதன் காரணம்—சமூக முன்னேற்றத்தின் பொருட்டு செய்யப்படும் உண்மையான,—பெண் மனமொப்பிச் செய்யப்படும்படியான விதவா விவாகங்கள்—அதன் பலன்கள் இந்தியாவின் கைத்தொழில்—கைராட்டை கதர்.........'

ஆகிய இவைகளேயாம். ராமநாதன் பேசிக்கொண்டிருந்த பொழுது சிறிது எவராயினும் சபையின் கீழ்ப்பக்கம் கவனித்திருப்பாராயின் கண்ணீர் தேங்கிய கண்களுடன் உட்கார்ந்திருக்கும் ஒரு பெண்மணியைக் கட்டாயம் கண்டிருப்பார்கள். அவளே ராமநாதனின் பிரசங்கத்தைக் கேட்டு அவனைப் பார்த்து விட்டுச் செல்லலாம் என வந்த விதவை இந்திரா.

* * * *

காலை நேரம். சூரியனும் கீழ்த்திசையில் தோன்றித் தன் துலாம்பரமான பொன்னிறக் கிரணங்களால் ஆற்றினூடே அடிக்கப்பட்டு வந்த தெள்ளிய காற்றில் அசைந்தாடும் ஆலமரத்தின் இலைகளைப் பொன் தகடுகளாகவும் வெள்ளிக் கட்டிகளாகவும் செய்து கொண்டிருக்கிறான். நாம் முதன் முதலில் கூறிய அதே ஆலமரத்தின் கீழ் அதே இருவர் ராமநாதனும் இந்திராவுமே இருக்கின்றனர். ஆலமரத்தைச் சுற்றி உயரமாகக் கட்டியுள்ள (வழிப்போக்கர்கள் உட்கார்ந்து இளைப்பாறுவதின் பொருட்டுக் கட்டியுள்ள மணல் திட்டின் மீது ராமநாதன் தன் கால்களைத் தொங்க விட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான். அவனுக்கு முன்னால் இந்திரா முன் சந்தித்துப் பிரிந்த பொழுது எந்த ஆடைகளை அணிந்திருந்தாளோ அதே கோலத்துடன் ஆனால் கொஞ்சம் இளைத்துப் போய் நின்றிருந்தாள்.

ராமநாதன், உன்னுடைய அடையாளமே எனக்கு முதலில் தெரியவில்லை. அப்படி நீ இளைத்துப் போயிருக்கிறாய். உனது குரலைக் கேட்டுத்தான் நீ என்று அறிந்து கொண்டேன். அதிருக்கட்டும். இவ்வளவு காலை நேரத்தில் இங்கு ஏன் வந்தாய்?' என்று கேட்டான். இந்திரா 'நீங்கள் எக்காரணத்தைக் கொண்டு இங்கு வந்தீர்களோ அதே காரணத்துடன்தான் நானும் வந்தேன். ஆனால் உண்மையில் தற்போது உம்மை வந்து காண என்னைத் தூண்டியது இதுதான். நேற்று நீங்கள் பொது ஜனக் கூட்டத்தில் பேசியதில் எனக்கொரு சந்தேகம் வந்திருக்கிறது. அதைக்கேட்க வேண்டுமென்றுதான் நீங்கள் இவ்விடம் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தவுடன் வந்தேன்' என்று ஏதோ ஒன்றைக் குறிப்பாகத் தன் மனத்துள் வைத்துக் கொண்டு சொன்னாள். ராமநாதன், 'அப்படி நான் சந்தேகம் உண்டாகும் விதமாக நேற்றுப் பேசவில்லையே! சரி எதற்கும் உன் சந்தேகத்தைச் சொல்' என்று கேட்டான். 'விதவா விவாகத்தைக் குறித்து அன்று அவ்வளவு பேசினீர்களே! உண்மையில் அப்பேர்க்கொத்த விவாகங்கள் நம் சமூகத்தை மேல் தூக்கிவிடும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?' என்று தன் சந்தேகத்தைக் கேட்டாள் இந்திரா. ராமநாதன் சிரித்துக்கொண்டே கட்டாயம் அதுதான் நம் சமூகத்தைச் சீர்திருத்தி உண்மை வலிமையை நமக்கு அளிக்கப் போகிறது என்பது எனது திடமான அபிப்பிராயம். தற்போது நம் தேசத்தில் உள்ள பெண்களில்

முக்கால் பாகம் விதவைகளாக இருக்கின்றனர். நம் தேசம் இருக்கும் நிலைமையில் விதவைகளாக இருக்கும் வரையில் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று எனக்குத் தெரியும். மேலும் மற்றொன்று நீ கவனிக்க வேண்டும். நான் விதவா விவாகம் என்று குறிப்பது அவ்விதவை மனமொப்பிச் செய்யப்படும் கல்யாணங்களையே! மற்றபடிக்கு மேல் நாட்டார்களைப் போலல்ல. பரந்த ஞானமுடைய பல பெரியோர்களது நோக்கமும் இதுதான். யௌவனத்தில் விதவையாகி விடுபவர்களையாவது கலியாணம் செய்ய.....' என்று சொல்லுகையில் இந்திரா இடை மறித்து 'அப்படியானால் நீங்கள் விதவா விவாகத்தைப் பூரணமாக ஆதரிக்கிறீர்களா?' என்று கேட்டாள் மறுபடியும்.

*ராமநாதன்:*—'சந்தேகமின்றி'

*இந்திரா:*—மிக்க சந்தோஷம். உமக்குக் கலியாணமாகவில்லை எனக் கேள்விப்பட்டேன். அந்நிலைமையில் நீங்கள் என் ஒரு விதவையை மணந்து கொண்டு உலகினர்க்கு ஒரு வழிகாட்டியாதல் கூடாது?

*ராமநாதன்:*—இக்கேள்விக்கு விடையளிக்க நான் அசக்தனாக இருக்கிறேன்.

*இந்திரா:*—அதைக் கேட்காதவள் போல், 'இந்திராவை நீங்கள் இன்னும் நேசிக்கிறீர்களா?' என்று கேட்டாள்.

ராமநாதன் முன் சொன்ன பதிலையே திருப்பி மறுமுறையும் கூறினான். இந்திரா 'உன்னால் நேசிக்கப்பட்ட இந்திரா - விதவையாகித் தனது பழைய அன்பனை அடைய விழைந்தால் அது சமயம் அவளைக் கலியாணம் செய்து கொள்ள உமக்கு ஏதாவது ஆட்சேபம் உண்டா?' என்று தன் குறிப்பை மறைத்துக்கொண்டு கேட்டாள். ராமநாதன் விஷயமறியாது 'நீ கேட்பது எனக்கு அர்த்தமாகவில்லை' என்றான். இந்திரா 'உம்மால் காதலிக்கப்பட்ட இந்திரா தற்போது ஒரு விதவை......என்று விஷயத்தை விளக்கினாள்.

இப்பொழுது இந்திரா பேசிக்கொண்டு வரும் நிலைமையில் நேயர்கள் இந்திராவின் நடத்தையில் சந்தேகம் கொள்ளுவது இயற்கையே! மேலும் நீங்கள் 'இந்திராவைப்போன்ற அவ்வளவு தைரியமான குணத்தை—தான் மணந்துகொள்ளப் போகும் புருடனிடத்திலேயே இப்படித் தனியாகப் போய்ப் பேசும் வல்லமையை, அல்லது அவளது சீர்கேடான நிலைமையை நம் இந்தியப் பெண்கள் இன்னும் அடையவில்லை' என்று நீங்கள் சொல்லலாகும். வாஸ்தவமே! ஆனால் இவைகளுக்கெல்லாம் சமாதானமாக நாம் 'காதல் எதையும் செய்ய வல்லது என்று கூறி பாரதியின் 'காதலின் புகழ்' என்ற பாட்டை ஞாபகப் படுத்திவிட்டு மேலே செல்ல வேண்டியதுதான். இந்திரா ராமநாதனது உண்மை நிலைமையை அறிந்த பின்னர்தான் அவனை அண்டி அவ்விதம் சொன்னாள். மேலும் இருவரது மனமும் காதலால் பிணைப்புண்டு ஒன்றுபட்டவைகள்.

* * *

இதனை நான் எனது நண்பனான ராமநாதனது அனுமதி பெற்றே வெளியிடுகிறேன். பெயர்கள் ஒரு சமயம் மாறி யிருக்கலாம். இப்பொழுது ராமநாதன் சேலத்தில் தன் மனைவி இந்திராவுடன் வசித்து வருகிறான்.


---

# இது நியாயமா?

[திரு. மே. ஜானகிராமன்]



வாசுதேவ முதலியார் ஒரு தனவந்தர். இவருடைய 48-வது வயதில் இவரது வாழ்க்கைத் துணைவி இவ் வுலகினின்றும் விடைபெற்றுக்கொண்டு சென்றாள். புருஷர்கள் எத்தனை கல்யாணம் வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்ற சுயநலப்பிரகாரம் இவர் இரண்டாவது கல்யாணம் செய்துகொண்டார். இவருக்கு மனைவியாய் அமைந்த 16 வயது நிரம்பப்பெறாத ராதாதேவி, தன் கணவனின் முதல்தாரத்து மகள் 25 வயதுள்ள அவள் நாயக





னிடம் கொஞ்சி விளையாடுவதைப் பார்த்து மனம் குமுறுவாள். எனக்கு அம்மாதிரி வாலிப கணவன் அமையவில்லையே என்று ஏக்கமடைவாள். அவ்விருவரும் மனமொத்த தம்பதிகளாய் டாக்கிக்கும், பீச்சுக்கும் செல்வதைப் பார்த்து, தானும் அப்படி தன் கணவனுடன் போகவேண்டும் என்று எண்ணங்கொள்வாள். ஆனால் தொப்பையும், தொந்தியும், பருத்த சரீரமும், தன் தந்தையைப்போலுள்ளவருமான அவ்வயோதிக கணவனுடன் செல்வதற்கு வெட்கப்பட்டாள் ராதாதேவி. இவள் இப்படி மனவேதனை யடையும்படி

அவள் தாய் தந்தையர்கள் தங்கள் மகளை 48 வயதான அவ்விளம் வாலிபருக்கு மணம் செய்வித்தது நியாயமா?

* * *

சீனிவாச ஐயங்கார், தாம் ஒரு தேசியவாதி என்று சொல்லிக் கொள்வார். இவர், 'ஏழை தொழிலாளர்களுக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் உதவிசெய்து அவர்கள் கஷ்டங்களை நீக்கவேண்டும். செல்வந்தர்கள் ஆதிக்கம் அடங்கவேண்டும். ஏழை மக்கள்மீது அன்பு செலுத்தி அவர்கள் முன்னேற்றமடையச் செய்யவேண்டும்' என்று மேடைப் பிரசங்கம் செய்வார். ஒருநாள் இவர் வீட்டிற்கு ஒரு ஏழைத்



தொழிலாளி வந்து நெடுநேரமாகக் காத்திருந்தான். இவர் அவனை விசாரித்து அனுப்பாமல் சிறிது நேரம் இருக்கச் சொன்னார். அச்சமயம் நாகரிக உடையில் ஒருவர் காரில் வந்திறங்கினார். உடனே சீனிவாச ஐயங்கார் ஓடோடியும் தெருவிற்கு வந்து அவருக்கு வந்தனம் செலுத்தி அவரை உள்ளே அழைத்துச் சென்றார். அவர் சென்ற பின் வெகு நேரமாக காத்துக்கொண்டிருந்த அத் தொழிலாளியிடம் அதிகாரத்துடன் பேசி அனுப்பி விட்டார். மேடைப் பிரசங்கம் செய்து புகழ் பெற்றுக் கொள்ளும் இவ்வய்யங்கார் தம் நடத்தையில் இப்படிச் செய்வது நியாயமா?

* * *

கோவிந்தசாமி நாயுடுவின் மனைவி ஒரு மகளையும் ஒரு மகனையும் விட்டு விட்டு இறந்து விட்டதினால், அவர் இரண்டாவது கலியாணம் செய்து கொண்டார். கோவிந்தசாமி நாயுடு தம் மக்களிடத்தில் அன்புள்ளவரா யிருந்தார். ஆனால், இரண்டாவது கல்யாணமான பின் அவர்கள் மீதிருந்த பிரியத்தை அவர் தம் இளையாள் வாங்கிக் கொண்டாள். கோவிந்தசாமி உலகத்திற்கொப்ப தன் இளையாள் சொல்கிறபடி செய்வார். ஏன் தம் மனைவிக்கு அடிமையாய் விட்டார் என்றே கூறலாம். நாயுடுவின் மனைவி தன் மூத்தாளின் குழந்தைகளைத் துன்புறுத்தி, அவர்களுக்குக் கடின வேலையிட்டு அவர்களைக் கஷ்டப்படுத்தி வந்தாள். இச்சங்கதியை அக் குழந்தைகள் தங்கள் தகப்பனாரிடம் கூறி அழுதால், அவர் மனைவி அந்த உடனே விஸ்வரூபத்துடன் தோன்றி, அவர்கள் மீது பழியைச் சுமத்தி, தன் நாயகனிடம் முறையிடுவாள். அம்பாள் வசத்தில் மயங்கியிருக்[illegible] தம் சுய அறிவை இழந்து, தமது குழந்தைகள் என்றும்



பாராமல் அப்பாலர்களை அடிப்பார். தகப்பன் இரண்டாவது கல்யாணம் செய்துகொண்டபின் தன் முதல்தாரத்து குழந்தைகளை இப்படித் துன்புறுத்துவது நியாயமாகத் தோன்றுகிறதா?

* * *

நாகரத்தினம்மாளுக்குப் புஷ்பாவதி ஏக புதல்வி. இந்த அம்மாள் தன் மகளை யாதொரு வேலையும் செய்யாதபடி செல்வமாக வளர்த்து அவளை ஒருவருக்குத் திருமணம் செய்து வைத்தாள். தன் மகள், அவள் மாமியார் வீட்டில் கஷ்டப்படாமலிருக்க ஒரு வேலைக்காரியை அவளுடன் அனுப்பி வைத்தாள். இந்த நாகரத்தினம்மாளுக்கு ஒரு மருமகளும் உண்டு. மருமகளை எல்லா வேலைகளையும் செய்யச் சொல்வாள். அவள் விடியற்காலையில் எழுந்திருக்காமற் போனால், அதட்டி



கண்டபடி பேசுவாள். மருமகள் தன் கணவனுடன் பேசப் போய் விட்டால் கோபித்துக் கொள்வாள். ஆனால் தன் மகள் அவள் கணவனுடன் எந்நேரம் பேசிக் கொண்டிருந்தாலும் சும்மா யிருப்பாள். விடியற்காலையில் தன் மகள் எழுந்து விட்டால், 'போய்ப் படுத்து தூங்கு போயேன். இன்னும் சூரியன் கூட உதிக்கவில்லை இதற்குள் எழுந்து விட்டாயே' என்பாள். நாகரத்தினம்மாள் தன் மகளிடமும், மருமகளிடமும் இவ்விதமாக நடந்து கொள்வது நியாயமா?

* * *

புராதன காலத்தில் இருந்த அரசர்களால் கட்டப்பெற்ற ஆலயங்களில் பூசாரி தொழில் செய்துவரும் பிராமணர்கள், தங்கள் பாட்டன் வீட்டு கோயில் என்று நினைத்துக்கொண்டு கோயிலில் சில வகுப்பாரைப் பிரவேசிக்க வொட்டாமல் செய்வதும், பிராமணர்களை மாத்திரம் விக்கிரகம் உள்ள மூலஸ்தானத்தில் பிரவேசிக்க அனுமதிப்பதும், மற்றவர்களை மூலஸ்தானத்திற்கு வெளியே சேவிக்கச் சொல்வதும், பிராமணர்களுக்கு மாத்திரம் பிரசாதம் கொடுப்பதும்,

திரைபோட்டு விடுவதும், மதியற்ற மாந்தர்கள் அவர்களுக்கு அடிமையாக அடங்கி நடப்பதும் நியாயமா? கடவுளுக்கு முன்பாக நாம் எல்லோரும் சமம் என்பதை உணராத அச்சுயநலப் பெருச்சாளிகள் இம்மாதிரி மக்களிடத்தில் நடந்து கொள்வது நீதியா? இப்படித்தான் செய்யவேண்டுமென்று சாஸ்திரம் கூறுகிறதா?

* * *

ரயில்களில் பிரயாணம் செய்பவர்களில் சிலர், முழு பெஞ்சி ஒன்றில் படுத்து நன்றாகக் காலை நீட்டிக்கொண்டு படுத்துக்கொள்கிறார்கள். இவர்களைப்போல பணத்தைக் கொடுத்து டிக்கெட் வாங்கின மற்ற பிரயாணிகள் வண்டியில் உட்கார இடமின்றி நின்றிருந்தாலும், தடியர்கள் மாதிரி படுத்துக்கொண்ட இவர்கள் நிற்கிறவர்களுக்கு உட்கார இடம் தரமாட்டார்கள். (ரயிலை தங்களுடையது என்று நினைத்துக் கொள்வார்களோ என்னமோ) யாராவது 'எழுந்து உட்காரும் ஐயா' என்று சொல்லிவிட்டால் போதும். அவர்கள்மீது சீறி விழும் ஜென்மங்களும் இருக்கின்றன. மற்றும் சிலர், வண்டியில் ஏற வருகிறவர்கள் கதவைத் திறக்காதபடி செய்து, 'வண்டியில் இடமில்லை. கடைசியில் போய் ஏறிக்கொள்' என்று மிரட்டுகிறார்கள். நம் இந்திய சகோதர மக்களிடத்திலே இவ்விதமாக மனுஷத் தன்மையின்றி அயோக்கியத்தனமாக நடந்துக்கொள்வது நியாயமா?

* * *

சடகோப முதலியாரின் புதல்வி பங்கஜம் மணமான மறுமாதமே தன் கணவனை இழந்தாள். அவள் தன் கணவன் இறந்த பிறகு ஆபரணங்களைக் களைந்து, நல்ல ஆடை உடுத்தாமல் வருத்தத்துடன் தன் மீதி வாழ்நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறாள். இவளது தந்தை தன் மருமகள் இறந்து விட்டதன் பொருட்டு தன் மகனுக்கு 2-வது கல்யாணம் செய்து வைத்தார். கணவனை யிழந்த தன் மகளுக்கு ஏன் அவர் 2-வது கல்யாணம் செய்து வைக்கக் கூடாது? மனைவியை இழந்தால் புருஷர்கள் 2-ம் தாரம் கல்யாணம் செய்து கொள்ளும்பொழுது, ஸ்திரீகள் தங்கள் கணவனிறந்தால் ஏன் 2-வது கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது? ஆண்களுக்கிருக்கும் இச்சை பெண்களுக்கு இல்லையா? ஆண்களுக்கு ஒரு நீதி பெண்களுக்கு ஒரு நீதியா? அவர்கள் வாழ்வை சீர் குலைப்பது நியாயமா? ஒழுங்கா? முறையா? தருமமா?

இம்மாதிரி எவ்வளவு வேண்டுமானாலும் எழுதிக் கொண்டே போகலாம். ஆனால், பேனா மேலே எழுத மாட்டாமல் சத்தியாக்கிரகம் செய்கிறது. அதனிஷ்டப்படி விட்டு விடுவோம். பாவம்! எத்தனை எழுத்துக்கள்தான் அதுவும் எழுதும். அதற்கு அதிக தொந்தரவு கொடுப்பது நியாயமாகுமா?

# ஆசை

[இளங்கோவன், மாயாதேவி]

வெள்ளை யுள்ளத் திரையினில் மாண்புறு
வேதம்பாடிய பூ மகள் நா மகள்
கள்ளக் கன்னியின் வேடத்தில் வந்தனள்.
கண்ணி லானந்தம் துள்ளிய காணா வாய்
சள்ளை தீர்ந்தது, சங்கடம் மாய்ந்தது,
சஞ்சலங்க ளழிந்தன மற் றினி,
மெள்ள மெள்ள அவளை யணைந்துமே
மேன்மை யுள்ளமும் மெய்யும் சிலிர்ப் புற (1)

உள்ளம் வேண்டுது உண்மையா மிவ்வுரை.
ஓதிமத்தன் உயர் தனிச் செல்வ மே!
கள்ளம், மாயம், கபடங்கள் யாவும்போய்
கருத்தில் மின்னல் பளீரென்று வீச வும்,
கிள்ளைபோல் மொழிக் கோமள வல்லியே!
கிளர்ந் தெழும் உனதின்ப வெள்ளத் தினை
அள்ளி யள்ளிக் குடிக்கவும், பார்மிசை
யாவரு மென்னை யேத்தி வணங்க வும் (2)

எண்ணம் பாயுது எந்தன் உளத்தினில்,
எழில்கொள் ஜோதி கதிர்விடு நற் றங்கக்
கிண்ணம் போன்ற இளமுலைக் கண்டுமே
கிறுக்க னாகினேன்; கேளடி என் னுரை
உண்ண உண்ணத் தெவிட்டா வமிர்தம்போல்,
உயிரும், உள்ளமும், யாவும் உவப் புற
வண்ணப் பாட்டும், கவிதையும் தந்து நீ
வானிற்புள் ளென வாழ்ந்திடச் செய்குவாய்.

இத்தகைய வாகவிகள் மோனை எதுகைகளைத் தேடி வருந்தாமல் அவைகள் தாமாகவே தேடி இவர்களை அடைகின்றன. என்னே! ஆச்சரியம் !! என்னே இவர்களின் கவிதா சக்தி !!! கவிதா சக்தி கருவி லமையப் பெற்றோர் இவர்களே. இத்தகையவர்களோடு வாகவியும் ஆசு கவியுமாகிய எனது ஆசிரியர் S. வேலாயுத செட்டியார் அவர்களின் கவிதா சக்தியையும் கூற விழைகின்றேன்.

எனது குருநாதராய இவர் திருச்சி ஜில்லா பெரம்பலூர் தாலூகா, மேட்டுப்பாளையம் என்ற கிராமத்தில் தற்போது உள்ளவர். இவரிடம் யான் 15 வயதில் தமிழ் கற்கும் மாணவனாக அமைந்தபோது இவர் அடிக்கடி கவிகள் பாடுவதைக் கண்டிருக்கிறேன். அவ்வப்போது பாடிய கவிகளையும் குறித்து வைத்திருக்கிறேன்.

அன்னார் சரித்திரம் மாணவர்களுக்கும் மற்றோருக்கும் ஊக்கத்தையும் பெரு முயற்சியையும், மகிழ்ச்சியையும் விளைவிக்கக் கூடியதாகலின், மற்றொரு சமயம் அதைப்பற்றி எழுதுவேன். இப்பொழுது இரண்டொரு சம்பவங்களைக் கூறி இக் கட்டுரையை முடிக்கின்றேன்.

அதாவது இவர் எடுத்துக் கொடுத்த பொருளை அமைத்து தட்டுத் தடங்கலின்றி கவிபாடுவா ரென்பது ஒரு வியப்பல்ல. ஒரு சமயம் யானும் இவரும் திருச்சி சென்று ஒரு வித்வானை (மதுரகவி ஆறுமுக தாஸ் என்பவரை)ச் சந்தித்தோம். அப்போது தாஸ் அவர்கள் பாரதத்தை அம்மானையில் பாடப்போவதாகவும் அதற்குக் கடவுள் துதியாக முருகனைப் பாட வேண்டி

மன்னன் அதிரூபன் வாழ்ந்த சரித மதை
நன்னயமாய்ச் செந்தமிழில் நான்பாட—

என்ற வரையிலும் பாடி இந்த வெண்பாவைத் தனிச் சொல் அமைத்து ஈற்றடி இரண்டிலும் முருகக் கடவுளை மயில்மீதேறி வள்ளி தெய்வானை சமேதராக வா என்று அழைப்பது போன்று முடியுங்கள் என வேண்டினர். வேண்டிய மறு நிமிடத்திலேயே

..................................................
..................................................மின்னலென
புள்ளி மயிலேறி புண்ணியனே எந்தனெதிர்
வள்ளிதெய் வானையுடன் வா'

என்று பாடி முடித்தார்.

இவ் வெண்பாவின் அழகையும் பொருளாழத்தையும் மோனை எதுகைகளின் சிறப்பையும் ஒழுகிசைச் செப்ப லோசையின் 'காள்' என்ற வாய்ப் பாட்டானின்ற நலத்தையும்



நோக்குங்கள். இவர் விரைவில் கவிபாடும் திறமையோடு பிறர் உள்ளக் கருத்தை வெள்ளிடை மலைபோல் தெள்ளிதி லுணர்ந்து உள்ளத்தைக் கொள்ளை கொண்டு அள்ளும் அருங்கவிகள் இசைக்கவல்ல அறிஞர் என்பது கண்கூடு. காணுதவைகளை விவரிப்பதைக் காட்டிலும் கண்டறிந்தவைகளைச் சொல்லுதல் நலமன்றோ?

இரண்டு மாதங்களுக்கு முன் என் ஆசிரியரும் யானும் பேசிக் கொண்டிருக்கையில் அகப் பொருட்டுறை அமைந்த ஒரு கவி இசைக்க வேண்டினேன். உடனே

'இழைபோல் மெலிந்திட்ட என்னுழை யேயிரங் காதிருந்தாள்
மழையுங் குமுறியே வாய்விட் டாற்றுமென் வார்குழலின்
றழையும் படியுரைத் தாளென்று நீயிங் காற்றுகின்றாய்
தழையும் புனத்திடை வாழுதி யோதனி மாங்குயிலே'

என்ற கவியை இரண்டொரு நிமிஷத்தில் இசைத்தார்.

'குயிலொடு கிளத்தல்' என்ற துறை யமைந்த இக் கட்டளைக் கலித்துறை அடியடி தோறும் ஐஞ்சீராகி முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாது கடையொரு சீரும் விளாங் காயாகி நேர் பதினாறு நிரைபதினேழு, என்று கூறிய இலக்கணத்திற் பிழையாது விரைவில் பாடியதைக் கண்டு பெருமகிழ் வெய்தினேன்.

இதில் குயிலே! தலைவி அல்ல குறிபிழைத்தாள் அதுவேயுமன்றி அவளை நினைந்து நினைந்து இழைபோல் மெலிந்திட்ட என் மீது சற்றும் இரக்கம் கொள்ளாது ஊடல்கொண்டுள்ளாள். மேகமும் அவளின் கூந்தலுக்குள்ள கருமையை நாம் பெறவில்லையே என்று ஓ வென்று பெருஞ் சப்தத்துடன் அரற்றும் படியான கூந்தலையுடைய தலைவி, இன்று என்னை அழைத்தாளென்று சொல்லுகிறாய். ஆகவே நீ எங்கள் நிலைமையை அறிந்திலைபோலும். ஆகவே நீ இந்தச் சோலையில் வாழ்வது உண்மையோ? அங்ஙனம் வாழுதியாயின் அடிக்கடி இந்தச் சோலையில் சந்திக்கும் எங்கள் மன நிலைமையை நீ உணர்வையே என்றது கருத்து.

இதில் 'மழையும் குமுறியே வாய்விட்டாற்று மென்வார் குழல்,' என்ற கூந்தலுக்குள்ள அடைமொழிச் சிறப்புமிக்க வியக்கற்பாலது.

இவ்வாறு சந்தர்ப்பத்திற் கேற்ற கவியும் எடுத்துக்கொடுத்த பொருளை அமைத்து அப்போதே கவிபாடும் ஆற்றலும் வாய்ந்தவர்களேவா கவிகளும், கவிபாடும் திறம் கருவிலமையப் பேற்றோருமாவர். இங்ஙனமன்றி,

'குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங் கில்லைக்
குறும்பி யளவாய்க்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்ப தற்கோ வில்லி யில்லை
இரண்டொன்றாய் முடிந்துதலை இறங்கப்போட்டு
வெட்டுதற்கோ கவி யொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாய்க் கவிதைதனை விரைந்துபாடி
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே'

என்றவாறே பலர் தாங்களும் வித்வான்கள், கவிகள் எனப் பெயர் தரித்து வெளிக்கிளம்பி விடுகின்றனர். என்னே இவரின் மதியீனம். பாட்டின் நுட்பத்தை ஆராயாவிடினும், எழுத்து வாசனையே தெரியா விடினும் தாங்களும் கவிகளெனக் கூறிக் கொள்ளுகின்றனர்.

ஆகவே நம் தமிழ் நாடு சிறந்த வரகவிகளாலும், இலக்கண இலக்கியங்கள் கற்ற உண்மைக் கவிகளாலும் சூழப்பெற்று சீரும் சிறப்பும் எய்த வேண்டி இறைவன் திருவருளை இறைஞ்சுவோமாக.

---

தகப்பனார்:—என்டாப்பா இப்பத்தானே சொக்காய் போட்டுக் கிண்டே. அதுக்குள்ளெ அழுக்காப் போச்சே!

காலமேதானே நீங்க பல் தேச்சியள் அதுக்குள்ளெ ஒங்க பல்லுலே ஏன் இவ்வளவு அழுக்கு வந்துட்டுது சொல்லுங்கோ! என்றான் கிருஷ்ணன்.

—டி. வி. எம். ராஜன்

மனைவி:—பார்த்தீர்களா! இட்லிப்பானையை நான் செல்லப் பாப்புக்கு இரவல் கொடுக்க, அவுங்க தங்கப் பாப்புக்குக் கொடுத்து இப்படி வச்சிருக்காங்க.

புருஷன்:—அதை என்னிடம் சொல்லி என்ன பண்றது? வேறு இரவல் கேட்கிறவர்கள் யாராவது வந்தால் அவர்களிடம் காட்டினால் நல்லது.

மனைவி:—வருகிறவர்களிடம் காட்டினால் அவர்கள் சுத்தம் பண்ணித் தருவார்களா?

புருஷன்:—அவர்கள் சுத்தம் பண்ணித் தராவிட்டாலும், நாம் இரவல் வாங்கிப்போய் இப்படி அரைகுறையாய்ச் சுத்தம் பண்ணிக் கொண்டு வந்து கொடுத்தால் நம்மைப் பற்றியும் இப்படித்தானே மற்றவர்களிடம் சொல்லி மானத்தைக் கெடுப்பார்கள் என்று சுத்த மாகக் கொண்டுவந்து கொடுப்பார்களல்லவா!

மனைவி:—ஆமா, அது சரி. நல்ல யோசனைதான்.

—பி. பரிமணப்பல்லவராயர்

முந்துங்கள்! முந்துங்கள்!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

எழுதிய

## அனுபவ வைத்திய நூல்

இரண்டு பாகங்களும் உங்களிடம் இருக்கின்றனவா? இல்லையேல் உடனே எழுதி வரவழைத்து வைத்துக் கொள்ளுங்கள். இப் புத்தகங்கள் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல்கள் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவே யிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூல்களின் உதவியைக் கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூல்களில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலப மான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அனுபவ வைத்திய நூலின் இரண்டு பாகங்களையும் வைத்துக் கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்தியராகலா மென்பது திண்ணம். சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின் றன. முந்துங்கள்.

| | | |
|---|---|---|
| முதல் பாகம் விலை ரூபா | | 1—0—0 |
| இரண்டாம் பாகம் | ,, | 1—0—0 |
| இரண்டு பாகங்களும் சேர்ந்து | ,, | 1–12—0 |

தபால் சார்ஜ் வேறு

---

சிறந்த வரலாறு உயர்ந்த கருத்துகள்

## 'லெனின்

லெனினது வாழ்க்கை, தோற்றம், செயல், குணம் முதலிய விவரங்கள் அனைத்தையும் இந் நூலில் பாக்கக் காணலாம். அவரது திருவுருவப் படமும் இதில் சேர்க்கப் பட்டுள்ளது. கிளேஸ் காகிதம் 36 பக்கம் விலை அணா 2.

வேண்டுவோர் 2½ அணா தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# காங்க்ரீன்

என்னும்

# இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரி களிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (சைனஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். • ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப் பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர் களுக்கும் டாக்டர் S. ரங்காச்சாரியவர்களுக்கும் கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும் ராம ஐயங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்க ளுக்கும் வற்புறுத்தி மறு முறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

இம்மருந்து சேத்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளை நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். மூல வியாதிக்கு மேல் பூசினால் இரணம் ஆறிவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

சென்னை கந்தப்பமுதலித் தெரு, நெ. 21, P. சோமசுந்திர செட்டியார் தெரிவிப்பது:—நான் என் தாயாருக்கு ஏற்பட்டிருந்த



ராஜகட்டிக்காக டாக்டர் மல்லய்யாவிடமும், ரங்காசாரியாரிடமும் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலும் காட்டி குணமடையாமல் சாகும் நிலையில் இருந்தபோது துரைசாமி ஐயங்கார் சொல்லியபடி தங்களிடம் வந்து மருந்து கேட்டேன். தாங்கள் கொடுத்த இரண சஞ்சீவியால் முள்ளந்தண்டிலும் மார்பிலும் வயிற்றிலும் இருந்த கட்டிகள் சுகமாய் விட்டது. பிறகு இன்பசாரம் சாப்பிட்டதில் இரத்தம் விருத்தி யடைந்தது. நீரில் சர்க்கரை அதிகமாய் இருந்ததும் மறைந்து விட்டது. 12—12—33.

---

தே. வ. இ. சோமசுந்திரம் செட்டியார், கல்லல். தெரிவிப்பது :—

எனக்கு முதுகில் ஏற்பட்டிருந்த ராஜ கட்டிகளை ஒரு தரம் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து ஒரு வருடமாய் ஆராமல் நீர் வந்துக்கொண்டே இருந்ததும் தவிர மேல்கொண்டு பல கட்டிகளும் முதுகு பூராவும் சல்லடைக் கண்கள் போல் உண்டாய் விட்டது. பாதை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட் டிருக்கும் சமயத்தில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கல்லல் ஆ. மு. ஆ. வீட்டுக்கு வந்தபோது காண்பித்தேன். அவர் பட்டணம் வந்தால் பூரணமாய் குணப்படுத்தலாம் என்று சொல்லி இரண சஞ்சீவியைப் போடக் கொடுத்தார் சொஞ்சம் வலி குறைவா யிருந்தது அதுசமயம் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் அவர்கள் இந்த கேசை உங்களால் குணப்படுத்த முடியுமானால் பட்டணம் அனுப்பலாம் இல்லாவிடில் திருப்பத்தூரிலேயே பார்க்கலாம் என் மகன் இந்த வியாதியால் இறந்து போனான் என்று சொன்னதைக் கேட்ட பின் உறுதி சொன்னதின் மேல் நான் பட்டணம் வந்து ஒரு மாதம் மறுந்தை போட்டதில் சகல கட்டிகளும் ஆச்சரியமான வகையில் இரண சஞ்சீவியால் குணமாய் விட்டது என்னிடம் ஒரு டஜன் இரண சஞ்சீவியை வைத்துக் கொண்டு ஏழைகளுக்கு கொடுத்து சுகப்படுத்தி வருகிறேன். இரண சஞ்சீவியை ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பாக வைத்திருப்பது அவசியம். 10—9—33.

குறிப்பு:—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டி களும குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் சில மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

# இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசி யின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பிடிக்கப்பட் டிருந்தாலும்,

# இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்



புத்திர உற்பத்தியை அளிக்கும்.

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வர வழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது ஒள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையயும் பூர்த்தி



செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தை யில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப் போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

### இன்பசார மாத்திரையைப்பற்றிய
### சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

## குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ண அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

அன்பார்ந்த டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

இதுவரையிலும் 6 புட்டி இன்பசார மாத்திரையை என் மனைவிக்குக் கொடுத்துள்ளேன். அதனால் நான் எதிர் பார்க்காத வண்ணம் குணம் கண்டிருக்கிறேன். இரத்த விருத்தியும் நல்ல பசியும் எடுக்கின்றது. என் மனைவி பிழைத்தது ஆச்சரியமே !

வேறொரு பெண்மணிக்கு இதைக் கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு இரத்தமில்லாமல் வெளுத்திருந்த உடம்பு இப்போது இரத்தம் பரவிவிட்டது. இன்னும் இரண்டு புட்டி வி. பி. யில் அனுப்பவும்.

இப்படிக்கு

28—4—33, காஞ்சிபுரம். Dr. T. N. நடராஜன். L. M. P.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

# தைலாமிர்தம்



இத்தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலாண உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் திட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

5 பலம் கொண்ட டின் ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

# காஸ்டோலின்

(இது சர்வ படையையும் சம்மரிக்கும்)



சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், துடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானாபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையைவைத்து நமை நீங்க சொறிந்துக் கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்குக் கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்துகொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

வேண்டுவோர் 6 அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Rangoon,
Dated 24th August 1933

Dear Doctor

I have the pleasure to inform you that your GASTOLINE has got a very good effect in curing all kinds of skin diseases as the stock previously recieved by V. P. P. is nearly finished, and there is a good demand for it, I request you to send ½ dozen bottles by earliest V. P. P. & oblige.

Thanking you in anticipation, yours faithfully
E. K. Panchanatham,
c/o The Rangoon Electric Tramway & Supply Co. Ltd.
Merchant Street, Rangoon.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

# M. A. Maricayan & Co.

AYURVEDA VAITHIYA SALAI

PORTO - NOVO P. O., S. A. DISTRICT, INDIA

## அறிவுடைய நண்பர்கட்கோர் அன்பான விண்ணப்பம்.

இழந்துபோன பலத்தை ஒரே வேளை லேகியம் சாப்பிட ஒரு மணி நேரத்தில் கொடுக்கும். துரையே கவனியுங்கள்.

## மெடல் பெற்ற ஊர்க் குருவி சத்தின் லேகியம்

இந்த லேகிய பாகம் மற்றோர் செய்து கொடுத்தால் ரூபா 2000 இனாம்



வெண்பா

ஊர்க்குருவி சத்தெடுத்து உன்னதமாய் செய்த இந்தச்
சீர்கொண்ட லேகியத்தைத் தின்றவர்கள்-பேர்கொண்ட
சிங்கம்போல் வீரஞ் சிறந்தாண்மை தத்துவராய்
மங்கையுடன் வாழ்வார் மகிழ்ந்து.

இந்த லேகியத்தை ஒவ்வொரு புருஷர்களும் பரீக்ஷித்து சந்தோஷமடைவீர்களாக. தத்தம் துர்ச் செயலால் ஜீவரெத்தினமாகிய இந்திரியத்திற்கு ஏற்பட்டிருக்கும் கெடுதிகளை நீக்குவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிது. இந்திரிய நஷ்டம் இந்திரிய நீப்பு சீக்கிர ஸ்கலிதம் நித்திரை ஸ்கலிதம் எழுவகை தாதுக்களின் பலஹீனம் அஸ்தி வெட்டைச் சூடு நரம்பு தளர்ச்சி சதா இடுப்பு வலி மலச்சிக்கல் பசி மந்தம் பித்தாதிக்க உஷ்ண வாய்வு கிருமிரோகம் சூர் நீர் வியாதிகள் தேகத்தில் ஓடித்திரியும் பலவித வாய்வு ரோகம் பாரிச வாய்வு நெஞ்சுவலி விரை வாதம் கைகால் அசதி மயக்கம் மறதி முதலியன நிவர்த்தியாகும். சிங்க வீரிய ஆண் தத்துவத்தை யுண்டாக்கி இந்திரியத்தை மணிபோல் கட்டிப் போக இன்பத்தைக் கொடுக்கும். மருந்து உபயோகிக்கும் விபர நோட்டீஸ் மருந்துடன் அனுப்பப்படும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 40 நாள் 80 வேளை 16 பலம் டப்பி 1-க்கு ரூ. | 12 | 0 | 0 | வி. பி. |
| 20 நாள் 40 வேளை 8 பலம் டப்பி 1-க்கு ரூ. | 6 | 0 | 0 | |
| 12 நாள் 24 வேளை 5 பலம் டப்பி 1-க்கு ரூ. | 3 | 8 | 0 | செலவு |
| 6 நாள் 12 வேளை 2 பலம் டப்பி 1-க்கு ரூ. | 1 | 4 | 0 | |
| 3 நாள் 6 வேளை 1 பலம் டப்பி 1-க்கு ரூ. | 0 | 10 | 0 | வேறு. |

நெட்டால், பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பரா முதலிய பிரதேச வாசகர்கள் மருந்தின் கிரயமும் தபால் சார்ஜ் ரூ. 2—8—0 யும் சேர்த்து முன் பணம் அனுப்பி மருந்து பெறவேண்டும். டை ஊரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதுங் கடிதங்களை அங்கீகரிக்கப்பட மாட்டாது. விலாசம் தெளிவாய் எழுதவும். வியாபாரிகளுக்கு 100-க்கு ரூ. 10 வீதம் கமிஷன் கொடுக்கப்படும். பல ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. ஆர்டர் செய்யும்போது இந்த பேப்பரில் கண்டதாக எழுதவும்.

விலாசம்:— M. A. மரைக்காயன் அண்டு கம்பெனி,
ஆயுர்வேத வைத்தியசாலை, பறங்கிப்பேட்டை, (S. A.)

எமது கிட்டச்சேரி சோல் ஏஜண்டு:—
A. M. O. முகமது யூசுபு பிரதர்ஸ்,
ஜவுளி அண்டு ஜெனரல் மெர்ச்சண்ட், கடைவீதி,
கிட்டச்சேரி P. O., தஞ்சாவூர் ஜில்லா.

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு | ரூ 1—0—0 |
| | பிநேங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| | ஜீவிய சந்தா | 20—0—0 |
| | தனிப் பிரதி விலை | 0—1—0 |
| | மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது | 0—2—0 |

### மாதிரி சஞ்சிகை இனாம்.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

ஒவ்வோரு ஆங்கில மாதம் 15-ஆம் தேதியிலும் வெளிவரும்.

## விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| உட்பக்கம் ஒன்றுக்கு | | 1-மாதத்திற்கு | ரூ. 15—0—0 |
| ,, | அரைப் பக்கத்திற்கு | ,, | 8—0—0 |
| ,, | கால் பக்கத்திற்கு | ,, | 5—0—0 |
| கவர் | 3-வது பக்கத்திற்கு | ,, | 20—0—0 |
| ,, | 4 ,, | ,, | 25—0—0 |

இதர விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,

'தமிழரசு' ஆபீஸ்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

---

வெளி வந்து விட்டது ! வெளி வந்து விட்டது !!

# தாசிகளும் தாசிகாந்தர்களும்

### (ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப்புலவர் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இதன் முன் பாகத்தைச் சென்ற வருட 'தமிழரசு' இதழ்களில் தொடர்ச்சியாகப் படித்த நேயர்கள் நாள்தோறும் இப் புத்தகத்திற்கு ஆடர் செய்துகொண்டே இருக்கிறார்கள். இந் நூலைச் சில பக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும் படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை

எட்டணா தான்

சொற்பப் பிரதிகளே அச்சிட்டிருப்பதால் முந்திக் கொள்ளுங்கள்.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.